கவனிக்க.- (i) 2019.01.11 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி IV (ஆ) பிரசுரிக்கப்படவில்லை.
(ii) இந்த வர்த்தமானியின் பகுதி IV இல் 2019 ஆம் ஆண்டின் பதுளை மாவட்ட நீதாசன வலயத்துக்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றன.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2107 - 2019 ජනවාරි මස 18 වැනි සිකුරාදා - 2019.01.18

*2107 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 78 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 108 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 114 |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, சனவரி மாதம் 8 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, சனவரி மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

77 - 81487 - 5403(2019/01)

# பதவிகள் - வெற்றிடம்

## மெததும்பர பிரதேச சபை

### வாகன ஓட்டுநர் தரம் III இன் திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு

மெததும்பர பிரதேச சபையில் நிலவும் வாகன ஓட்டுநர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கெனக் கீழே தரப்படும் தகைமைகளைக் கொண்டுள்ள மெத தும்பர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **வெற்றிடப் பதவி** : **வாகன ஓட்டுநர்**

**வெற்றிடங்கள் எண்ணிக்கை** : **02**

**சேவை வகுதி** : **ஆரம்பத்தரம் (தேர்ச்சியுள்ள)**

**ஆட்சேர்ப்புத் தரம்** : III

**பதவியின் தன்மை** : இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. ஓய்வூதியம் தொடர்பில் அரசாங்கம் காலத்துக்குக் காலம் விதிக்கும் நியமங்களுக்கு உட்படும்.

**சம்பள அளவுத் திட்டம்** : பொ.நி.சு. 03/2016, PL01- 2016 இற்கமைய மத்திய மாகாண அரச சேவையின் இந்தப் பதவிக்கான சம்பளத் திட்டம்:
ரூபா 25,790.00-10X270-10X300 -10X330 -12X350 - ரூபா 38,990.00
(மேற்குறித்த சுற்றறிக்கையின் அட்டவணை 11 இற்கமைய 2019.01.01 இலுள்ள சம்பளம் ரூபா 23,126.00 ஆகும். இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய எதிர்காலச் சம்பளம் வழங்கப்படும்)

02. **திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்**

**கல்வித் தகைமைகள்** : இரு தடைவைகளுக்கு மேற்படாது கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர) பரீட்சையில் குறைந்தது 02 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அவற்றுள் 05 பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**தொழிற் தகைமைகள்** : நிகர எடை 34 அந்தருக்கு மேற்பட்ட மேட்டார் வாகன கனரக ட்ரேலர் மற்றும் 32 பயணிகளுக்கு மேற்படாத பேருந்து வண்டி ஓட்டுவதற்கான ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல்.
குறித்த சான்றிதழ் ஆட்சேர்ப்புத் தினத்துக்குக் குறைந்தது 03 வருடங்களுக்கு முன்னர் மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் வழங்கப்பட்ட ‘A’ அல்லது ‘D’ தரத்துக்கான சாரதி அனுமதிப்பத்திரமாக இருத்தல் வேண்டும்.

**அனுபவம்** : சாரதி அனுமதிப்பத்திரம் பெற்ற பின்னர் சாரதி ஒருவராகக் குறைந்தது 03 வருட அனுபவம் பெற்றிருத்தல். சான்றிதழ்கள் மூலம் அதனை நிரூபித்தல் வேண்டும்.

**உடற் தகைமைகள்** : ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பகல் மற்றும் இராக் காலங்களில் சேவையாற்றக் கூடிய உடல் மற்றும் உளத் தகுதியைக் கொண்டிருப்பதுடன் சிறந்த கண் பார்வையையும் பெற்றிருத்தல் வேண்டும்.

குறைந்தது 05 அடி 2 1/2 அங்குல உயரம் கொண்டிருத்தல் வேண்டும்.

**ஏனைய தகைமைகள்** :
(i) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) மெத தும்பர பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்துக்குள் விண்ணப்பதாரி 03 வருடங்களுக்குக் குறையாத நிரந்தர வதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டால் வாக்காளர் பதிவேடு அல்லது பிரதேச செயலாளர் உறுதிப்படுத்தலுடனான கிராம அலுவலர் வழங்கிய சான்றிதழ் மூலம் வதிவிடத்தை நிரூபித்தல் வேண்டும்.
(iii) வீதிப் போக்குவரத்துச் சட்டம் பற்றிய சிறந்த அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.
(iv) ஆட்சேர்ப்புக்கான அனைத்து தகைமைகளையும் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

03. **வயதெல்லை** : விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். இந்தப் பிரதேச சபையில் பணியாற்றுவோர் தொடர்பில் உச்ச வயதெல்லை பொருந்தாது.

04. **ஆட்சேர்ப்பு முறை** :

**திறந்த ஆட்சேர்ப்பு** : எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின்படி அதிகூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகளிடமிருந்து தொழிற் சோதனையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் தேவையான அனைத்துத் தகைமைகளையும் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடையே அதிகூடிய புள்ளிகளைப் பெறுவோரது தேர்ச்சி ஒழுங்கின்படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

**வரையறுக்கப்பட்ட ஆட்சேர்ப்பு** : தற்போது இந்தச் சபையில் பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ள பணியாளர்களுக்குப் பொருந்தும்.

கல்வி, தொழில் மற்றும் பொதுத் தகைமைகளுடன் உடல் மற்றும் உளத் தகைமைகளைப் பரிசீலிக்கும் கட்டமைப்பான நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளின் அடிப்படையில் தகுதி பெறுவோர் மோட்டார் வாகனப் பரிசோதகரால் நடத்தப்படும் செய்முறைத் தொழிற் பரிசோதனையிலும் தகைமை பெறுதல் வேண்டும்.

05. **ஆட்சேர்ப்பு நடைமுறை :**

(i) எழுத்துப் பரீட்சை பின்வரும் பாடத்திட்டத்துக்கு அமைவாக நடத்தப்படும்.

| வினாப்பத்திரம் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | மொத்தப் புள்ளிகள் பெறுவதற்கெனத் தேவையான புள்ளி அளவு |
|---|---|---|---|
| 01. வீதிப் போக்குவரத்துச் சட்டம் மற்றும் மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவு | 01 மணி நேரம் | 100 | 40 % |
| 02. மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவு | 01 மணி நேரம் | 100 | 40 % |

(ii) எழுத்துப் பரீட்சையில் மொத்தப் புள்ளியாக 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள் மட்டுமே செயன்முறைத் தேர்வுக்குழுவினர் நடத்தும் வாகனம் ஓட்டும் தேர்ச்சியை அளவிடுவதற்கான தொழில்சார் தேர்வுக்குத் தோற்றுதல் வேண்டும். தேவையான அனைத்துத் தகைமைகளையும் பரிசோதிக்கப்பட்டோரிடையே தேர்ச்சி ஒழுங்கின்படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். இதற்கென வழங்கப்படும் உயர்மட்டப் புள்ளி 100)

(iii) தேவையான அனைத்துத் தகைமைகளையும் பரிசீலித்த பின்னர் அதிகூடிய புள்ளிகளைப் பெறுவோரிடையே தேர்ச்சி அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

06. **சேவை நிபந்தனைகள் :**

(i) அநாதைகள் /விதவைகள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(ii) தெரிவுசெய்யப்படுவோர் நியமனத் திகதியிலிருந்து 3 வருடகாலத் தகுதிகாண் சேவைக் காலத்துக்கு உட்படுவர். அக்காலத்திற்குள் சேவை திருப்திகரமானதாக இல்லாதிருப்பின், பதவியில் நிரந்தரமாக்கப்படாது சேவை முடிவுக்குக் கொண்டுவரப்படும்.

(iii) உரிய நியமனங்கள் அரசகரும மொழிக் கொள்கைகள் செயற்படுத்துவது தொடர்பில் பொது நிருவாகச் சுற்றறிக்கைகளது ஏற்பாடுகளுக்கு உட்படும்.

(iv) ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் மேலதிகமாக இலங்கைத் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள், மாகாண சபையின் நிதிப் பிரமாணங்கள், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணையகம் மற்றும் மெத தும்பர பிரதேச சபை காலத்துக்குக் காலம் விதிக்கும் கட்டளைகளுக்கும், நியமங்களுக்கும் அமைய செயற்படுவதற்கு அனைத்துப் பணியாளர்களும் உட்படுதல் வேண்டும்.

(v) நியமனம் பெற்ற ஒரு மாத காலத்துக்குள் உரிய தகைமைகளைக் கொண்டுள்ள மருத்துவரால் நடத்தப்படும் பரிசோதனைக்கு உட்படுதல் வேண்டும். குறித்த பரிசோதனையில் உடற்தகைமை பொருத்தமற்றது எனக் காணப்பட்டால் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

07. **விண்ணப்பிக்கும் தொடரொழுங்கு :**

(i) இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2019.02.15 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கும் வண்ணம் "செயலாளர் மெத தும்பர பிரதேச சபை, தெல்தெனிய" என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

(ii) விண்ணப்பங்களைக் கொண்டுள்ள கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iii) உரிய திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் பூரணமற்ற விண்ணப்பங்களும் உரிய தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் அற்றுப்போகும் விண்ணப்பங்கள் தொடர்பில் இந்தப் பிரதேச சபை வகை கூறாது.

(iv) விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கென உரிய ஆவணங்களின் போட்டோ பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டால் அவற்றின் முதற் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

08. **விண்ணப்பிக்க வேண்டிய முறை :**

(i) தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைவாக A4 தாளின் இருபக்கங்களிலும் இலக்கம் 01 - 09 வரை முதற் பக்கத்திலும், இலக்கம் 10 - 14 வரை இரண்டாம் பக்கத்திலும் எஞ்சிய பகுதிகள் மூன்றாவது பக்கத்திலும் அமையும் வண்ணம் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தட்டச்சில் அல்லது அழகிய கையெழுத்தில் தயாரித்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் கையெழுத்தை அரச பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான் சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற அலுவலர், பொலிஸ் சேவையில் உயர் பதவி வகிப்போர் அல்லது ரூபா. 240,360.00 அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளத்தை கொண்ட அரச அலுவலர் ஒருவர் ஆகியோருள் ஒருவர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பதாரிகள் எவரேனும் தகைமைகள் இல்லாதோர் என நியமனத்துக்கு முன்னர் அல்லது நியமனத்தின் பின்னர் அல்லது எந்நேரத்திலும் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் தகுதியற்றவர் ஆவார் அல்லது அவரது நியமனம் இரத்துச் செய்யப்படும். அவ்வாறு வேண்டுமென்றே பொய்யான தகவல்களை முன்வைத்தமையோ அல்லது சரியான தகவல்களை வேண்டுமென்றே மறைத்தமையோ கண்டுபிடிக்கப்பட்டால் சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்படுவார்.

(iv) தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றுவோர் தமது விண்ணப்பங்களைத் தாபனத் தலைவர் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

09. இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படும் காலத்தில் ஆட்சேர்ப்பைத் தாமதிக்கச் செய்யும், மாற்றியமைக்கும், அல்லது இரத்துச் செய்யும் அனைத்து அதிகாரமும் மெத தும்பர பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

10. மெத தும்பர பிரதேச சபையின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கென 2017.09.08 ஆந் திகதி கொண்ட 2036 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் IV (ஆ) பிரிவில் வெளியிடப்பட்ட அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

சுமனா விஜேரத்ன,
செயலாளர்,
மெத தும்பர பிரதேச சபை.

மெத தும்பர பிரதேச சபை அலுவலகம்
தெல்தெனிய.
2018, திசெம்பர் 31.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மெததும்பர பிரதேச சபையின் .................................... தரம் III இன் ஆட்சேர்ப்பு**

**உரிய கூட்டில் √ அடையாளமிடுக**

1. (i) விண்ணப்பதாரியின்பெயர் : (முதலெழுத்துக்களுடன்).................................................................

   (ii) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் : ..........................................................................

2. நிரந்தர முகவரி : ..................................................................................................................

3. தொலைபேசி இலக்கம் : .........................................................................................................

4. பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

5. விண்ணப்பிக்கும் இறுதித் திகதியன்று வயது : வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

6. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

7. நீர் இலங்கை பிரசையா? வம்சாவளியினாலா? பதிவினாலா ?

   ஆம் ☐ இல்லை ☐

   வம்சாவழி ☐

   பதிவு ☐

8. ஆண் /பெண் :- பெண் ☐ ஆண் ☐

9. விவாகமானவர் /தனித்தவர் :- விவாகமானர் ☐ தனித்தவர் ☐

10. பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவுக் காலம் : ..................................................

11. கல்வித் தகைமைகள் : க. பொ.த. (சா./த.) பரீட்சை பற்றிய விபரங்கள் (பெற்றுக்கொண்ட அதிவிசேட, திறமைச் சித்தி என்ற ஒழுங்கில் பாடங்களைக் குறிப்பிடுக)

முதலாவது தடவை
சுட்டெண்:
சித்தியடைந்த வருடம் :

இரண்டாவது தடவை
சுட்டெண்:
சித்தியடைந்த வருடம் :

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 1 | | |
| 2 | | | 2 | | |
| 3 | | | 3 | | |
| 4 | | | 4 | | |
| 5 | | | 5 | | |
| 6 | | | 6 | | |
| 7 | | | 7 | | |
| 8 | | | 8 | | |
| 9 | | | 9 | | |
| 10 | | | 10 | | |

12. தொழில் தகைமையும் அனுபவமும்:
……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………

13. ஏனைய தகைமைகள்:
……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………

14. ஏற்கனவே இந்த பிரதேச சபையில் சேவையில் ஈடுபட்டுள்ளவரெனின்
(i) வகிக்கும் பதவி : ……………………………………………………………………………………
(ii) அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி: ……………………………………………………………………

15. விண்ணப்பதாரியின் உறுதியுரை
இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் நான் அறிந்தவகையில் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன். மேற்குறித்த விபரங்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நியமனத்துக்கு முன்னரெனின் நான் தகுதியற்றவனாக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின் நட்டஈடு எதுவுமின்றி பதவிநீக்கம் செய்வதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

திகதி :- ………………………… ………………………………………
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

16. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :
இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி …………………………………… என்பவரை தனிப்பட்ட வகையில் நான் அறிந்தவரெனவும், அவர் இன்று எனது முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

………………………………………
உறுதிப்படுத்துபவரது கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரது முழுப் பெயர் : ……………………………………………………………………
பதவி முத்திரையை பதிக்கவும் :……………………………………………………………………
பதவி :……………………………………………………………
முகவரி : ……………………………………………………………

17. தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றுவோரெனின் திணைக்களத் தலைவரது சான்றிதழ்:
திரு. /திருமதி /செல்வி …………………………………………………… என்ற விண்ணப்பதாரி எமது திணைக்களத்தில் / நிறுவனத்தில் ……………………………………… ஆகப் பணியாற்றுகின்றார். கடந்த சில ஆண்டுகளுக்குள் அவர் எவ்வித ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உட்படவில்லை (எச்சரிக்கை தவிர்ந்த ) எனவும், மேற்குறித்த பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

………………………………………
நிறுவனத் தலைவரது கையொப்பம்.

திகதி : ……………………………………………………
பெயர் : ……………………………………………………
பதவி : ……………………………………………………
பதவி முத்திரை : ……………………………………………………

01 - 305 /1

## மெத தும்பர பிரதேச சபையில் ஆரம்பத்தர (தேர்ச்சியற்ற) பதவிகளில் நிலவும் வெற்றிடங்களுக்கான தரம் III இன் திறந்த ஆட்சேர்ப்பு

மெத தும்பர பிரதேச சபையில் நிலவும் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கெனக் கீழே தரப்படும் தகைமைகளைக் கொண்டுள்ள மெத தும்பர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **பதவி வெற்றிடங்கள் :**

| **பதவிப் பெயர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| அலுவலகக் கரும உதவியாளர் | 01 |
| காவலாளி | 01 |
| நீர்வழங்கல் தொழிலாளர் | 01 |
| வேலை /வெளிக்களத் தொழிலாளர் | 04 |
| சுகாதாரத் தொழிலாளர் | 05 |

**சேவை வகுதி** : ஆரம்பத்தரம் (தேர்ச்சியற்ற)

**ஆட்சேர்ப்புத் தரம்** : III

**பதவியின் தன்மை** : இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதிய உரித்துடையவை. ஓய்வூதியம் தொடர்பில் அரசு காலத்துக்குக் காலம் விதிக்கும் நியமங்களுக்கு உட்படும்.

**சம்பள அளவுத் திட்டம்** : பொ.நி.சு. 03/2016, PL1- 2016 இற்கமைய மத்திய மாகாண அரசாங்க சேவையின் இந்தப் பதவிக்கான சம்பளத் திட்டம்:
ரூபா 24,250.00-10X250-10X270 -10X300 -12X330 - ரூபா 36,410.00
(மேற்குறித்த சுற்றறிக்கையின் அட்டவணை II இற்கமைய 2019.01.01 இலுள்ள சம்பளம் ரூபா 21,746.00 ஆகும். இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய எதிர்காலச் சம்பளம் வழங்கப்படும்)

**கல்வித் தகைமைகள்** : இரு தடவைகளுக்கு மேற்படாது கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா./த.) பரீட்சையில் குறைந்தது 02 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அவற்றுள் 05 பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

சுகாதாரத் தொழிலாளர் பதவிகளுக்கென மேற்காட்டிய தகைமைகள் கொண்ட விண்ணப்பதாரிகள் இல்லாத பட்சத்தில் மட்டும் தரம் 05 இன் சித்தி குறைவான தகைமையாகக் கருதப்படும்.

**உடற் தகைமைகள்** : ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தீவின் எந்தப் பகுதியிலும் சேவையாற்றக்கூடிய நல்ல உடல் மற்றும் உளத் தகுதியைக் கொண்டிருப்பதுடன் சிறந்த கண் பார்வையையும் பெற்றிருத்தல் வேண்டும்.

02. **ஏனைய தகைமைகள் :**

(i) விண்ணப்பம் ஏற்றுகொள்ளப்படும் இறுதித் திகதியன்று மெததும்பர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் தொடராக 03 வருடத்துக்குக் குறையாத கால வதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்துக்கமைய ஆட்சேர்ப்புக்குத் தேவையான ஆகக் குறைந்த தகைமைகளைக் கொண்டுள்ளதற்கமையக் கட்டமைப்பு நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டால் வாக்காளர் பதிவேடு அல்லது பிரதேச செயலாளரால் கையொப்பமிடப்பட்ட கிராம அலுவலர் வதிவை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் மற்றும் சிறந்த நன்னடத்தை உடையவரகவும் இருத்தல் வேண்டும்.

(iii) பதவிக்கான ஆட்சேர்ப்புக்குரிய அனைத்துத் தகைமைகளையும் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று நிறைவாகப் பெற்றிருத்தல் வேண்டும்.

(iv) தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளியாகக் கருதப்பட்டவராக இருத்தல் கூடாது.

(v) அரச அல்லது உள்ளூராட்சி சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டவராக இருத்தல் கூடாது.

03. **வயது எல்லை** : விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி அமையமொன்றில் நிரந்தரப் பதவி வகிப்போருக்கு இந்த உச்ச வயதெல்லை பொருந்தாது.

04. **ஆட்சேர்ப்பு முறை** :

(i) தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பாதாரிகள் கட்டமைப்பான நேர்முகத் தேர்வில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளது தொடரொழுங்கின்படி நிலவும் பதவி வெற்றிடங்களில் நிரப்பப்படுவர்.

(ii) பிரதேச சபையில் இற்றை வரை சேவையில் ஈடுபட்டுள்ள பணியாட்களுக்கு ஆட்சேர்ப்பில் முன்னுரிமை வழங்கப்படும்.

05. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்** :

(i) அநாதைகள் /விதவைகள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(ii) தெரிவுசெய்யப்படுவோர் நியமனத் திகதியிலிருந்து 3 வருடகாலத் தகுதிகாண் சேவைக் காலத்துக்கு உட்படுவர். அக்காலத்துக்குள் சேவை திருப்திகரமானதாக இல்லாதிருப்பின், பதவியில் நிரந்தரமாக்கப்படாது சேவை முடிவுக்குக் கொண்டு வரப்படும்.

(iii) உரிய நியமனங்கள் அரசகரும மொழிக் கொள்கைகள் செயற்படுத்துவது தொடர்பில் பொது நிருவாகச் சுற்றறிக்கைகளது ஏற்பாடுகளுக்கு உட்படும்.

(iv) ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் மேலதிகமாக இலங்கைத் தாபனவிதிக்கோவையின் ஏற்பாடுகள், மாகாண சபையின் நிதிப் பிரமாணங்கள், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணையகம் மற்றும் மெத தும்பர பிரதேச சபை காலத்துக்குக் காலம் விதிக்கும் கட்டளைகளுக்கும், நியமங்களுக்கும் அமைய செயற்படுவதற்கு அனைத்துப் பணியாளர் களும் உட்படுதல் வேண்டும்.

(v) நியமனம் பெற்ற ஒரு மாத காலத்துக்குள் உரிய தகைமைளைக் கொண்டுள்ள மருத்துவரால் நடத்தப்படும் பரிசோதனைக்கு உட்படுதல் வேண்டும். குறித்த பரிசோதனையில் உடற்தகைமை பொருத்தமற்றது எனக் காணப்பட்டால் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

06. **விண்ணப்பிக்கும் தொடரொழுங்கு** :

(i) இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2019.02.15 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கும் வண்ணம் "செயலாளர், மெத தும்பர பிரதேச சபை, தெல்தெனிய" என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

(ii) விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கென உரிய ஆவணங்களின் போட்டோ பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டால் அவற்றின் முதற் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்களைக் கொண்டுள்ள கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். உரிய திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் பூரணமற்ற விண்ணப்பங்களும் உரிய தகைமைகளைக் கொண்டிராத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் காணாமல் போகும் விண்ணப்பங்கள் தொடர்பில் இந்தப் பிரதேச சபை வகை கூறாது.

(iv) சில பதவிகளுக்கு விண்ணப்பிப்பதெனின், அவற்றுக்கெனத் தனித்தனியான விண்ணப்பங்களைத் தயாரித்தல் வேண்டும். அவற்றை ஒரே உறையில் அனுப்பிவைக்க முடியும். உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிகள் அனைத்தையும் குறிப்பிடுதல் வேண்டும்.

07. **விண்ணப்பிக்க வேண்டிய முறை** :

(i) தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைவாக A4 தாளின் இருபக்கங்களிலும் இலக்கம் 01 - 09 வரை முதற் பக்கத்திலும், இலக்கம் 10 - 14 வரை இரண்டாம் பக்கத்திலும் எஞ்சிய பகுதிகள் மூன்றாவது பக்கத்திலும் அமையும் வண்ணம் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தட்டச்சில் அல்லது அழகிய கையெழுத்தில் தயாரித்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையெழுத்தை அரச பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான் சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு முப்படைகளின் அதிகாரம் பெற்ற அலுவலர், பொலிஸ் சேவையில் உயர் பதவி வகிப்போர் அல்லது ரூபா. 240,360.00 அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளத்தை பெறும் அரச அலுவலர் ஒருவர் ஆகியோருள் ஒருவர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பதாரிகள் எவரேனும் தகைமைகள் இல்லாதோர் என நியமனத்துக்கு முன்னர் அல்லது நியமனத்தின் பின்னர் அல்லது எந்நேரத்திலும் கண்டுபிடிக்கப்பட்டால் தகைமையற்றவராவார். அல்லது அவரது நியமனம் இரத்துச் செய்யப்படும். அவ்வாறு வேண்டுமென்றே பொய்யான தகவல்களை முன்வைத்தமையோ அல்லது சரியான தகவல்களை வேண்டுமென்றே மறைத்தமையோ கண்டுபிடிக்கப்பட்டால் சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்படும்.

(iv) தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றுவோர் தமது விண்ணப்பங்களைத் தாபனத் தலைவர் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

08. இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படும் காலத்தில் ஆட்சேர்ப்பைத் தாமதிக்கச் செய்யும், மாற்றியமைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அனைத்து அதிகாரமும் மெததும்பர பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

09. மெததும்பர பிரதேச சபையின் பதவி வெற்றிடங்களை நிரப்பவதற்கென 2017.09.08 ஆந் திகதி கொண்ட 2036 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் IV (ஆ) பிரிவில் வெளியிடப்பட்ட அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

சுமனா விஜேரத்ன,
செயலாளர்,
மெத தும்பர பிரதேச சபை.

மெத தும்பர பிரதேச சபை அலுவலகம்,
தெல்தெனிய.
2018, திசெம்பர் 31.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மெததும்பர பிரதேச சபையின் .................................... தரம் III இன் ஆட்சேர்ப்பு**

**உரிய கூட்டில் √ அடையாளமிடுக**

1. (i) விண்ணப்பதாரியின்பெயர் : (முதலெழுத்துக்களுடன்)........................................................................

(ii) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் : ........................................................................

2. நிரந்தர முகவரி : ........................................................................................................

3. தொலைபேசி இலக்கம் : ........................................................................................................

4. பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

5. விண்ணப்பிக்கும் இறுதித் திகதியன்று வயது : வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

6. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

7. நீர் இலங்கைப் பிரசையா? வம்சாவளியினாலா? பதிவினாலா ?

ஆம் ☐ இல்லை ☐

வம்சாவழி ☐

பதிவு ☐

8. ஆண் /பெண் :- பெண் ☐ ஆண் ☐

9. விவாகமானவர் / தனித்தவர் :- விவாகமானவர் ☐ தனித்தவர் ☐

10. பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவுக் காலம் : ....................................................................

11. கல்வித் தகைமைகள் : க.பொ.த. (சா./த.) பரீட்சை பற்றிய விபரங்கள் (பெற்றுக்கொண்ட அதிவிசேட, திறமைச் சித்தி என்ற ஒழுங்கில் பாடங்களைக் குறிப்பிடுக)

முதலாவது தடவை :
சுட்டெண்:
சித்தியடைந்த வருடம் :

இரண்டாவது தடவை :
சுட்டெண்:
சித்தியடைந்த வருடம் :

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 1 | | |
| 2 | | | 2 | | |
| 3 | | | 3 | | |
| 4 | | | 4 | | |
| 5 | | | 5 | | |
| 6 | | | 6 | | |
| 7 | | | 7 | | |
| 8 | | | 8 | | |
| 9 | | | 9 | | |
| 10 | | | 10 | | |

12. தொழில் தகைமையும் அனுபவமும்:
....................................................................................................................
....................................................................................................................
....................................................................................................................

13. ஏனைய தகைமைகள்:
....................................................................................................................
....................................................................................................................
....................................................................................................................

14. ஏற்கனவே இந்த பிரதேச சபையில் சேவையில் ஈடுபட்டுள்ளவரெனின்
(i) வகிக்கும் பதவி : ....................................................................................
(ii) அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி: ....................................................................

15. **விண்ணப்பதாரியின் உறுதியுரை** :
இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் நான் அறிந்தவகையில் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன். மேற்குறித்த விபரங்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நியமனத்துக்கு முன்னரெனின் நான் தகுதியற்றவனாக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின் நட்டஈடு எதுவுமின்றி பதவி நீக்கம் செய்வதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

திகதி :- ..............................

..............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

16. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./ திருமதி/ செல்வி ....................................... என்பவர் தனிப்பட்ட வகையில் நான் அறிந்தவரெனவும், அவர் இன்று எனது முன்னிலையில் கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.............................................
உறுதிப்படுத்துபவரது கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரது முழுப் பெயர் :- ......................................................................
பதவி முத்திரையை பதிக்கவும் : ..................................................
பதவி :- ............................................................................
முகவரி :- ..........................................................................

17. தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றுவோரெனின் திணைக்களத் தலைவரது சான்றிதழ்:

திரு. / திருமதி / செல்வி ........................................................................ என்ற விண்ணப்பதாரி எமது திணைக்களத்தில் / நிறுவனத்தில் ................................................ ஆகப் பணியாற்றுகின்றார். கடந்த சில ஆண்டுகளுக்குள் அவர் எவ்வித ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உட்படவில்லை (எச்சரிக்கை தவிர்ந்த ) எனவும், மேற்குறித்த பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

.............................................
நிறுவனத்தின் தலைவரது கையொப்பம்.

திகதி : ...............................................................
பெயர் : ...............................................................
பதவி : ................................................................
பதவி முத்திரை : ...............................................................

01 - 305 /2

---

## ஆரம்ப சேவை வகுதியில் தேர்ச்சியுடைய மற்றும் தேர்ச்சியற்ற பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு

மத்திய மாகாண அரச சேவையில் அட்டன் டிக்கோயா நகர சபையில் தற்போது வெற்றிடமாகவுள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள அட்டன் டிக்கோயா நகர சபை எல்லைக்குள் நிரந்தர வதிவுடைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக தயார் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2019.02.08ஆந் திகதிக்கு முன்னர் 'செயலாளர், அட்டன் டிக்கோயா நகர சபை, அட்டன்' எனும் விலாசத்திற்கு கிடைக்கத் தக்கவாறு பதிவுத்தபாலில் மாத்திரம் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியினை குறிப்பிட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் வெவ்வேறாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

| இல. | பதவி பெயர் | வெற்றிடம் நிலவும் பதவிகளின் எண்ணிக்கை | இணைத்துக் கொள்ளும் நிறுவனம் மற்றும் பணிகள் | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 01 | சாரதி III ஆம் தரம் | 03 | அட்டன் டிக்கோயா நகரசபை போக்குவரத்து தொடர்பான பணிகளுடன் தொடர்புபட்ட பணிகளும் நிறுவன தலைவரினால் ஒப்படைக்கப்படும் பணிகளும் | PL- 3-2016 ரூ. 25,790.00- 10X270-10X300- 10X330 12X350- ரூபா 38,990.00 | **கல்வித் தகைமைகள்** க. பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் ஆகக் குறைந்தது 02 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். **தொழிற்தகைமை** தார் நிறை 34 ஹொண்டருக்கு மேற்பட்ட மோட்டார் வண்டி நிறை |

| இல. | பதவி பெயர் | வெற்றிடம் நிலவும் பதவிகளின் எண்ணிக்கை | இணைத்துக் கொள்ளும் நிறுவனம் மற்றும் பணிகள் | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| | | | | | யினையுடைய டிரேலர் மற்றும் 32 பயணிகளுக்கு குறையாத எண்ணிக் கையான பயணிகளை ஏற்றிச் செல்லத்தக்க பஸ்வண்டி செலுத்து வதற்கான சாரதி அனுமதிப்பத்திரம் அதாவது, மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் விநியோகிக்கப் பட்டுள்ள 'A' தர வாகன அனுமதிப் பத்திரம் அல்லது புதிய சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு அமைய ஏ1/ ஏ/ பி1/ பி/ சி/ சி1/ சிஇ/ டி1 /டி/ ஜி1/ ஜி/ ஜே வகுப்பிலான அனுமதிப் பத்திரத்தை பெற்றிருத்தல்.<br><br>**அனுபவம்** :<br>மோட்டார் வண்டி செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் கிடைத்த பின் குறைந்தது 3 வருடம் அனுபவத்தினை பெற்றிருத்தல் வேண்டும். (அனுப வத்தை முறையான சான்றிதழ் மூலமாக உறுதி செய்தல் வேண்டும்.)<br><br>**உடற்தகைமை** :<br>குறைந்தது 05 அடி உயரம் 2 1/ 2 அங்குலம் உடையவராக இருத்தல்.<br><br>சிறந்த கண் பார்வையுடையவராக இருத்தல். இரவு பகலாக சேவையிலீடு படத்தக்க வகையில் போதிய உடல் மற்றும் உள ரீதியிலான தகுதியை பெற்றவராயிருத்தல்.<br><br>வீதிப் பாதுகாப்பு ஒழுங்கு விதிகள் பற்றிய சிறந்த அறிவினை பெற்றிருத்தல் வேண்டும். |
| 02 | கள நிலை தொழிலாளர் (வேலை பிரிவு) III ஆம் தரம் | 11 | அட்டன் டிக்கோயா நகரசபை பாதையின் இரு புறமும் உள்ள வடி காண் களை சுத்திகரித்தல், புற்களை வெட்டுதல், மஞ்சட் கோடுகளை வரை வதற்கு உதவி புரிதல், தார் இடுதல், பிரிமிக்ஸ் தயார் செய்வதற்கு உதவுதல், பாதையை பெருக்கி துப்புரவு | PL1 -2016<br>ரூ. 24,250.00- 10X250-10X270- 10X300 12X330- ரூபா 36,410.00 | **கல்வித் தகைமைகள்**<br><br>க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் ஆகக் குறைந்தது 02 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும். அதில் 05 பாடங்கள் ஒரே அமர்வில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும். மேற்குறித்த தகைமைகளை பெற்றிராத விண்ணப் பதாரிகள் இல்லாத சந்தர்ப்பத்தில் |

| இல. | பதவி பெயர் | வெற்றிடம் நிலவும் பதவிகளின் எண்ணிக்கை | இணைத்துக் கொள்ளும் நிறுவனம் மற்றும் பணிகள் | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| | | | செய்தல் கலி வண்டியுடன் சம்பந்தப்பட்ட வேலைகள், கழிவுகளை சேகரித்து டிரெக்டருக்கு போடுதல், பொது மலசல கூடம் மற்றும் கழிப்பறையினை சுத்திகரிப்பு செய்தல் உள்ளடங்கலான சுத்திகரிப்பு பணிகள். | | 05 ஆம் தரத்தில் சித்தியடைந்த நபர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |
| 03 | சுகாதார தொழிலாளர் III ஆம் தரம் | 13 | அட்டன் டிக்கோயா நகரசபை பாதையின் இருபுறமும் உள்ள வடிகாண்களை சுத்திகரித்தல், புற்களை வெட்டுதல், மஞ்சட் கோடுகளை வரைவதற்கு உதவி புரிதல், தார் இடுதல், பிரிமிக்ஸ் தயார் செய்வதற்கு உதவுதல், பாதையை பெருக்கி துப்புரவு செய்தல், சுத்தம் செய்தல் கலி வண்டியுடன் சம்பந்தப்பட்ட வேலைகள், கழிவுகளை சேகரித்து டிரெக்டருக்கு போடுதல், பொதுமலசல கூடம் மற்றும் கழிப்பறையினை சுத்திகரிப்பு செய்தல் உள்ளடங்கலான சுத்திகரிப்பு பணிகள். | PL 1 - 2016 ரூ. 24,250.00- 10X250-10X270- 10X300 12X330- ரூபா 36,410.00 | **கல்வித் தகைமைகள்** க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் ஆகக் குறைந்தது 02 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இதில் 05 பாடங்கள் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். தகைமையை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் இல்லாத பட்சத்தில் 05 ஆம் தரம் சித்தியடைந்தவர்களை சேவையில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |
| 04 | வாகன நிறுத்துமிட பொறுப்பாளர் (பெண் உத்தியோகத்தர்) III ஆம் தரம் | 02 | அட்டன் டிக்கோயா நகர சபை வீதிகளில் நிறுத்தப்படும் வாகனங்களில் கட்டணம் அறவீடு செய்தல், அக்கட்டணங்களை தினமும் மேற்பார்வை பிரிவுக்கு ஒப்படைத்தல் மற்றும் அது சார்ந்த கருமங்கள் | PL 1- 2016 ரூ. 24,250.00- 10X250-10X270- 10X300 12X330- ரூபா 36,410.00 | **கல்வித் தகைமைகள்** க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் ஆகக் குறைந்தது 02 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும். இதில் 05 பாடங்கள் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

| இல. | பதவி பெயர் | வெற்றிடம் நிலவும் பதவிகளின் எண்ணிக்கை | இணைத்துக் கொள்ளும் நிறுவனம் மற்றும் பணிகள் | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 05 | பார ஊர்தி செயற் பாட்டாளர் (ஒப்பந்த அடிப்ப டையில்) | 01 | அட்டன் டிக்கோயா நகரசபை ஜே. சி. பி. இயந்திரம் சார் செயற்பாடுகள் மற்றும் அதன் பராமரிப்பு பணிகள் | PL-3-2016 ரூ. 25,790.00-10X270-10X300-10X330-12X350-ரூபா 38,990.00 | **கல்வித் தகைமைகள்**<br>க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் ஆகக் குறைந்தது 02 பாடங்கள் அடங்கலாக 06 பாடங்களில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும். இதில் 05 பாடங்கள் ஒரே தடவையில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும்.<br><br>**தொழிற் தகைமைகள்**<br>தார் நிறை 34 ஹொண்டருக்கு மேற்பட்ட மோட்டார் வண்டி நிறை யினையுடைய டிரேலர் மற்றும் 32 பயணிகளுக்கு குறையாத எண்ணிக்கை யான பயணிகளை ஏற்றிச் செல்லத்தக்க பஸ்வண்டி செலுத்துவதற்கான சாரதி அனுமதிப்பத்திரம் அதாவது மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் விநியோகிக்கப்பட்டுள்ள 'A' தர வாகன அனுமதிப்பத்திரம் அல்லது புதிய சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு அமைய/ ஜி1/ ஜி/ ஜே வகுப்பிலான அனுமதிப்பத்திரத்தை பெற்றிருத்தல். அரச நிறுவனமொன்றில் அல்லது அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தினால் தொழிற்பயிற்சி தொடர்பாக பெற்றுக்கொண்ட அனுமதி பெற்ற சான்றிதழ்.<br><br>**அனுபவம் :**<br>மோட்டார் வண்டி செலுத்துவது தொடர்பான அனுமதிப்பத்திரத்தை பெற்ற பின்னர் 03 வருட அனுபவத்தை பெற்றிருத்தல். (அனுபவம் முறையான சான்றிதழ் மூலமாக உறுதிப்படுத்தப் பட வேண்டும்.)<br><br>**உடற் தகைமை :**<br>குறைந்தது 05 அடி 2 1/2 அங்குலம் உயரம் உடையவராக இருத்தல். சிறந்த கண் பார்வையுடைவராக இருத்தல். இரவு பகலாக சேவையிலீடுபடத்தக்க வகையில் போதிய உடல் மற்றும் உள ரீதியிலான தகுதியை பெற்றவரா யிருத்தல். வீதி பாதுகாப்பு ஒழுங்கு விதிகள் பற்றிய சிறந்த அறிவினை பெற்றிருத்தல் வேண்டும். |

**2. சேவையில் இணைத்துக்கொள்வது தொடர்பான நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரிகள் பரம்பரையாக அல்லது பதிவு செய்தமையின் மூலமாக இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

2. விண்ணப்பதாரிகள் சிறந்த மன ஆரோக்கியத்துடனும் உடல் ஆரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பம் கோரும் திகதிக்கு முன்னர் அட்டன் டிக்கோயா நகரசபை எல்லைக்குள் மூன்று வருடங்கள் நிரந்தர வதிவை கொண்டிருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பம் கோரும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர சேவையிலுள்ளவர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.)

5. மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு பதவி நிலைக்கு முன்னாலும் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்குறைந்த தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

6. சேவையில் இணைத்துக்கொள்ளும் முறைக்கு அமைய முறையாக கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், அதில் ஆகக்கூடிய புள்ளிகளை பெற்றுக்கொள்பவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

7. சாரதி பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் எழுத்துப்பரீட்சைக்கு தோற்ற வேண்டுமென்பதுடன், தேவையான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளதும் ஆகக்கூடிய புள்ளிகளை பெற்ற விண்ணப்பதாரிகளில் தொழில் ரீதியிலான பரீட்சை பெறுபேறுகளுக்கமைய திறமை ஒழுங்கு வரிசைப்படி சேவையில் இணைத்துக்கொள்ளப்படுவர்.

8. விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது விண்ணப்பங்கள் கோருகின்ற சந்தர்ப்பத்தில் சேவையில் இணைத்துக்கொள்வதை தாமதப்படுத்தல், மாற்றம் செய்தல், அல்லது இவ்வறிவித்தலில் திருத்தங்கள் செய்தல் அல்லது இரத்துச்செய்தல் அதிகாரங்கள் அட்டன் டிக்கோயா நகரசபையின் செயலாளர் வசமுள்ளது.

9. தற்போது அட்டன் டிக்கோயா நகரசபையில் மேற்போந்த பதவிகளில் தற்காலிக, அமைய, பதிலீடு, நாளாந்த வேதன, ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுவோர் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படுவதுடன், அவர்கள் நிறுவன தலைவர் மூலமாக தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

10. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் சட்டங்களுக்கும் உள்ளூராட்சி திணைக்களத்தின் ஒழுங்கு விதிகளுக்கமைவாகவும் அட்டன் டிக்கோயா நகரசபையில் தற்போது விதித்துள்ள இனிவருங்காலங்களில் நகரசபையினால் விதிக்கப்படும் சட்டங்களுக்கும் அதன் சட்ட திட்டங்களுக்கும் அடிபணிதல் வேண்டும்.

11. அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

12. பார ஊர்தி செயற்பாட்டாளர் பதவியானது ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்படும் பதவியாக இருப்பதுடன், அதற்கான ஒப்பந்த காலம் ஆகக்குறைந்தது 02 வருடங்களாகும்.

**03. சேவையில் இணைத்துக்கொள்வதற்கான நிபந்தனைகள்**

1. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

2. விதவைகள்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்பு செய்ய வேண்டும்.

3. சேவையில் இணைத்துக்கொள்ளப்படுவோர் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படுவர். அக்காலத்தில் சேவைக்கு வருகை தருதல், நடத்தை என்பன திருப்திகரமானதாக இருப்பின் தகுதி காண் காலத்தின் இறுதியில் சேவையானது நிரந்தரமாக்கப்படும்.

4. அரச கரும மொழிக்கொள்கைக்கு அமைவாக தேவையான மொழித்தேர்ச்சியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

5. சேவையில் இணைத்துக்கொள்வது தொடர்பான நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தில் சேவையில் இணைத்துக்கொள்வது தொடர்பான ஏனைய பொது நிபந்தனைகளுக்கும் உட்படுதல் வேண்டும்.

6. சிறந்த குணநலத்துடன் இருத்தல் வேண்டுமென்பதுடன், எந்த எல்லைப் பிரதேசத்திலும் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கான சிறந்த தேகாரோக்கியத்துடன் கூடிய நபராக இருத்தல் வேண்டும்.

7. தண்டணைச் சட்ட கோவையின் பிரகாரம் நீதிமன்றத்தில் குற்றவாளியாக இனங்காணப்படாதவராக இருத்தல் வேண்டும்.

8. அரசாங்கத்தின் அல்லது மாகாண அரசாங்க சேவையில் சேவையிலிருந்து விலக்கப்பட்ட ஒருவராக இருத்தல் கூடாது. அரச நிர்வாக சுற்றறிக்கை இல. 44/90 இன் பிரகாரம் ஓய்வூதியம் பெற்ற ஒருவராக இருக்ககட கூடாது. அட்டன் டிக்கோயா நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் செய்யப்படும் இடமாற்றங்களுக்குட்படுதல் வேண்டும்.

9. சேவையில் செய்திறன் அற்றவராகவும் அல்லது சேவையில் திருப்தியற்ற தன்மை அவதானிக்கப்பட்டால், சபையின் விருப்பத்திற்கமைவாக சேவையை முடிவுறுத்தும் அதிகாரம் சபைக்குள்ளது.

**04. விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முறை :**

இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைவாக A4 அளவுடைய தாளின் இருபக்கங்களை பயன்படுத்தி விண்ணப்பங்கள் தயார் செய்யப்பட வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது புற மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு 2019.02.08 ஆந் திகதிக்கு முன்னர் அல்லது அத்திகதிக்கு கிடைக்கத்தக்கவாறு "செயலாளர், அட்டன் டிக்கோயா நகரசபை, அட்டன் " எனும் விலாசத்திற்கு பதிவுத்தபாலில் மாத்திரம் அனுப்பி வைக்க வேண்டும். தபாலில் காணாமற்போகும் அல்லது தவறாக முகவரி குறிப்பிடுவதன் மூலமாக திருப்பி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் தொடர்பாக பொறுப்புக் கூறப்படமாட்டாது. இறுதித் திகதிக்கு பின்னர் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்களுடன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்:

1. பிறப்புச் சான்றிதழ்;
2. தேசிய ஆளடையாள அட்டை;
3. கல்விச் சான்றிதழ்கள்;
4. கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச்சான்றிதழ் (பிரதேச செயலாளரினால் இணையொப்பமிடப்பட வேண்டும்);
5. தொழிற் தகைமைகளை காண்பிக்கும் சான்றிதழ்கள்;
6. சேவை முன் அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் ;
7. அண்மையில் பெற்றுக்கொண்ட குணநலச்சான்றிதழ்கள் 02.

அ. சரவணபவன்,
செயலாளர்,

அட்டன் டிக்கோய நகரசபை,
2018, திசெம்பர் 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அட்டன் டிக்கோயா நகரசபையின் ........................................................ பதவி**

1. முழுப் பெயர் : ........................................................................................................
2. விலாசம் : ..............................................................................................................
3. தொலைபேசி இலக்கம் : ..........................................................................................
4. பிறந்த திகதி : .......................................................................................................
5. தேசிய ஆளடையாள அட்டை இல. :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

6. 2019.02.08ஆந் திகதிக்கு வயது: ..............................................................
7. குடியியல் அந்தஸ்து: ................................................................................

8. திருமணமானவரா? திருமணமாகாதவரா?

9. தற்போது பதவி வகித்தால் அது குறித்த விபரங்கள் :
   (i) பதவியின் பெயர் : ..............................................................................
   (ii) நியமனத் திகதி : ..............................................................................
   (iii) நியமனத் தன்மை (நிரந்தரம்/தற்காலிகம்/பதிலீடு/அமைய) : ............................................................
   (iv) தேர்தல் தொகுதி : ..............................................................................
   (v) அனுபவம் மற்றும் சேவைக்காலம் : ..............................................................

10. கல்வித் தகைமைகள் :
   (சித்தியடைந்துள்ள உயர்ந்த வகுப்பு தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்.)

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தி பெற்ற வருடம் : .......................... சுட்டெண் : ..........................

| இல. | விடயம் | சித்தி | இல. | விடயம் | சித்தி |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9. | | |
| 5. | | | 10. | | |

11. தொழிற்தகைமை : ..............................................................................

12. ஏனைய தகைமைகள் : ..............................................................................
   (தொழில்நுட்ப அறிவு தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்.)

13. தாங்கள் எப்போதாவது குற்றச்சாட்டொன்றிற்காக நீதிமன்றினால் குற்றவாளியாக கருதப்பட்டுள்ளீர்களா?.................

14. தாங்கள் தற்போதும் இச்சபையில் சேவையிலுள்ளீர்களா? ஆம்/இல்லை ............................. ஆம் எனில் தற்போது வகிக்கும் பதவி மற்றும் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி : .............................

விண்ணப்பதாரியின் உறுதியுரை :

மேற்குறிப்பிட்ட இல. 01 - 14 வரையான விடயங்கள் சரியானதும் உண்மையானதுமென உறுதிப்படுத்துவதுடன் ஏதாவது சந்தர்ப்பத்தில் இவ்விடயங்கள் உண்மையில்லை உன தெரிய வரும் பட்சத்தில் நான் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதை புரிந்துகொண்டுள்ளேன் என்பதையும் விண்ணப்பம் கோருவது தொடர்பான நிபந்தனைகளுக்கு உடன்படுகின்றேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

..............................

திகதி : ............................. விண்ணப்பதாரரின் கையொப்பம்.

தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கான நிறுவனத் தலைவரின் சான்றிதழ்

இந்த விண்ணப்பதாரியான ......................................................................... என்பவர் இந்த நிறுவனத்தில் .......................................... ஆக .......................... திகதி தொடக்கம் சேவையாற்றுகின்றார். இவரால் விண்ணப்பிக்கப்பட்டுள்ள பதவிக்கு இவர் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவர் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எவ்வித சட்டரீதியான தண்டனைக்கும் உட்படுத்தப்படவில்லை என்பதை உறுதி செய்வதுடன், இவ்விண்ணப்பத்தை பரிந்துரை செய்து சமர்ப்பிக்கின்றேன்.

.............................................
நிறுவனத் தலைரின் கையொப்பம்,
(பதவி முத்திரை)

பெயர்: ........................................................................
பதவி : ........................................................................
நிறுவனம் : ........................................................................
திகதி : .............................

01 - 347

## வாரியபொல பிரதேச சபை

வடமேல் மாகாண அரசாங்க சேவையில் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளல்

வாரியபொல பிரதேச சபையில் வெற்றிடமாகி உள்ள கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்ச்சியற்ற சேவைப் பிரிவிற்கு உரிய பதவிகளுக்காக வட மேல் கௌரவ ஆளுநர் அவர்களினால் 2008.11.19 ஆந் திகதியுடையதும் அரை தேர்ச்சிப் பெற்ற பதவிகளுக்காக வடமேல் ஆளுநர் அவர்களால் 2009.05.12 ஆந் திகதி அனுமதிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆரம்ப தகைமைகளை பூர்த்தி செய்துள்ள வாரியபொல பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் 03 ஆண்டிற்கு மேற்பட்ட காலம் நிரந்தரமான குடியிருப்பாளர்களிடத்தில் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

| பதவி | சேவைப் பிரிவு | தரம் | வெற்றிட எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் |
|---|---|---|---|---|
| 01. தொழில்/கள தொழிலாளர் (பாதை) | ஆரம்ப (தேர்ச்சியற்ற) | III | 03 | 3/2016 அரச நிருவாக சுற்று நிருபத்திற்கு அமைய PL1- 2016 ரூபா 24,250.00 -10X250-10X270 10X300-12X330 - ரூபா 36,410.00 |
| 01. நூலக தொழிலாளி | ஆரம்ப (தேர்ச்சியற்ற) | III | 01 | 3/2016 அரச நிருவாக சுற்று நிருபத்திற்கு அமைய PL1- 2016 ரூபா 24,250.00 -10X250-10X270 10X300-12X330 - ரூபா 36,410.00 |

**01. தொழில்/கள தொழிலாளர் (பாதை மற்றும் நூலக தொழிலாளி பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகள்:**

(i) **கல்வித் தகைமை :-** க.பொ.த. (சா./த.) பரீட்சையில் இரு பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும் (விருப்பு பாடம் தவிர)

(ii) **ஆட்சேர்ப்பு முறை :-**
உரிய தகைமை உடையவர்களை நேர்முகப் பரீட்சைக்காக அழைத்து நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் படி தகைமை உடையவர்களை சேர்த்துக் கொள்ளப்படுவர்.

(iii) **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்:-**
இப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதுமாகும். மூன்று (03) வருடங்கள் நன்னடத்தை காலமாகும். அக் காலத்தினுள் தமது கடமை, ஒழுக்கம் மற்றும் வரவு மகிழ்ச்சிகரமாக காணப்படுமாயினாலும் முதலாவது திறமைக்கான தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்தால் நன்னடத்தை காலத்தின் இறுதியில் சேவையில்/பதவியில் நிரந்தரம் செய்யப்படும்.
சுற்று நிருபத்தின் சட்டதிட்டங்களுக்கமைய விதவைகள்/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செலுத்த வேண்டும்.

(iv) **பொது நிபந்தனைகள் (எல்லா பதவிகளுக்காவும்)**

1. விண்ணப்பப் படிவம் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரிகள் பரம்பரையாகவோ பதிவு செய்தல் மூலமாகவோ இலங்கைப் பிரசையாக வேண்டும்.
3. நல்லொழுக்கமும் சரீர சுகமுடையவராக இருத்தல் வேண்டும்.
4. தண்டனைச் சட்டக் கோவையினால் நீதிமன்றத்தில் குற்றவாளியாக காணப்பட்டு தண்டனை பெறாதவராக இருத்தல் வேண்டும்.
5. வாரியபொல பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் 03 ஆண்டு காலம் குடியிருந்தது பற்றி உறுதிப்படுத்துவதற்காக கிராம அலுவலரிடம் பெற்றுக் கொள்ளும் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
6. விண்ணப்பப்படிவம் கோரப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அல்லது கோரப்படுகின்ற காலத்தினுள்ளோ இவ் ஆட்சேர்ப்பினை காலதாமப்படுத்துவதற்கோ இவ் அறிவித்தலினை இரத்து செய்வதற்கான அதிகாரம் வாரியபொல பிரதேச சபையின் செயலாளருக்கு உரியதாகும்.

(v) பிரதேச சபையில் நிரந்தர பதவியில் உள்ளவர் அல்லது அமய /பதில் /தற்காலிக சேவையில் ஈடுபட்டுள்ளவருக்கு வயதெல்லை கவனத்தில் எடுக்கப்படாததுடன், அவர் விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்கு 05 ஆண்டுகளினுள் எச்சரிக்கை தவிர எவ்வித தண்டனைக்கும் உள்ளாகாது இருக்க வேண்டியதுடன், உரிய 05 ஆண்டுகளினுள் எல்லா சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

(vi) விண்ணப்பப்படிவம் அனுப்ப வேண்டிய முறை :
எல்லா விண்ணப்பதாரிகளும் இங்கு கீழ் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய ஒழுங்கமைக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை 2019.02.08 ஆந் திகதிக்கு முன் கிடைக்கும் வண்ணம் "செயலாளர், பிரதேச சபை, வாரியபொல" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவம் இடப்படுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கின்ற பதவியினை குறிப்பிட வேண்டும்.

விண்ணப்பப்படிவத்துடன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும் :

1. பிறப்புச் சான்றிதழ்;
2 கல்விச் சான்றிதழ்;
3. தேசிய ஆளடையாள அட்டையின் பிரதி;
4. பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கிராம அலுவலரின் சான்றிதழ்;

வை. எம். சேனாநாயக்க,
செயலாளர்,
வாரியபொல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
வாரியபொல,
2019, சனவரி 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வாரியபொல பிரதேச சபை**

........................................................ பதவி

01. (i) முதலலெழுத்துக்களுடன் பெயர்: ........................................................................................
(i) முதலெழுத்துக்களினால் அழைக்கப்படும் பெயர்கள்: .................................................................
02. நிரந்தர முகவரி : ..........................................................................................................
03. பிறந்த திகதி : ஆண்டு : ....................... மாதம் : ....................... திகதி: ....................
| 16. தங்கும் விடுதி ஒன்றை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 17. மரக்கறி விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 18. பழங்கள் விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 19. மீன் சேகரிக்கும் நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 20. கருவாடு களஞ்சியப்படுத்தல் நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 21. கருவாடு விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 22. ஒரு மாட்டிறைச்சிக் கடை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 23. ஒரு ஆட்டிறைச்சிக் கடை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 24. கோழியிறைச்சி விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 25. கோழிப்பண்ணை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 26. முட்டை விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 27. நல்லெண்ணெய் உற்பத்தி, விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 28. தேங்காய் எண்ணை உற்பத்தி, விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 29. ஐஸ்கட்டி உற்பத்தி, விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 30. அரிசி மற்றும் தானியவகைகள் விற்பனை செய்தல் களஞ்சியப்படுத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 31. மேலைத்தேய மருந்து விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 32. கீழைத்தேய சுதேச ஆயுர்வேத மருந்து விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 33. பால்மா வகைகள் விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 34. மருந்து விற்பனை நிலையத்தில் ஏனைய உபஉணவுப் பொருள் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 35. பல்பொருள் வாணிபம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 36.சில்லறை விற்பனை (பெட்டிக்கடை) நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 37.பிஸ்கட், பணிஸ் ஏனைய உற்பத்தி,விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 38.இனிப்பு,சொக்லேட் வகைகள் விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 39. தேங்காய் விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 40. குடிநீரை போத்தலில் அடைத்து விற்றல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 41. மரக்கறிகளை துவிச்சக்கர வண்டியில் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 42. உணவு வகைகளை தயாரித்து கடைகள், வைபவங்கள், விழாக்களுக்கு வழங்கல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 43. பாடசாலை தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களில் சிற்றுண்டிச்சாலை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |

**அட்டவணை**

| நிரல் I<br>கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்த பெறுமதி | | |
|---|---|---|---|
| | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 751 ரூபா முதல் 1,500 ரூபா வரை | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 44. சமைத்த உணவு வகைகளை நடமாடும் வாகனங்களில் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 45. துவிச்சக்கர வண்டியில், மோட்டார் சைக்கிளில், தோளில் மீன் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 46. மீன் விற்பனை நிலையம் (சில்லறை, மொத்த) ஒன்றை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 47. தள்ளுவண்டி மற்றும் ஏனைய வாகனங்களில் பாண்,பணிஸ் மற்றும் ஏனைய உணவு வகைகள் விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 48. கால்நடை பண்ணை ஒன்றை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 49. அப்பள உற்பத்தி,விற்பனை நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 50.சத்துணவு மற்றும் சிற்றுண்டிகள் தயாரிக்கும் நிலையம் ஒன்றை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 51.தொலைபேசி அழைப்பு பெட்டிகள் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 52 மீள் ஒலிபரப்பு நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 53. தொலைத்தொடர்பு கோபுரம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 54. தொலைத்தொடர்பு,தொலைநகல் சேவை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 55. இணையத்தள வசதிகள் (Net cafe உள்ளடங்கலாக) சேவை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 56. நிழற்பிரதி சேவை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 57. தட்டச்சு,கணினி அச்சு உறையிடுதல் (Laminating) நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 58. புகைப்படப்பிடிப்பு நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 59. எதிர்மறை புகைப்படங்களை அச்சிடுவதற்கான கட்டளைகளை ஏற்கும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 60. புகைப்பட நிலையத்திற்கான (Studio) ஆய்வுகூடம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 61. படங்களுக்கு சட்டமிடுதலும் விற்பனை செய்தலும் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 62. பரிசுப் பொருட்கள் அலங்காரப் பொருட்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 63 வாத்திய கருவிகள் களஞ்சியப்படுத்தலும் விற்பனையும் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 64. சினிமா படமாளிகை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 65. மினி சினிமா படமாளிகை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 66. மண்டபங்கள்,திரையரங்குகளில் உள்நாட்டு,வெளிநாட்டு பானங்கள் விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 67. பெயர்ப் பலகைகள் மற்றும் விளம்பரப் பலகைகள் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 68. பண்டிகைக்கால தற்காலிக விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 69. நடமாடும் வெதுப்பக உற்பத்தி | 500.00 | 750.00 | 1,000.00 |
| 70. வெற்றிலை பாக்கு விற்பனை நிலையம் | 1,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 71. சிகரட் முகவர் நிலையம் | 1,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 72. பீடி, சுருட்டு உற்பத்தி நிலையம் | 1,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 73. புகையிலை, புகைபொருட்கள் விற்பனை நிலையம் | 1,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 74. புகையிலை உலர்த்தும் நிலையம் | 1,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 75. கள் சேகரிப்பு விற்பனை நிலையம் | 1,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 76. பனம் சாராயம் தயாரிக்கும் நிலையம் | 1,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 77. பனம் சாராய விற்பனை நிலையம் | 1,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 78. மீன்பிடி உபகரணங்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 79. படகுகள் தயாரிக்கும் புதுப்பிக்கும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |

**அட்டவணை**

| நிரல் I<br>கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்த பெறுமதி | | |
|---|---|---|---|
| | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 751 ரூபா முதல் 1,500 ரூபா வரை | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 80. உருக்கி ஒட்டும் (Welding) நிலையம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 81. கடைச்சல் வேலைகள் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 82. திண்மப்படிவங்களை செதுக்கும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 83. தகர வேலைகள் செய்யும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 84. இரும்புத் தொழிலகம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 85. நகைத் தொழிலகம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 86. நகை விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 87. மின்கலம் மீள் மின்னேற்றும் (Battery charge) நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 88. பிரம்பு, பன்ன வேலை உற்பத்தி,விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 89. தும்புத்தடி,ஈர்க்கு, கட்டு, தும்புப்பொருட்கள் உற்பத்தி விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 90. கயிறு தயாரிப்பதற்கான தும்புகள் களஞ்சியம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 91. தூரிகைகள் உற்பத்தி செய்யும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 92. பசளை, உரவகை உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 93. பசளை உரவகை விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 94. கமத்தொழில் இரசாயனப்பொருள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 95. மரக்கன்றுகள் உற்பத்தி விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 96. தவிடு,புண்ணாக்கு,வைக்கோல் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 97. மிருக,கோழித்தீன் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 98. விலங்கு உணவுகள் களஞ்சியமும் விற்பனையும் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 99. வளர்ப்பு மீன்களை விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 100. அந்தியகால சேவை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 101. சவப்பெட்டிகள் உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 102. சவப்பெட்டிகள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 103. மலர்ச்சாலை ஒன்றை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 104. செயற்கை மலர்கள் உற்பத்தி,விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 105. மின்னியக்க நெல் குற்றும் ஆலை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 106. மின்னியக்க அரைக்கும் ஆலை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 107. மின்னியக்க உணவு பண்ட உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 108. சாதாரண ஆடை உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 109. மின்னியக்க ஆடை உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 110. தையல் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 111. தையல் நிலையம் (மின் பாவனையுள்ளது) | 500.00 | 750.00 | 1,000.00 |
| 112. கைத்தறி நெசவாலை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 113. துணிகளுக்கு சாயம் அச்சிடும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 114. தைத்த ஆடைகள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 115 புடவை (ஆண்கள்) விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 116. புடவை (பெண்கள்) விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 117. புடவை (சிறுவர்கள்) விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 118. ஏனைய புடவை துணி விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 119. புடவை மொத்த விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 120. சப்பாத்து,செருப்பு,தோல்பொருட்கள் உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |

**அட்டவணை**

| நிரல் I<br>கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்த பெறுமதி | | |
|---|---|---|---|
| | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 751 ரூபா முதல் 1,500 ரூபா வரை | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 121. சப்பாத்து,செருப்பு,தோல்பொருட்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 122. பாடசாலை பைகள்,போக்குவரத்து பைகள்,கைப்பைகள் உற்பத்தி விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 123. சாதாரண அச்சிடும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 124. மின்னியக்க அச்சிடும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 125. கணினி அச்சுப்பதிக்கும் (Off set) நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 126. கல்லுடைக்கும் கிளறும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 127. கையால் மரமரியும் ஆலை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 128. இயந்திர மரமரியும் ஆலை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 129. தச்சுத்தொழில் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 130. அரிந்த மரங்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 131. பலகை விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 132. விறகு விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 133. கட்டட அமைப்புக்கான பனைமரங்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 134. தளபாட உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 135. தளபாட விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 136. பெயின்ட் வாணிஸ் பூச்சுக்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 137. ஸ்பிறே பெயின்ட் செய்யும் நிறுவனம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 138. கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 139. கண்ணாடிப் பொருட்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 140. அலுமினியப் பொருட்கள் உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 141. அலுமினியப் பொருட்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 142. அலுமினியக் கதவுகள், யன்னல்கள், காட்சிப்பெட்டிகள் பொருத்தும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 143. துருப்பிடிக்காத உலோகப்பொருட்கள் (Ever silver) உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 144. துருப்பிடிக்காத உலோகப்பொருட்கள் (Ever silver)விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 145. விளையாட்டுப்பொருட்கள் உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 146. விளையாட்டுப்பொருட்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 147. மின்சாரப்பொருட்கள் உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 148. மின்சாரப்பொருட்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 149. பண்டிகைக்கால வெடிபொருட்கள் உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 150. பண்டிகைக்கால வெடிபொருட்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 151. சவர்க்காரப் பொருட்கள் உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 152. சவர்க்காரப் பொருட்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 153. சலவை நிலையம் (Loundry) | 500.00 | 750.00 | 1,000.00 |
| 154. மெத்தை உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 155. மெத்தை விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 156. தேங்காய் சிரட்டை விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 157. சுண்ணாம்பு சூளை உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 158. சிப்பி,சுண்ணாம்பு விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |

**அட்டவணை**

| நிரல் I<br>கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்த பெறுமதி | | |
|---|---|---|---|
| | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 751 ரூபா முதல் 1,500 ரூபா வரை | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 159. அழகூட்டும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 160. சிகை அலங்காரம் முடிவெட்டும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 161. உடற்பயிற்சிக் கூடம் நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 162. வெற்றுப்போத்தல்,சாக்கு,பழைய கடதாசி சேகரித்தல்,விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 163. நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 164. நீர் இறைக்கும் இயந்திரம் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 165. தையல் இயந்திரம் திருத்தும் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 166. எரிபொருள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 167. பெற்றோல் களஞ்சியம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 168. டீசல் களஞ்சியம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 169. மண்ணெண்ணெய் சில்லறை விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 170. மண்ணெண்ணெய் களஞ்சியம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 171. உராய்வு எண்ணெய், கிறீஸ் களஞ்சியம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 172. உராய்வு எண்ணெய், கிறீஸ் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 173. கனிய எண்ணை, தார் களஞ்சியப்படுத்தலும் விற்பனை செய்தலும் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 174. சமையலறை வாயு களஞ்சியப்படுத்தலும் விற்பனை செய்தலும் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 175. அமிலப்படுத்திய வாயுக்களடங்கிய சிலிண்டர்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 176. கூட்டுறவுச் சங்க கிளை - எரிபொருள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 177. விழாக்களுக்கான மண்டபம் ஒன்றை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 178. இளைப்பாறும் விடுதி ஒன்றை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 179. விருந்தினர் விடுதி ஒன்றை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 180. பொது விளம்பர சேவை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 181. வெளிநாட்டு முகவர் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 182. முகவர் தபால் நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 183. கட்டிட நிர்மாண ஒப்பந்த நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 184. கூட்டுறவுச் சங்க கிளை - பல்பொருள் விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 185. புதினப்பத்திரிகை,சஞ்சிகைகள் விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 186. தொலைக்காட்சிப்பெட்டி, வானொலிப்பெட்டி திருத்தகம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 187. மணிக்கூடுகள்,கைக்கடிகாரங்கள் திருத்தகம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 188. மின்பொருள் திருத்தகம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 189. பிளாஸ்டிக்பொருட்கள் விற்பனை நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 190. பழைய கட்டிடப் பொருட்கள் சேகரித்து விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 191 துவிச்சக்கரவண்டி திருத்தகம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 192. பனை வெல்லம் உற்பத்தி நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 193. நண்டு வளர்ப்பு நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 194. இறால் வளர்ப்பு நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 195. கடல் பாசி வளர்ப்பு நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 196. கூட்டுறவு பல்பொருள் களஞ்சியசாலை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 197. கடலட்டை வளர்ப்பு நிலையம் | 500.00 | 750.00 | 1,000.00 |

**உற்சவகால தற்காலிக உரிமக்கட்டணம்**

| *வியாபாரத்தின் தன்மை* | *தொகை* |
|---|---|
| *சிறிய வியாபாரம்* | *250.00* |
| *ஐஸ்கிறீம் கடை* | *1000.00* |
| *ஐஸ்கிறீம் வான்* | *750.00* |
| *கச்சான் கடை* | *250.00* |
| *உலோகப்பொருள் விற்பனைக்கடை* | *1000.00* |
| *அழகுசாதனப்பொருள் விற்பனைக்கடை* | *1000.00* |
| *உணவகம்* | *1000.00* |
| *தள்ளுவண்டில் வியாபாரம்* | *500.00* |
| *துவிச்சக்கரவண்டில் வியாபாரம்* | *200.00* |

*01-349/1*

---

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்*

*147 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்படும் வரி*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 147 ஆவது பிரிவின் நியதிகளின்படி வாகனம் மற்றும் மிருகங்களுக்கான வரி மேற்கூறப்பட்ட சட்டத்தின் 147 ஆம் பிரிவின் கீழ் கொடுக்கப்பட்ட அட்டவணையில் உள்ள வீத வரிகளுக்கு அமைவாக விதிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டில் அறவீடு செய்யப்பட்ட அத்தகைய வரி முறை மூலமாகவே 2019 ஆம் ஆண்டிலும் தொடரப்பட வேண்டும் என்பதுடன் அத்தகைய வரி 148(3) ஆம் பிரிவின் கீழ் ஒவ்வொரு ஆண்டு மாச்சு 31 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும் என்று 2018.11.15 ஆந் திகதிய 09 ஆம் இலக்கத் தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

*ம. ஜெயகாந்தன்,*
*தவிசாளர்,*
*ஊர்காவற்றுறை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*ஊர்காவற்றுறை,*
*2018, திசெம்பர் 07.*

| | | *ரூபா சதம்* |
|---|---|---|
| *1.* | *மோட்டார் கார்,மோட்டார் முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், கார் ரிக்ஷா, துவிச்சக்கர வண்டி தவிர்ந்த ஒவ்வொரு வாகனங்களுக்கும்* | *25.00* |
| *2.* | *ஒவ்வொரு துவிச்சக்கர வண்டி அல்லது முச்சக்கர வண்டி அல்லது துவிச்சக்கர கார்* | |
| | *அ) வர்த்தக நோக்கத்திற்காக பயன்படுத்தல்* | *18.00* |
| | *ஆ) வர்த்தக நோக்கங்கள் தவிர்ந்த ஏனைய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டால்* | *4.00* |
| *3.* | *ஒவ்வொரு வண்டிக்கும்* | *20.00* |
| *4.* | *ஒவ்வொரு கை வண்டிக்கும்* | *10.00* |
| *5.* | *ஒவ்வொரு ரிக்ஷா வண்டிக்கும்* | *7.00* |
| *6.* | *ஒவ்வொரு குதிரை அல்லது மட்டக்குதிரை அல்லது கோவேறு கழுதைக்கும்* | *15.00* |
| *7.* | *ஒவ்வொரு யானைக்கும்* | *50.00* |
| *8.* | *ஒவ்வொரு நாய்க்கும்* | *7.00* |

*இருபத்தாறு அங்குலங்களுக்கு மேற்படாத விட்டமுடைய சில்லுகளை கொண்ட பிள்ளைகளின் வண்டிகள், தள்ளு வண்டிகள் தனியார் வளவில் மாத்திரம் வர்த்தக நோக்கங்களுகாகப் பயன்படுத்தப்படாத கைவண்டிகள் என்பன கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுகின்றன.*

*இவ் அட்டவணையில் "வியாபார நோக்கங்கள்" என்பது ஏதேனும் தொழில் அல்லது வியாபாரத்துடன் தொடர்புடையதாக விற்பனைக்கோ அல்லது வேறெதற்காகவோ எவையேனும் பொருட்களை அல்லது பண்டங்களை அல்லது ஏதேனும் எழுத்திலான அல்லது அச்சிடப்பட்ட பொருட்களை கொண்டு செல்லுதல் அல்லது ஏற்றுதலை உள்ளடக்கும்.*

*01-349/2*

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம்*

*152(1) ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்படும் வரி*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 152(1) ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட தொழில்கள், உயர்தொழில்கள் மீது விதிக்கப்பட்ட இந்தவரி வருடத்திற்கு முன்னைய வருடத்தின் வரவுகளுக்கு ஏற்புடையதாக கீழ்க்குறிப்பிடப்படும் தொகைகளுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். இதில் குறிப்பிட்ட தொழில் முயற்சிகள் மேற்கொள்பவர்கள் ஒவ்வொருவரும் முந்திய ஆண்டில் அத்தொழிலை நடாத்தியதற்கான கீழ்க்காணும் ஆவண ரீதியான ஆதாரங்களை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம், கீழே தரப்பட்ட அட்டவணையில் குறித்தவரி அறவீடு செய்யப்படல் வேண்டும் என்பதுடன் 2019 மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்படல் வேண்டும் என்றும் தொடர்ந்து வரும் ஒவ்வொரு ஆண்டும் மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்படல் வேண்டும்.அவ்வாறு செலுத்தத் தவறுபவர்களுக்கு எதிராக பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் நீதி மன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்படும் என 2018.11.15 ஆந் திகதிய 10 ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

*ம. ஜெயகாந்தன்,*
*தவிசாளர்,*
*ஊர்காவற்றுறை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*ஊர்காவற்றுறை,*
*2018, திசெம்பர் 07.*

**ஆவண ரீதியான ஆதாரங்கள் பின்வருமாறு :**

*1. முந்திய ஆண்டின் தொழிலுக்கான வருமான அறிக்கை இறுதிக் கணக்கறிக்கை பிரதி ஒன்று*
*2. முந்திய ஆண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வருமான வரி செலுத்தப்பட்ட விபரங்கள் அடங்கிய பிரதி ஒன்று*

| | *I ஆம் நிரல்* | *II ஆம் நிரல்* |
|---|---|---|
| *இல.* | *வருடாந்த புரள்வு* | *தொகை ரூ. ச.* |
| I. | *ரூபா 6,000 ஐ விஞ்சாதவிடத்து* | *இல்லை* |
| II. | *ரூபா 6,000 ஐ விஞ்சினால் ரூபா 12,000 ஐ விஞ்சாதவிடத்து* | *90.00* |
| III. | *ரூபா 12,000 ஐ விஞ்சினால் ரூபா 18,750 ஐ விஞ்சாதவிடத்து* | *180.00* |
| IV. | *ரூபா 18,750 ஐ விஞ்சினால் ரூபா 75,000 ஐ விஞ்சாதவிடத்து* | *360.00* |
| V. | *ரூபா 75,000 ஐ விஞ்சினால் ரூபா 150,000 ஐ விஞ்சாதவிடத்து* | *1200.00* |
| VI. | *ரூபா 150,000 ஐ விஞ்சினால்* | *3000.00* |
| VII. | *நிதி நிறுவனம்/வங்கி/கிராமிய வங்கி/சமுர்த்தி வங்கி (ஆகக் கூடியது)* | *3000.00* |

**தொழில் முயற்சிகள் பின்வருமாறு:**

*1. தரகு முகவர்கள்*
*2. ஏல விற்பனையாளர்கள்*
*3. பணம் கடனுக்கு வழங்குபவர்களின் வியாபாரமொன்றை நடாத்தல்*
*4. அடகுப் பொருட்களை பெறும் வியாபாரமொன்றை நடாத்துதல்*
*5. ஒப்பந்தக்காரராக தொழில் நடாத்துதல்*

6. கிணறு,குழாய்க் கிணறு தோண்டும் தொழில் நடாத்துதல்
7. மின்சார தொழில் நுட்பவியலாளராக தொழில் நடாத்துதல்
8. உத்தரவு பெற்ற தனியார் நில அளவையாளராக தொழில் நடாத்துதல்
9. கட்டட வரைபட வரைஞராக தொழில் நடாத்துதல்
10. சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசாக தொழில் நடாத்துதல்
11. வழங்குநர்கள்
12. போக்குவரத்து தொழில் நடாத்துதல்
13. சாரதி பயிற்சி நிறுவனமொன்றை நடத்துதல்
14. வங்கி நிதிக்கம்பனிகள் மற்றும் காப்புறுதிக்கம்பனிகளை நடாத்தல்
15. தனியார் கல்வி நிறுவனமொன்றை நடாத்தல்
16. தனியார் பாதுகாப்பு சேவை நடாத்துதல்
17. வேலைவாய்ப்பு முகவர் வியாபாரமொன்றை நடத்தல் (உள்நாடு/வெளிநாடு)
18. நிபுணத்துவ வைத்திய சேவையொன்றினை நடாத்துதல்
19. ஆய்வுகூட வசதிகளுடன் கூடிய வியாபாரமொன்றை நடாத்துதல்
20. மருந்துகள் விற்பனை செய்யும் வியாபாரமொன்றை நடாத்துதல்
21. தனியார் மருத்துவ நிலையம் நடத்துதல்
22. தனியார் வைத்திய சேவையாளராக தொழில் நடாத்துதல்
23. விழாப்பொருட்கள் வழங்கும் இடமொன்றை நடாத்துதல்
24. வரவேற்பு மண்டபமொன்றை நடாத்துதல்
25. வீட்டு வரைபடங்களை வரையும் நிறுவனமொன்றை நடாத்துதல்
26. லொத்தர் சீட்டுக்கள் விற்பனை இடமொன்றை நடாத்துதல்
27. அதிஷ்டலாப சீட்டு(லொத்தர்) முகவராக தொழில் நடாத்துதல்
28. வாகனங்களில் நடமாடும் வியாபாரம் நடாத்துதல்
29. தொலைத்தொடர்பு நிலையங்களுக்கான கோபுர நிலையங்கள் நடாத்துதல்
30. தொலைபேசி நிலையங்கள் நடாத்துதல்
31. கட்டட நிர்மாணங்களுக்காகவும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் இயந்திர சாதனங்கள் வாடகைக்கு விடும் தொழில் நடாத்துதல்
32. அலுமினிய கதவுகள், யன்னல்கள், காட்சிப்பெட்டிகள் பொருத்தும் தொழில் நடாத்துதல்
33. மோட்டார் வாகனங்கள் விற்பனைக்கு அல்லது வாடகைக்கு விடும் தொழில் நடாத்துதல்
34. உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் தொழில் நடாத்துதல்
35. படகுகள் தயாரிப்பதற்கான தொழில் நிலையம் நடாத்துதல்
36. கள் உற்பத்தி விற்பனை நிலையம்/மதுபான உற்பத்திச்சாலை நடாத்துல்
37. அரச அங்கீகாரம் பெற்ற மொத்த மதுசாரம் சேகரிக்கும் மற்றும் விற்பனை நிலையம் நடாத்துதல்
38. கட்டடம் சுத்தம் செய்பவராக தொழில் நிலையம் நடாத்துதல்
39. வெளிநாட்டு நாணயங்கள் மாற்றுவதற்கான நிலையம் ஒன்றை நடாத்துதல்
40. தனியார் நெசவுசாலை/இயந்திரம் மூலம் புடவை உற்பத்தி நிலையம் நடாத்துதல்
41. எரிபொருள் நிரப்பு நிலையமொன்றை நடாத்துதல்
42. உராய்வு நீக்கிகள் களஞ்சியப்படுத்தல் விற்பனை செய்யும் நிலையம்
43. குளிர்களி மற்றும் அதனோடு தொடர்புபட்ட உற்பத்திகள் நிலையம் நடாத்துதல்
44. வெதுப்பக உற்பத்தி மற்றும் அதனோடு தொடர்புபட்ட உற்பத்திகள் நிலையம் நடாத்துதல்
45. இரும்பு மரத்தளபாட உற்பத்தி விற்பனை நிலையம் நடாத்துதல்
46. வாகனம் பழுதுபார்த்தல் சுத்திகரிப்பு நிலையம் நடாத்துதல்
47. அரிசி ஆலை ஒன்றை நடாத்துதல்
48. கல்லுடைக்கும் ஆலை ஒன்றை நடாத்துதல்
49. குடிநீர் நிரப்பும் நிலையமொன்றினை நடாத்துதல் மற்றும் விற்பனை செய்தல்
50. சிறப்புக் கடைத்தொகுதிகளை நடாத்துதல்
51. ஆடைத் தொழிற்சாலையொன்றினை நடாத்துதல்
52. முகவர் தபாலகமொன்றை நடாத்துதல்
53. விற்பனைக் காட்சியறையொன்றினை நடாத்துதல்
54. ஏதேனும் ஒரு பொருளை உற்பத்தி செய்யும் ஒருவராக செயற்படுதல்
55. ஏதேனும் ஒரு பொருளை விநியோகிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
56. காஸ் மொத்த விற்பனை நிலையம் நடாத்துதல்
57. தனியார் கணக்காளர் சேவை
58. அச்சகமொன்றை நடாத்துதல்

1-349/3

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபை சட்டம்*

*154 ஆம் பிரிவின் 1 ஆம் உப பிரிவின் கீழ் செலுத்தப்பட வேண்டிய காணி தொடர்பாக விதிக்கப்படும் வரி*

*1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் கீழ் ஊர்காவற்றுறை பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குள் இருக்கும் யாதாயினும் காணி ஒன்று பகிரங்க ஏல விற்பனை மூலமாகவோ, வேறு வகையிலோ ஏல விற்பனையாளர் அல்லது தரகர் அல்லது அவரது சேவையாளர் அல்லது முகவர் மூலமாக விற்கப்படுகின்றவிடத்து விற்பனையாளர் அல்லது அத்தகைய ஏல விற்பனையாளர் அல்லது தரகர் அல்லது அவரது சேவையாளர் அல்லது முகவர் அத்தகைய காணி விற்பனையின் விற்றுவரவுகளிலிருந்து அத்தகைய விற்றுவரவுத் தொகையின் ஒரு சதவீதத்திற்கு சமமானவொரு வரியை சபைக்கு செலுத்த வேண்டும் என்றும் 2019.01.01 ஆந் திகதி முதல் செலுத்தப்பட வேண்டும் என்றும் 2018.11.15 ஆந் திகதிய 11ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

*ம. ஜெயகாந்தன்,*
*தவிசாளர்,*
*ஊர்காவற்றுறை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*ஊர்காவற்றுறை,*
*2018, திசெம்பர் 07.*

*1-349/4*

---

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

தேசிய சூழல் சட்டத்தின் கீழான அறிவித்தல்

*ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்குவதற்கு 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சூழற் சட்டம் 23அ என்னும் பிரிவின் கீழான கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் 1533/16 ஆம் இலக்க 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கும் 1534/18 ஆம் இலக்க 2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 1 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கும் அமைவாக 'இ' பகுதியில் குறிப்பிட்ட விடயங்கள் உள்ளூர் அதிகார சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. பின்வரும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக எமது சபையினால் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் ஊர்காவற்றுறை பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குள் இச்சட்டத்தை அமுல்படுத்துவதோடு கீழ் வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கைத்தொழில்கள் மீது மத்திய சூழல் அதிகார சபையினால் குறித்துரைக்கப்பட்டவாறு படிவங்கள்,கட்டணங்கள்,பரீட்சித்தற் கட்டணங்கள் ஒன்றுக்கான உத்தரவுப்பத்திர கட்டணங்கள் ஆகியவற்றை விதித்து அறவிடப்படல் வேண்டும் என்பதுடன் இதன் மூலம் அறவிடப்படும் கட்டணங்கள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின்கீழ் விதித்து அறவிடப்படும் உரிமக்கட்டணங்களைவிட மேலதிகமானதும் அவற்றை எவ்விதத்திலும் பாதிக்காததுமாகும். இக்கட்டணங்கள் 2019.01.01 ஆந் திகதி முதல் தொடரப்படல் வேண்டும் என 2018.11.15ஆந் திகதிய 12ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

*ம. ஜெயகாந்தன்,*
*தவிசாளர்,*
*ஊர்காவற்றுறை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*ஊர்காவற்றுறை,*
*2018, திசெம்பர் 07.*

**அட்டவணை**

1. *எல்லா வாகன எரிபொருள் நிரப்பு நிலையங்களும்(திரவப் பெற்றோலியம் மற்றும் திரவப் பெற்றோலிய வாயு உட்பட)*
2. *பத்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்களைத் தொழிலுக்கமர்த்தியுள்ள மெழுகுவர்த்தி உற்பத்தி*
3. *பத்துக்கு மேற்பட்டவர்களும் 25 இற்குக் குறைவானவர்களுமான வேலையாட்களைத் தொழிலுக்கமர்த்தியுள்ள தேங்காய் எண்ணெய் பிரித்தெடுக்கும் கைத்தொழில்கள்*

4. பத்துக்குக் கூடுதலானவர்களும் 25 இற்குக் குறைவானவர்களுமான வேலையாட்களைத் தொழிலுக்கமர்த்தியுள்ள மதுசாரமற்ற பானவகைகள்
5. உலர் பதனீட்டு முறைத் தொழிற்பாடுகளையுடைய அரிசி ஆலை
6. ஒரு மாதத்திற்கு 1000 கிலோகிராமிலும் குறைவான உற்பத்தித்திறன் கொண்ட அரைக்கும் ஆலைகள்
7. புகையிலைக் களஞ்சியங்கள்
8. தொகுதியொன்றுக்கு 500 கிலோகிராம் அல்லது அதற்கு மேற்பட்ட கந்தகத்தூமமூட்டும் கொள்ளளவுடைய கறுவா தூமமூட்டும் கைத்தொழில்கள்
9. உணவிற்கு பயன்படுத்தப்படும் உப்பு சிப்பஞ்செய்தல், பதனிடுதல் கைத்தொழில்கள்
10. தேயிலைத் தொழிற்சாலைகள்
11. கொங்கிரீட் முன்வார்ப்புகள் கைத்தொழில்கள்
12. பொறிமுறைப்படுத்தப்பட்ட சீமெந்துக் குற்றி தயாரிக்கும் கைத்தொழில்கள்
13. நாளொன்றிற்கு 20 மெற்றிக் தொன்னுக்குக் குறைவான உற்பத்தித்திறன் கொண்ட சுண்ணாம்புச் சூளைகள்
14. இருபத்தைந்து அல்லது அதற்கு மேற்பட்ட வேலையாட்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள மட்பாண்ட அல்லது பரிசுச்சாந்து கைத்தொழில்கள்
15. எல்லா விதமான சுண்ணாம்புச் சிப்பி நொறுக்கும் கைத்தொழில்கள்
16. கூரை ஓடு மற்றும் செங்கற் சூளைகள்
17. வெடிமருந்துகளைப் பண்படுத்தும் கம்மியர் சுரங்கத் தொழில் நடவடிக்கைகளுடனான ஒற்றைத்துளை தகர்ப்புகள்
18. நாளொன்றுக்கு 50 கன மீற்றருக்கும் குறைவான அரிக்கும் ஆற்றல் கொண்ட மர ஆலைகள் அல்லது மரத்தின் போரோன் செயற்படுத்தலில் அல்லது மரத்தை பருவப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள கைத்தொழில்கள்
19. ஐந்துக்குக் கூடுதலான 25 இற்குக் குறைவான வேலையாட்கள் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள பலநோக்குத் தச்சுப் பொறிகளை பயன்படுத்தும் தச்சு வேலைக்களங்கள் அல்லது மரத்தை மெருகூட்டும் கைத்தொழில்கள் அல்லது மரவேலைக்களங்கள்
20. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டதும் 20 க்குக் குறைவானதுமான அறைகளைக் கொண்ட வதிவிட வசதியுடைய ஹோட்டல்கள் விருந்தினர் விடுதிகள், வாடிவீடுகள்
21. வாகனங்களைப் பழுதுபார்க்கும் செயற்பாடுகள் அல்லது பராமரித்தல் செயற்பாடுகளையுடைய கராஜ்கள்
22. குளிரூட்டி மற்றும் வளிச்சீராக்கி உபகரணங்களும் முறைமைகளும் பழுதுபார்த்தல், பேணல், நிறுவுதல், இணைத்து பொருத்துதல் உற்பத்தி செய்தல் ஆகிய வேலைகளை மேற்கொள்ளும் வேலைக் களங்களும் பராமரிப்பு வசதிகளும் (கராஜ்கள் உட்பட) நடமாடும் வளிச்சீராக்கிகள், போக்குவரத்துக் குளிரேற்றிகள் மற்றும் குளிரேற்றல் மீட்பு மற்றும் மீள்பயன்பாடு போன்ற சார்புடைய செயற்பாடுகள் உட்பட
23. வாகனப் பராமரிப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் இடங்கள் தவிர்ந்த கொள்கலன் சாலைகள்
24. பத்துக்கு மேற்பட்ட வேலையாட்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள எல்லாவிதமான மின்சார மற்றும் இலத்திரனியல் பொருட்கள் பழுதுபார்த்தல்
25. ஈயம் உருக்குதல் புறநீங்கலாக அச்சுக்கூடங்களும் எழுத்தச்சுப் பொறிகளும்

**பரீட்சித்தல் கட்டண விபரம்**

| இல. | முதலீடு | ரூபா சதம் |
|---|---|---|
| 1. | ரூபா 250,000.00 குறைவு | 3000.00 |
| 2. | ரூபா 250,000.00 - ரூபா 500,000.00 | 3750.00 |
| 3. | ரூபா 500,000.00 - ரூபா 1,000,000.00 | 5000.00 |
| 4. | ரூபா 1,000,000.00 க்கு கூடுதலானது | 10,000.00 |
| 5. | ரூபா 20 இலட்சத்துக்கு மேற்பட்டது | 15,000.00 |

சூழல் சுற்றாடல் உரிமத்திற்கான கட்டணம் ரூபா 4000.00 அறவிடப்படுகிறது. வழங்கப்படும் உரிமம் மூன்று வருடத்திற்கானது ஆகும்.

1-349/5

---

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

களியாட்ட வரிச் சட்டத்தின் கீழ் வரி அறவிடுதல்

களியாட்ட வரிக்கட்டளைச் சட்டத்தின் 2 இல் உள்ள உப பிரிவு 1 நியதிகளின் படி திரைப்படக்காட்சி, வித்தை காட்சி,மாயாஜால காட்சி, நாடக செயலாற்றுகை காட்சி, சங்கீத இசை நிகழ்ச்சிக்காட்சி ஆகியவற்றுக்கு அச்சிடப்படும் நுழைவுச்சீட்டு களியாட்ட வரியாக

கீழே குறிப்பிட்டுள்ளவாறு உத்தரவுப் பத்திரக்கட்டணம் பொது செயலாற்றுகைக் கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் 176 இலுள்ள பிரிவு நியதிகளின் படி செலுத்தி அனுமதிப்பத்திரம் பெறவேண்டுமென 2018.11.15 ஆந் திகதிய 13 ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ம. ஜெயகாந்தன்,
தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2018, திசெம்பர் 07.

**அட்டவணை**

| விபரம் | கட்டணம் ரூபா சதம் |
|---|---|
| சங்கீத இசை நிகழ்ச்சி,நாடக செயலாற்றுகை திரைப்படக்காட்சி, வித்தைக் காட்சி,மாயாஜாலக் காட்சி நாள் ஒன்றுக்கு | 100.00 |
| சங்கீத இசை நிகழ்ச்சி,நாடக செயலாற்றுகை திரைப்படக்காட்சி, வித்தைக் காட்சி,மாயாஜாலக் காட்சி மேலதிக ஒவ்வொரு நாளுக்கும் | 25.00 |
| நாடக செயலாற்றுகையின் பொருட்டு நாள் ஒவ்வொன்றிற்கும் | 250.00 |

மேலும் மேற்குறித்த நிகழ்வுகளுக்குரிய பற்றுச்சீட்டுக்களுக்கு கட்டணம் அறவிடப்படும் போது பற்றுச் சீட்டின் 5% கட்டணமாக அறவிடப்படும்.

01-349/6

---

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

கட்டடம் அமைத்தலுக்கான அனுமதியும் கட்டணங்கள் விதித்தலும்

பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட இடங்கள் முழுவதும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 47 தொடக்கம் 59 வரையானதுடன், சேர்த்து வீடமைப்பு அபிவிருத்திக் கட்டளைச் சட்ட (அதிகாரம் 600) நடைமுறைகளுக்கமைவாகவும்) சபை நிர்வாக எல்லைக்குள் வீடு கட்டுவதற்கு அல்லது எவையேனும் அமைப்புக்களை ஏற்படுத்துவதற்கு கட்டிட விண்ணப்பம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அதன் அனுமதியும் பரிசோதனையின் சார்பிலும், முன் அனுமதி பெறப்படாமல் அங்கீகாரம் கோரி கட்டப்படும் கட்டடங்களுக்காகவும் கீழ்க்காட்டப்படும் அட்டவணைப் பிரகாரம் 2019.01.01 இல் இருந்து கட்டணங்கள் அறவிடுவது என 2018.11.15 ஆந் திகதிய 14 ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

ம. ஜெயகாந்தன்,
தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2018, திசெம்பர் 07.

**அட்டவணை -1**

| நிலப்பரப்பு (சதுர அடி) | வசிப்பிட பாவனைக்கு ரூபா.ச | ஏனைய பாவனைக்கு ரூபா.ச |
|---|---|---|
| 01-500 | 300.00 | 400.00 |
| 501-1000 | 350.00 | 500.00 |
| 1001-2000 | 400.00 | 900.00 |
| 2001-3000 | 900.00 | 2000.00 |
| 3001-5000 | 2000.00 | 2500.00 |
| 5001-7500 | 2250.00 | 3000.00 |
| 7501-10000 | 2500.00 | 3500.00 |
| 10000ற்கு மேல் ஒவ்வொரு 100 சதுர அடிக்கும் | 50.00 | 60.00 |

**அட்டவணை - 2**

| | |
|---|---|
| எல்லைச் சுவர் ஒரு அடி நீளத்திற்கு | 4.00 |

**அட்டவணை -3**

கட்டிட விண்ணப்ப அனுமதி பெறாது அங்கீகாரத்தைக் கோரி கட்டடம் கட்டுவதற்கான தண்டம் பின்வருமாறு அறவிடப்படும். (பரிசோதனைக் கட்டணத்திற்கு மேலதிகமானது)

| நிர்மாணத்தின் தன்மை | கீழ்த்தளத்தில் ஒவ்வொரு சதுர அடிக்குமான விதிப்பனவு ரூபா.ச | மேல்தளத்தில் ஒவ்வொரு சதுர அடிக்குமான விதிப்பனவு ரூபா.ச |
|---|---|---|
| அத்திவார வேலை மட்டும் பூர்த்தியாக்கப்பட்டது | 15.00 | 15.00 |
| கூரை தவிர்ந்த நிர்மாணித்தல் | 30.00 | 30.00 |
| கூரை உட்பட நிர்மாணித்தல் | 40.00 | 40.00 |
| முழுமையாக நிர்மாணித்தல் | 75.00 | 75.00 |

**அட்டவணை - 4**

கட்டிட விண்ணப்ப அனுமதி பெறாது அங்கீகாரத்தைக் கோரி எல்லைச்சுவர் கட்டுவதற்கான தண்டம் பின்வருமாறு அறவிடப்படும்.

| | |
|---|---|
| 1. எல்லைச் சுவர் - அத்திவாரம் நிர்மாணித்தல் (ஒரு அடி நீளத்திற்கு) | 4.00 |
| 2. எல்லைச் சுவர் - முழுமையாக நிர்மாணித்தல் (ஒரு அடி நீளத்திற்கு) | 8.00 |

**அட்டவணை - 5**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 49(அ) பிரிவுக்கமைய பிரதேசசபையின் எல்லைக்குள் ஏதேனும் கட்டடத்தை, எல்லைச்சுவரை அல்லது வாசலை பிரதேசசபையின் அனுமதி இல்லாமல் அமைக்கக் கூடாது.

- ஊர்காவற்றுறை பிரதேச சபையின் வீதி ஒன்றின் அகலம் 22 அடி (வீதியின் மத்தியில் இருந்து 11 அடி) ஆகவும் வரையறுக்கப்படுவதுடன் வீதி அகலிப்பின் போது நட்ட ஈடு எதுவும் செலுத்தப்படற்பாலதாகாது என வளவுகளின் உரிமையாளர்கள் பொறுப்பேற்பு ஒன்றை எழுதி நிறைவேற்றும்போது பின்வரும் ஆதனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப எல்லைச்சுவர் அமைப்பது தொடர்பான கட்டட விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.

| ஆதனங்களின் எண்ணிக்கை (ஆகக்கூடியது) | தெருவின் ஆகக்குறைந்த அகலம் |
|---|---|
| 0-4 | 10 அடி(வீதியின் மத்தியில் இருந்து 5அடி) |
| 5-8 | 15 அடி(வீதியின் மத்தியில் இருந்து 7.5அடி) |
| 9-20 | 20 அடி(வீதியின் மத்தியில் இருந்து 10அடி) |

குறிப்பு : எல்லைச்சுவர் தொடர்பான கட்டட விண்ணப்பத்தை பரிசீலிக்கும் போது சபையின் ஆதனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப எல்லைச்சுவர் அமைய வேண்டிய எல்லையை விட ஏற்கனவே அமைக்கப்பட்ட எல்லைச்சுவர் ஒன்று கூடிய எல்லையை கொண்டிருக்குமாயின் அதுவே கவனத்தில் கொள்ளப்படும்.

கட்டடங்கள் வீதியின் மத்தியில் இருந்து 15 அடிக்கு அப்பால் அமைவது கட்டட விண்ணப்பத்தை பரிசீலிக்கும் போது கவனத்தில் கொள்ளப்படும்.

1-349/7

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

விளம்பர அறிவித்தல் கட்டணம்

*1987 ஆம் ஆண்டின் பிரதேச சபைச் சட்டத்தின் 126- 7 C பிரிவின்கீழ் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு ஏற்ப 02.02.2016 ஆந் திகதியிட்ட 1952/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வடக்கு மாகாண உள்ளூராட்சி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சரினால் பகிரங்கப்படுத்தியுள்ள (91/A, 92/A, 93/A, 94/A, 95/A, 96/A, 97/A, 98/A, 99/A) பக்கங்களில் 07.07.2017 ஆந் திகதிய 2027 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை மூலம் என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விளம்பர அறிவித்தல் தொடர்பாக, துணைவிதியின் ஏற்பாடுகளின்படி ஊர்காவற்றுறை பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் யாராயினும் ஒருவரால் ஏதேனும் தெருவின் மீது அல்லது தெருவில் நீண்டிருக்கும் வண்ணம் விளம்பர அல்லது தெருவில் இருந்து நோக்கும்போது காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பலகையினதும் வேறு தற்காலிக கட்டமைப்புக்களினதும் அல்லது எவ்வகையினதான எந்த அலங்காரத்தினதும், நிறுவுகையும் அல்லது நிறுவுகைக்கு ஏற்பாடு செய்தல் விடயத்திற்கு ஊர்காவற்றுறை பிரதேச சபையினது ஒரு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இது விடயமாக கீழ்வரும் அட்டவணையின் பிரகாரம் விளம்பரக் கட்டணங்கள் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதை இத்தால் பகிரங்கப்படுத்துகிறேன். இவ்வாறு இடப்படும் நிலையான விளம்பரங்கள் ஆண்டு தோறும் உரிய கட்டணத்தை செலுத்தி புதுப்பிக்கப்படல் வேண்டும் எனவும் 2018.11.15 ஆந் திகதிய 15 ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

ம. ஜெயகாந்தன்,
தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2018, திசெம்பர் 07.

1. சுவர் ஒன்றில் அல்லது பெயர்ப்பலகை ஒன்றில் காட்சிக்கு வைக்கும் நிரந்தர விளம்பர அறிவித்தல் ஒவ்வொரு சதுர அடிக்கும் ஒரு வருடத்திற்கு அல்லது ஒரு பகுதிக்கு (பெயர் பலகை ஒன்றில் இரு பக்கங்களிலும் அறிவித்தல் காட்சிக்கு வைக்கப்படின் இரு பக்கங்களிற்கு கட்டணம் அறவிடப்படல் வேண்டும்) - ரூபா 100.00
2. ''பெனர்'' ஒன்றில் காட்சிக்கு வைக்கப்படும் தற்காலிக அறிவித்தல் ஒவ்வொரு சதுர அடிக்கும் ஒரு மாதத்திற்கு அல்லது அதன் பகுதிக்கு - ரூபா 25.00
3. ஒரு பலகையில் அல்லது ஒரு துணைசகிதம் காட்சிக்கு வைக்கும் மின்விளக்கு ஒளியுடன் கூடிய அறிவித்தலுக்கும் ஒவ்வொரு சதுர அடிக்கும் ஒரு வருடத்திற்கு அல்லது அதன் பகுதிக்கு - 50.00
4. நிலையான வர்த்தக நிலையங்களில் விளம்பரங்களுடன் கூடிய பெயர் பலகைக்கு சதுரஅடிக்கு - 100.00

01-349/8

---

**ஊர்காவற்றுறை பிரதேசசபை**

கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துதல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவுக்கு உட்பட்ட வகையில் ஊர்காவற்றுறை பிரதேச எல்லைக்குள் ஏதாவது வீதி அல்லது அத்தகையை வீதியை சூழவுள்ள எல்லை மீது வீதியில் தவறிச் செல்லும் கால்நடைகள்,ஆடுகள் போன்ற மிருகங்களிலிருந்து பொதுமக்களுக்கும் சொத்துக்களுக்கும் ஏற்படுகின்ற சேதங்களை தடுக்கும் பொருட்டு நடவடிக்கை எடுப்பதற்கு இவ்வறிவித்தல் வர்த்தமான பிரசுரத்தில் பிரசுரிக்கப்படும் நாளிலிருந்து அறவீடுகள் விதிக்கப்படல் வேண்டும் என 2018.11.15 ஆந் திகதிய 16 ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

ம. ஜெயகாந்தன்,
தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2018, திசெம்பர் 07.

**அட்டவணை**

| விபரம் | தொகை (ரூபா ச.) |
|---|---|
| கால்நடைகளை(மாடு) பிடிப்பதற்கான விதிப்பனவு(தலை ஒன்றிற்கு) | - ரூபா 1000.00 |
| கால்நடைகளுக்கான(மாடு) தண்டம் (தலை ஒன்றிற்கு) | - ரூபா 500.00 |
| கால்நடைகளை(மாடு)பாதுகாத்தல் விதிப்பனவு-நாள் ஒன்றிற்கு (தலை ஒன்றிற்கு) | - ரூபா 200.00 |
| கால்நடைகளை(மாடு)பராமரித்தல் விதிப்பனவு-நாள் ஒன்றிற்கு (தலை ஒன்றிற்கு) | - ரூபா 250.00 |
| ஆடுகளை பிடிப்பதற்கான விதிப்பனவு(தலை ஒன்றிற்கு) | - ரூபா 500.00 |
| ஆடுகளுக்கான தண்டம் (தலை ஒன்றிற்கு) | - ரூபா 250.00 |
| ஆடுகளை பாதுகாத்தல் விதிப்பனவு-நாள் ஒன்றிற்கு | - ரூபா 100.00 |
| ஆடுகளை பராமரித்தல் விதிப்பனவு-நாள் ஒன்றிற்கு | - ரூபா 150.00 |

*01-349/9*

---

**ஊர்காவற்றுறை பிரதேசசபை**

கொண்டு திரிந்து விற்கும் (நிர்ணயிக்கப்பட்ட இடம் இல்லாமை) வியாபாரம் செய்யும்
வியாபாரிகளுக்கு வரி விதித்தல் -2019

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள்சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 1998.08.23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்கத்தின் அதிவிசேட வர்த்தமானியின் பகுதி IV (ஆ) உள்ளூராட்சி - பகுதியில் அமைச்சர் அவர்களினால் வெளியிடப்பட்டுள்ள துணை விதிகளின் கீழ் 28 ஆம் பிரிவின் கீழ் ஊர்காவற்றுறை பிரதேசசபை எல்லைக்குள் கொண்டு திரிந்து வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு கீழ்க்காட்டப்பட்ட அட்டவணைப்படி 2019.01.01 ஆந் திகதியிலிருந்து அறவீடுகள் விதிக்கப்பட வேண்டும் என 2018.11.15 ஆந் திகதிய 17 ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

ம. ஜெயகாந்தன்,
தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2018, திசெம்பர் 07.

**அட்டவணை**

| | விபரம் | ரூபா ச. |
|---|---|---|
| 1. | துவிச்சக்கர வண்டியில் ஐஸ்கிறீம், ஐஸ்பழம் விற்பனை செய்தல் (1 நாளுக்கு) | 50 00 |
| 2. | மோட்டார் சைக்கிளில் ஐஸ்கிறீம், ஐஸ்பழம் விற்பனை செய்தல் (1 நாளுக்கு) | 100 00 |
| 3. | முச்சக்கர வண்டியில் ஐஸ்கிறீம், ஐஸ்பழம் விற்பனை செய்தல் (1 நாளுக்கு) | 100 00 |
| 4. | மோட்டார் வாகனத்தில் ஐஸ்கிறீம், ஐஸ்பழம் விற்பனை செய்தல் (1 நாளுக்கு) | 200 00 |
| 5. | தயாரிக்கப்பட்ட உணவுவகை நடமாடும் வாகனத்தில்/துவிச்சக்கரவண்டியில் விற்பனை செய்தல் (01 நாளுக்கு) | 50 00 |

*01-349/10*

---

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

சபையின் தண்ணீர்க் கட்டணம், தண்ணீர் தாங்கி வாடகைக்குவிடல் கட்டணம் -2019

*2019.01.01 ஆந் திகதி முதல் தண்ணீர்தாங்கி வாடகைக்குவிடல், தண்ணீர் விநியோகத்தின் பொருட்டு விதிக்கப்படும் பின்வரும் கட்டணங்கள் அறவிடப்படல் வேண்டும் என 2018.01.15 ஆந் திகதிய 18 ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

**அட்டவணை**

| விபரம் | தொகை (ரூபா ச.) |
|---|---|
| 1000 லீற்றர் தண்ணீர் விநியோகம் செய்வதற்கான கட்டணம் | ரூபா 600 00 |
| தண்ணீர் தாங்கி- நிலுத்தியுடன் (நாள் ஒன்றுக்கு) | ரூபா 400 00 |

ம. ஜெயகாந்தன்,
தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2018, திசெம்பர் 07.

01-349/11

---

**ஊர்காவற்றுறை பிரதேசசபை**

உபபகுதிகளாக பிரிக்கப்பட்ட காணிகளின் வரைபடங்களை அங்கீகரித்தல் -2019

ஊர்காவற்றுறை பிரதேசசபை நிர்வாகத்திற்குட்பட்ட பகுதிகளில் அமைந்திருக்கும் காணிகளை உபபிரிவுகளாகப் பிரிக்கும்போது அதற்கான உபபிரிவுகளின் வரைபடங்களை அங்கீகரிப்பதற்கு காணி உறுதிப்பத்திரத்தையும் அதன் வரைபடமும் காட்டப்படும் காணியின் அளவுப்படி ஒருபரப்பு நிலத்திற்கு ரூபா 100.00 கட்டணத் தொகையை இவ்வறிவித்தல் வர்த்தமானி பிரசுரத்தில் பிரசுரிக்கப்படும் நாளிலிருந்து அறவீடு செய்வதென 2018.11.15 ஆந் திகதிய 19ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

ம. ஜெயகாந்தன்,
தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2018, திசெம்பர் 07.

3 - 349/12

---

**ஊர்காவற்றுறை பிரதேசசபை**

கற்கள், மணல், கிரவல் அள்ளும் வாகனங்களுக்கு கட்டணம் அறவிடல் -2019

2019.01.01 ஆந் திகதி முதல் விளையுறும் வண்ணம் கற்கள், மணல், கிரவல் அள்ளும் வாகனங்களுக்கு கட்டணம் பின்வருமாறு அறவீடு செய்வதென 2018.11.15 ஆந் திகதிய 20 ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என்றும் இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

ம. ஜெயகாந்தன்,
தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2018, திசெம்பர் 07.

**அட்டவணை**

| | விபரம் | தொகை (ரூபா ச.) |
|---|---|---|
| 1. | கிரவல் (3/4 கியுப்) ஒன்றிற்கு | ரூபா 150 00 |
| 2. | மணல் (3/4 கியுப்) ஒன்றிற்கு | ரூபா 150 00 |
| 3. | கல் (3/4 கியுப்) ஒன்றிற்கு | ரூபா 150 00 |
| 4. | சல்லி (3/4 கியுப்) ஒன்றிற்கு | ரூபா 150 00 |

01-349/13

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

*மிருகவதைக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 272 )17 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

*ஊர்காவற்றுறை பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் பிரதேச சபையால் சித்தி பெற்ற குத்தகையாளருக்கு வழங்கப்பட்ட எந்தவொரு இறைச்சிக் கடையும் மிருகவதைச் சட்டத்தின் (அத்தியாயம் 272) 17(2) ஆம் பகுதியின் சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, குறிப்பிட்ட அட்டவணைப் பிரகாரம் குறிப்பிட்டுள்ள திகதிகளிலும், அரசினால் பிரகடனப்படுத்தப்படும் திகதிகளிலும், என்னால் அறிவிக்கப்படும் தினங்களிலும், மிருகங்களை விற்பனை செய்தலும் விற்பனைக்காகத் தொங்கவிடப்படுதலும் இறைச்சி விற்பனை செய்யும் இடங்களைத் திறந்து வைத்தலும் அறவே தவிர்க்கப்பட வேண்டும் என 2018.11.15 ஆந் திகதிய 21 ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் அறியத்தருகின்றேன்.*

**அட்டவணை**

1. இலங்கை சுதந்திரதினம்
2. மகாசிவராத்திரி தினம்
3. வெசாக் முழு நோன்மதி தினங்கள் (அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்படும் தினங்கள் )
4. உலக மிருகதினம்
5. மாதாந்த நோன்மதி தினம்

ம. ஜெயகாந்தன்,
தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2018, திசெம்பர் 07.

01-349/14

---

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

*வாடகைக்கு அமர்த்தப்படும் வாகனங்களுக்கான கட்டணம் அறவிடுதல் - 2019*

*2019.01.01 ஆந் திகதி முதல் சபைக்கு சொந்தமான பின்வரும் வகையுடைய வாகனங்கள் வாடகைக்கு அமர்த்தப்படும் போது பின்வரும் கட்டணங்களை விதித்து அறவிடுவதென 2018.11.15 ஆந் திகதிய 22 ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

ம. ஜெயகாந்தன்,
தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2018, திசெம்பர் 07.

1. ஜேசிபி வாகனம் - ஒரு மணித்தியாலத்திற்கு அறவிடப்படும் கட்டணம்- ரூபா 3000.00
2. வீதி உருளை (ரோலர்) - (முதல் ஒன்று தொடக்கம் நான்கு மணித்தியாலத்திற்கு அறவிடப்படும் கட்டணம் - ரூபா 8000.00 அடுத்து வரும் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் ரூபா 1800.00
3. உழவு இயந்திரம் ஒரு மணித்தியாலத்திற்கு (பெட்டியுடன்) - ரூபா 500.00
4. இருசக்கர உழவு இயந்திரம் ஒரு மணித்தியாலத்திற்கு (பெட்டியுடன்) - ரூபா 250.00
5. ஹன்ரர் முதல் ஒன்று தொடக்கம் பத்து கிலோ மீற்றருக்கும் - ரூபா 1000.00 மேலதிக ஒவ்வொரு கிலோ மீற்றருக்கும் ரூபா 80.00

01-349/15

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

இடங்கள் வரையறை செய்தல் – 2019

*1987 ஆம் ஆண்டின் பிரதேச சபைச் சட்டத்தின் கீழ் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு ஏற்ப 2016.02.02 ஆந் திகதியிட்ட 1952/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வடக்கு மாகாண உள்ளூராட்சி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சரினால் பகிரங்கப்படுத்தியுள்ள 2017.07.07 ஆந் திகதிய 2027 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை மூலம் ஊர்காவற்றுறை பிரதேச சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுச்சந்தைகள் தொடர்பான அறிவித்தலில் ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு பொருத்தமாக சபையின் அதிகார எல்லைக்குள் பின்வரும் மரக்கறி, மீன் சந்தைகள் குத்தகை அடிப்படையில் வழங்கப்படுவதால் சந்தைகளில் இருந்து 1/2 Km சுற்று வட்டாரப்பகுதியில் மரக்கறி, மீன், கோழி மற்றும் கடலுணவு விற்பனை செய்வதற்கு தடைசெய்தல் என 2018.11.15 ஆந் திகதிய 23 ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

- ஊர்காவற்றுறை மரக்கறிச்சந்தை மற்றும் உழவர் சந்தை(சைக்கிள் பாதுகாப்பு நிலையம் உட்பட)
- ஊர்காவற்றுறை மீன் சந்தை
- நாரந்தனை மீன் சந்தை
- புளியங்கூடல் மரக்கறிச்சந்தை
- புளியங்கூடல் மீன் சந்தை
- தம்பாட்டி சந்தை
- அனலைதீவு மீன் சந்தை

ம. ஜெயகாந்தன்,
தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2018, திசெம்பர் 07.

01 - 349/16

---

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

நாய்கள் பதிவுக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 272) – 2019

*ஊர்காவற்றுறை பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் வளர்க்கப்படும் நாய்களுக்கு, நாய்கள் பதிவுக்கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 477) 4 ஆம் பிரிவின்படி 2019 ஆம் ஆண்டிற்கான பதிவுக்கட்டணம், அவைகள் ஆண் நாய்களோ, பெண்நாய்களோ எதுவாக இருப்பினும் நாய் ஒன்றிற்கு ரூபா 25.00 ஆக விதிப்பதென 2018.11.15 ஆந் திகதிய 24 ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

ம. ஜெயகாந்தன்,
தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2018, திசெம்பர் 07.

01-349/17

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

*ஆதன வரி விதித்து அறவிடல் - 2019*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 (1),(2),(3) ஆம் பிரிவின் கீழ் ஊர்காவற்றுறை பிரதேசசபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள கிராமங்கள் இவ் ஆண்டில் அப்பிரதேசங்கள் அடைந்துள்ள அபிவிருத்திக்கு ஏற்ப இனங்காணப்பட்டு 2019 ஆம் ஆண்டில் இருந்து ஆதனவரி அறவிடுவதற்கான முன்னாயத்த வேலைகள் மேற்கொள்வது என 2018.11.15 ஆந் திகதிய 25ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

*ம. ஜெயகாந்தன்,*
*தவிசாளர்,*
*ஊர்காவற்றுறை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*ஊர்காவற்றுறை,*
*2018, திசெம்பர் 07.*

| | |
|---|---|
| * அனலைதீவு வடக்கு | - J/37 |
| * அனலைதீவு தெற்கு | - J/38 |
| * எழுவைதீவு | - J/39 |
| * ஊர்காவற்றுறை | - J/49 |
| * பருத்தியடைப்பு | - J/50 |
| * கரம்பொன் | - J/51 |
| * கரம்பொன் கிழக்கு | - J/52 |
| * கரம்பொன் தென்கிழக்கு | - J/53 |
| * கரம்பொன் மேற்கு | - J/54 |
| * நாரந்தனை வடக்கு | - J/55 |
| * நாரந்தனை வடமேற்கு | - J/56 |
| * நாரந்தனை | - J/57 |
| * நாரந்தனை தெற்கு | - J/58 |
| * சுருவில் | - J/59 |
| * புளியங்கூடல் | - J/60 |

*01-349/18*

---

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

*கழிவுப்பொருள் துப்புரவாக்கும் சட்டம் (126 ஆம் அத்தியாயம்) கீழ் அறிவித்தல் - 2019*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு ஏற்ப 520/7 ஆம் இலக்க 1988.08.23 ஆந் திகதிய நியமத் துணைவிதியின் 9 ஆம் பிரிவினை ஏற்று கழிவுப்பொருள் துப்புரவாக்கும் சேவை வழங்கப்படுகின்ற ஏழ்மை காரணமாக பிரதேச சபையினால் விலக்களிக்கப்பட்ட இருப்பாட்சியாளர் ஒருவர் தவிர்ந்த எவையேனும் வளவுகளில் இருப்பாட்சியாளர் பிரதேச சபையினால் விதந்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய துப்புரவாக்கும் கட்டணமொன்றை பிரதேச சபைக்கு செலுத்துதல் வேண்டும் என்பதற்கு இணங்க குப்பை அகற்றப்படும் இடம் ஒன்றிற்கு கீழ் வருமாறு கட்டணமாக அறவிடுவது என 2018.11.15 ஆந் திகதிய 26 ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

*ம. ஜெயகாந்தன்,*
*தவிசாளர்,*
*ஊர்காவற்றுறை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*ஊர்காவற்றுறை,*
*2018, திசெம்பர் 07.*

**அட்டவணை**

| | வாரத்தில் ஒருநாள் | மேலதிக ஒவ்வொரு தடவைக்கும் |
|---|---|---|
| வசிப்பிட பாவனைக்கான இடம்(குடியிருப்பு) (உரைப்பை) | ரூபா 50.00 | ரூபா 50.00 |
| ஏனைய பாவனைக்கான இடம்(அரச/தனியார் நிறுவனம்) (உரைப்பை) | ரூபா 300.00 மாதாந்தம் | (வாரத்தில் ஆகக்கூடியது இரண்டு தடவை) |

விசேட கோரிக்கையின் பேரில் உழவு இயந்திரத்தால் உழவு இயந்திர பெட்டி மூலம் கழிவு அகற்றுதல் - ஒரு தடவைக்கு (ஒரு லோட்) ரூபா 1000.00 அத்துடன் உழவு இயந்திர வாடகை மணித்தியாலத்திற்கு ரூபா 500.00

01-349/19

---

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

பொது விளையாட்டு மைதானத்தை பாவிப்பதற்கான கட்டணம் அறவிடுதல் – 2019

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் கீழ் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு ஏற்ப 2016.02.02 ஆந் திகதியிட்ட 1952/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வடக்கு மாகாண உள்ளூராட்சி விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சரினால் பகிரங்கப்படுத்தியுள்ள 2017.07.07 ஆந் திகதிய 2027 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை மூலம் என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொது விளையாட்டு மைதானங்கள் பற்றிய அறிவித்தல் தொடர்பாக ஊர்காவற்றுறை பிரதேச சபையின் பொது விளையாட்டு மைதானத்திற்கான கட்டணமாக நாளொன்றுக்கு(எட்டு மணித்தியாலம்) ரூபா 1000.00ஐ மேலதிக ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் ரூபா 100.00 வீதமும் 2019.01.01 ஆந் திகதி முதல் விதித்து அறவிடுவதென 2018.11.15 ஆந் திகதிய 27ஆந் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என்றும் இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

ம. ஜெயகாந்தன்,
தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2018, திசெம்பர் 07.

1 - 349/20

---

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

ஏனைய சேவைகளுக்கான கட்டணங்கள் – 2019

2019.01.01 ஆந் திகதி முதல் ஏனைய சேவைகளுக்கான பின்வரும் கட்டணங்களை விதித்து அறவிடுவதென 2018.11.15 ஆந் திகதிய 28 ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

ம. ஜெயகாந்தன்,
தவிசாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2018, திசெம்பர் 07.

**அட்டவணை**

| *விபரம்* | *கட்டணம்* *ரூபா சதம்* |
|---|---|
| ஊர்காவற்றுறை திறந்த வெளி அரங்கினை நாளொன்றுக்கு வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்கான கட்டணம் (24 மணித்தியாலம்) | 1000.00 |
| மரக்கறி சந்தையின் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்திற்கான நாளொன்றுக்கான இட வாடகை (4X9 அடி) | 70.00 |
| மீன் சந்தையின் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்திற்கான நாளொன்றுக்கான இட வாடகை (6X2 அடி) | 60.00 |
| அனுமதிக்கப்பட்ட வியாபார நடவடிக்கைக்காக சந்தை வளாகத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் நிலத்திற்கான வாடகை (10X10 அடி) | 100.00 |

*01-349/21*

---

## ஊர்காவற்றுறை பிரதேசசபை

*நீர் விநியோக குழாய் பொருத்துவதற்காக வீதியை வெட்டுவதற்கான கட்டணம் அறவிடல் - 2018*

*2019.01.01 ஆந் திகதியிலிருந்து விளைவுறும் வண்ணம் நீர் விநியோக குழாய் பொருத்துவதற்காக, பிரதேச சபையின் அனுமதியை பெற்று வீதியை வெட்டும் போது பின்வரும் கட்டணங்களை விதித்து அறவிடுவதென 2018.11.15 ஆந் திகதிய 29 ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

*ம. ஜெயகாந்தன்,*
*தவிசாளர்,*
*ஊர்காவற்றுறை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*ஊர்காவற்றுறை,*
*2018, திசெம்பர் 07.*

**அட்டவணை**

| *விபரம்* | *கட்டணம்* *ரூபா சதம்* |
|---|---|
| வீதியின் நடைபாதை ஓரம் குழி வெட்டுதல் | 150.00 |
| வீதியின் புயத்துக்கு அப்பால் சமாந்தரமாக குழி வெட்டுதல் - ஒரு மீற்றர் தூரம் | 25.00 |
| வீதியின் புயத்தில் சமாந்தரமாக குழி வெட்டுதல் - ஒரு மீற்றர் தூரம் | 50.00 |
| 3 வருடத்திற்குள் புதிதாக புனரமைக்கப்பட்ட வீதியின் குறுக்காக குழி வெட்டுதல் | 6500.00 |
| 3 வருடத்திற்கு முன் புனரமைக்கப்பட்ட வீதியின் குறுக்காக குழி வெட்டுதல் | 3000.00 |

*01-349/22*

---

## ஊர்காவற்றுறை பிரதேச சபை

*சான்றிதழ்களுக்கும் படிவங்களுக்கும் கட்டணம் விதித்தல் - 2019*

*2019.01.01 ஆந் திகதியிலிருந்து விளைவுறும் வண்ணம் சான்றிதழ்கள், படிவங்கள் பொருட்டு பின்வரும் கட்டணங்களை விதித்து அறவிடுவதென 2018.11.15 ஆந் திகதிய 30 ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

*ம. ஜெயகாந்தன்,*
*தவிசாளர்,*
*ஊர்காவற்றுறை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*ஊர்காவற்றுறை,*
*2018, திசெம்பர் 07.*

**அட்டவணை**

| | விபரம் | கட்டணம் ரூபா சதம் |
|---|---|---|
| 1. | காணிப்பெயர் மாற்றுப்படிவக் கட்டணம் (ஒன்று) | 400.00 |
| 2. | காணிப்பெயர் மாற்றுப்படிவம் பரிசீலனைக் கட்டணம் | 400.00 |
| 3. | கட்டிட விண்ணப்பப்படிவக் கட்டணம் | 400.00 |
| 4. | குடியமர்வுச் சான்றிதழ் கட்டணம் (C.O.C) | 300.00 |
| 5. | ஆதன உரிமச் சான்றிதழ் கட்டணம் | 300.00 |
| 6. | ஆதனம் சுவீகரிக்கப்படாமைக்கான சான்றிதழ் கட்டணம் | 300.00 |
| 7. | வீதி எல்லைச் சான்றிதழ் கட்டணம் | 300.00 |
| 8. | நூலக அங்கத்தவர் விண்ணப்பப்படிவக் கட்டணம் | 30.00 |
| 9. | நூலக அங்கத்துவம் புதுப்பித்தல் கட்டணம் | 50.00 |
| 10. | படக்காட்சி, வித்தைக்காட்சி விண்ணப்பக் கட்டணம் | 200.00 |
| 11. | படவரைஞர்களாக பதிவு செய்தல் கட்டணம் | 1500.00 |
| 12. | படவரைஞர் பதிவு புதுப்பித்தல் கட்டணம் | 1000.00 |
| 13. | உத்தரவு பெற்ற நில அளவையாளராக பதிவு செய்வதற்கான கட்டணம் | 1500.00 |
| 14. | உத்தரவு பெற்ற நில அளவையாளராக பதிவு புதுப்பித்தல் செய்வதற்கான கட்டணம் | 750.00 |
| 15. | சூழல் பாதுகாப்பு உரிம விண்ணப்பப்படிவ கட்டணம் | 300.00 |
| 16. | நெல்மூட்டை ஒன்று வெளியே கொண்டு செல்வதற்கான கட்டணம் | 10.00 |
| 17. | விறகு, வைக்கோல், கிடுகு, இரண்டு சக்கர உழவு இயந்திரத்தில் கொண்டு செல்லல் | 100.00 |
| 18. | அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைபடங்களின் மேலதிக பிரதி வழங்குவதற்கான கட்டணம் | 150.00 |
| 19. | வாகனங்கள் வாடகைக்கு விடுவதற்கான விண்ணப்பப்படிவக் கட்டணம் | 20.00 |
| 20. | துவிச்சக்கர வண்டி உரிமத்திற்கான விண்ணப்பப்படிவக் கட்டணம் | 15.68 |
| 21. | மிருக வரி விண்ணப்பப்படிவக் கட்டணம் | 17.51 |
| 22. | காணி உபபிரிவிடுகையின் அனுமதிக்கான விண்ணப்பப்பத்திரம் | 250.00 |
| 23. | வியாபார உரிம விண்ணப்பப்படிவக் கட்டணம் | 100.00 |

01-349/23

---

## ஊர்காவற்றுறை பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் 153 (1) ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்படும் வரி அபிவிருத்தி செய்யப்படாத காணியின் மீதான வரி - 2019*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 153(1) ஆம் பிரிவின் கீழ் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் எல்லையினுள் அமைந்துள்ள ஏதேனும் காணி, கட்டட நோக்கங்களுக்கு அல்லது நிரந்தரமான அல்லது கிரமமான பயிர்ச்செய்கை நோக்கங்களுக்குப் பொருத்தமானதாகவிருக்கின்றவிடத்து அல்லது அத்தகைய காணியானது அத்தகைய ஏதேனும் நோக்கத்துக்கெனப் பிரதேசசபையின் அபிப்பிராயப்படி நியாயமானதாகவுள்ள செலவில் அபிவிருத்தி செய்யப்படக்கூடியதாகவிருந்து அத்தகைய காணியின் மீது கட்டடம் எதுவும் கட்டியெழுப்பப்படாதிருக்கின்றவிடத்து அல்லது உள்ளபடியாக கட்டடங்களை அடக்கியுள்ள அத்தகைய காணியின் பரப்பளவானது அத்தகைய காணியின் முழுப்பரப்பளவிற்கும் பிரதேச சபையினால் தீர்மானத்தின் மூலம் விதித்துரைக்கப்பட்ட விகிதாசாரத்தை விட குறைந்தவொரு விகிதாசாரத்தைக் கொண்டிருக்குமிடத்து அல்லது அத்தகைய காணி கிரமமான அல்லது நிரந்தரமான பயிர்ச்செய்கைக்கு உள்ளாக்கப்படாதிருக்கின்றவிடத்து ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் அக்காணியின் மூலதன இடவமைப்பு பெறுமதியின் இரண்டு சதவீதத்தை வரியாக காணியின் சொந்தக்காரரிடமிருந்து 2019.01.01 முதல் ஆண்டுதோறும் அறவிடுவதென 2018.11.15 ஆந் திகதிய 31ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என்றும் இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

ம. ஜெயகாந்தன்,
தவிசாளர்
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை,
2018, திசெம்பர் 07.

01-349/24

## **புதுக்குடியிருப்பு பிரதேச சபை**

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டம்*

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் (அத்தியாயம் 261) 3 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின் கீழ் புதுக்குடியிருப்பு பிரதேசசபை 2018.10.11 ஆந் திகதிய சபை அமர்வில் 194 ஆம் இலக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டம்*

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் (அத்தியாயம் 261) 3 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின் கீழ் புதுக்குடியிருப்பு பிரதேசசபை 2018.10.11 ஆந் திகதிய சபை அமர்வில் 194 ஆம் இலக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

### **தீர்மானம்**

*உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் அவர்களால் ஆக்கப்பட்டு 1988 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் (பகுதி IV (ஆ) உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஏற்புடையதாகும் என கௌரவ வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1994 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதிய 842 ஆம் இலக்க வர்த்தமானியில் (பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி) பிரசுரிக்கப்பட்டதுமான நியமத்துணைவிதிகள் I ஆம் பாகத்தையும் நியமத்துணைவிதிகள் II ஆம் பாகத்தின் குறித்துரைக்கப்பட்ட நியமத்துணைவிதிகள் 01 தொடக்கம் 42 வரையுள்ளவற்றையும் வடக்கு மாகாண சபையால் 2017.02.21 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2017.03.24 ஆந் திகதிய 2011/25 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக அதிவிசேட வர்த்தமானியின் IV (அ) பகுதியில் பிரிசுரிக்கப்பட்டதுமான அத்தியாயம் 1-6 வரையான வடக்கு மாகாண பிரதேச சபைகளுக்குமான நியமத் துணைவிதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான துணைவிதிகளை புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் இடப்பரப்பிற்குள் அமுல்படுத்துவதற்காக 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத்துணை விதிகள்) சட்டத்தின் (அத்தியாயம் 261) 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஏற்றுக்கொள்வது என புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் 2018.10.11 ஆந் திகதிய சபை அமர்வின் 194 ஆம் இலக்க தீர்மானம் மூலம் நிறைவேற்றப்பட்டது.*

*செ. பிறேமகாந்,*
*தவிசாளர்,*
*புதுக்குடியிருப்பு பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*புதுக்குடியிருப்பு.*

*1-440/1*

---

## **புதுக்குடியிருப்பு பிரதேச சபை**

*மிருகவதைக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 272) 17 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் - 2019*

*புதுக்குடியிருப்பு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் பிரதேச சபையால் சித்தி பெற்ற குத்தகையாளருக்கு வழங்கப்பட்ட எந்தவொரு இறைச்சிக் கடையும் மிருகவதைச் சட்டத்தின் (அத்தியாயம் 272) 17(1) பகுதியின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, குறிப்பிட்ட அட்டவணைப் பிரகாரம் குறிப்பிட்டுள்ள திகதிகளிலும், அரசினால் பிரகடனப்படுத்தப்படும் திகதிகளிலும், என்னால் இடைக்கிடை அறிவிக்கப்படும் தினங்களிலும், மிருகங்களை விற்பனை செய்தலும் விற்பனைக்காகத் தொங்கவிடப்படுதலும் இறைச்சி விற்பனை செய்யும் இடங்களைத் திறந்து வைத்தலும் அறவே தவிர்க்கப்பட வேண்டும் என அறியத்தருகின்றேன்.*

*செ. பிறேமகாந்,*
*தவிசாளர்,*
*புதுக்குடியிருப்பு பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*புதுக்குடியிருப்பு.*

**அட்டவணை**

1. இலங்கை சுதந்திர தினம்
2. மகா சிவராத்திரி தினம்
3. வெசாக் முழு நோன்மதி தினங்கள் (அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்படும் தினங்கள்)
4. உலக மிருக தினம்
5. மாதாந்த நோன்மதி தினம்
6. சபையால் விசேடமாக அறிவிக்கப்படும் நாட்கள்
7. பெரிய வெள்ளி

1- 440/2

---

**புதுக்குடியிருப்பு பிரதேச சபை**

விளம்பர அறிவித்தல் கட்டணம் - 2019

1987 ஆம் ஆண்டின் பிரதேச சபைச் சட்டத்தின் 126- 7C பிரிவின் கீழ் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு ஏற்ப 23.08.1988 ஆந் திகதியிட்ட 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரால் பகிரங்கப்படுத்தியுள்ள (62/A, 63/A,64/A,) பக்கங்களில் விளம்பர அறிவித்தல் தொடர்பாக, துணைவிதியின் ஏற்பாடுகளின்படி புதுக்குடியிருப்பு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் யாரயினும் ஒருவரால் ஏதேனும் தெருவின்மீது அல்லது தெருவில் நீண்டிருக்கும் வண்ணம் விளம்பர அல்லது தெருவில் இருந்து நோக்கும்போது காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பலவகையினதும் வேறு தற்காலிக கட்டமைப்புக்களினதும் அல்லது எவ்வகையினதான எந்த அலங்காரத்தினதும், நிறுவுகையும் அல்லது நிறுவுகைக்கு ஏற்பாடு செய்தல் விடயத்திற்கு புதுக்குடியிருப்பு பிரதேச சபையினால் ஒரு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இது விடயமாக கீழ்வரும் அட்டவணையின் பிரகாரம் விளம்பரக் கட்டணங்கள் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதை இத்தால் பகிரங்கப்படுத்துகிறேன். இவ்வாறு இடப்படும் நிலையான விளம்பரங்கள் ஆண்டு தோறும் உரிய கட்டணத்தை செலுத்தி புதுப்பிக்கப்படல் வேண்டும் எனவும் அறியத்தரப்படுகின்றது.

1. சுவர் ஒன்றில் அல்லது பெயர்ப் பலகை ஒன்றில் காட்சிக்கு வைக்கும் நிரந்தர விளம்பர அறிவித்தல் ஒவ்வொரு சதுர அடிக்கும் ஒரு வருடத்திற்கு (பெயர் பலகை ஒன்றில் இரு பக்கங்களிலும் அறிவித்தல் காட்சிக்கு வைக்கப்படின் இரு பக்கங்களிற்கு கட்டணம் அறவிடப்படல் வேண்டும் வருடத்திற்கு) - ரூபா 75.00
2. ''பெனர்'' ஒன்றில் காட்சிக்கு வைக்கப்படும் தற்காலிக அறிவித்தல் ஒவ்வொரு சதுர அடிக்கும் - ரூபா 25.00
3. ஒரு பலகையில் அல்லது ஒரு துணைசகிதம் காட்சிக்கு வைக்கும் மின்விளக்கு ஒளியுடன் கூடிய அறிவித்தலுக்கும் ஒவ்வொரு சதுர அடிக்கும் ஒரு வருடத்திற்கு - ரூபா 100.00
4. நிலையான வர்த்தக நிலையங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட விளம்பரங்களுடன் கூடிய பெயர் பலகைக்கு சதுரஅடிக்கு - ரூபா 50.00
5. நிலையான அறிவித்தல் பலகையொன்று பொது இடங்களில் காட்சிப்படுத்துவதற்கு சதுர அடிக்கு - ரூபா 150.00
6. அதிகார பிரதேசத்திற்குள் விற்பனை மேம்பாட்டு நடவடிக்கைக்கென நடமாடும் கூடம் அல்லது நடமாடும் வாகனத்தை ஈடுபடுத்துவதற்காக 4 மணி நேரம் கொண்ட காலத்திற்குள் 1000.00 உம் 4 மணி நேரம் தாண்டும் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ரூபா 200.00

செ. பிறேமகாந்,
தவிசாளர்,
புதுக்குடியிருப்பு பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
புதுக்குடியிருப்பு.

1-440/3

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை

*கட்டிட அனுமதி - 2019*

*பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட இடங்கள் முழுவதும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 47 தொடக்கம் 59 வரையானதுடன், சேர்த்து வீடமைப்பு அபிவிருத்திக் கட்டளைச் சட்ட (அதிகாரம் 600) நடைமுறைகளும் 1998.01.01 ஆந் திகதியில் இருந்து எமது பிரதேச சபைக்கு ஏற்புடையதாக அமுலுக்கு வந்ததற்கு அமைவாக எனக்குள்ள தத்துவங்களையும், அதிகாரங்களையும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் அதிகாரங்களையும் கொண்டு சபை நிர்வாக எல்லைக்குள் வீடு கட்டுவதற்கு அல்லது எவையேனும் அமைப்புக்களை ஏற்படுத்துவதற்கு கட்டிட விண்ணப்பம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அதன் பரசோதனையின் சார்பிலும், ஏனைய விடயங்கள் சார்பிலும் கீழ்க்காட்டப்படும் அட்டவணையின் பிரகாரம் 2019.01.01 இல் இருந்து கட்டணங்கள் அறவிடுவது என புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் 2018.10.11 ஆந் திகதிய சபை அமர்வின் 194 ஆம் இலக்க தீர்மானம் மூலம் நிறைவேற்றப்பட்டது.*

செ. பிறேமகாந்,
தவிசாளர்,
புதுக்குடியிருப்பு பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
புதுக்குடியிருப்பு.

**அட்டவணை**

| | | ரூபா. ச. |
|---|---|---|
| 01. | வதிவிடத்திற்கு மதில் கட்டுவதற்கு (500 சதுர அடிக்குள்) | 500.00 |
| | மேலதிக ஒவ்வொரு சதுர அடிக்கும் | 2.00 |
| 02. | வர்த்தக நோக்கத்திற்கு மதில் கட்டுவதற்கு (500 சதுர அடிக்குள்) | 500.00 |
| | மேலதிக ஒவ்வொரு சதுர அடிக்கும் | 5.00 |
| 03. | வதிவிட கட்டிடங்களுக்கு | |
| | 500 சதுர அடிக்கு மேற்படாத 1 ஆம் தளப்பரப்பைக் கொண்ட கட்டிடங்களுக்கு | 500.00 |
| | மேலதிக ஒவ்வொரு சதுர அடிக்கும் | 2.00 |
| | 2 ஆம் தளப்பரப்பைக் கொண்ட கட்டிடங்களுக்கு ஒவ்வொரு சதுர அடிக்கும் | 3.00 |
| | 3 ஆம் தளப்பரப்பைக் கொண்ட கட்டிடங்களுக்கு ஒவ்வொரு சதுர அடிக்கும் | 5.00 |
| 04. | வர்த்தக கட்டிடங்களுக்கு | |
| | 500 சதுர அடிக்கு மேற்படாத 1 ஆம் தளப்பரப்பைக் கொண்ட கட்டிடங்களுக்கு | 1000.00 |
| | மேலதிக ஒவ்வொரு சதுர அடிக்கும் | 5.00 |
| | 2 ஆம் தளப்பரப்பைக் கொண்ட கட்டிடங்களுக்கு ஒவ்வொரு சதுர அடிக்கும் | 7.00 |
| | 3 ஆம் தளப்பரப்பைக் கொண்ட கட்டிடங்களுக்கு ஒவ்வொரு சதுர அடிக்கும் | 10.00 |
| 05. | வதிவிட கட்டிட விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டு குறிப்பிட்ட கால எல்லைக்குள் பூர்த்தியாக்கப்படாமையால் மீளப்புதுப்பித்தல் கட்டணம் வருடம் ஒன்றிற்கு | 500.00 |
| 06. | வர்த்தக கட்டிட விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டு குறிப்பிட்ட கால எல்லைக்குள் பூர்த்தியாக்கப்படாமையால் மீளப்புதுப்பித்தல் கட்டணம் வருடம் ஒன்றிற்கு | 1000.00 |
| 07. | வதிவிட கட்டிடம் பூர்த்தியின் பின் குடியிருப்புச் சான்றிதழ் கோரின் அதற்கான கட்டணம் | 1000.00 |
| 08. | வர்த்தக கட்டிடம் பூர்த்தியின் பின் குடியிருப்புச் சான்றிதழ் கோரின் அதற்கான கட்டணம் | 1000.00 |
| 09. | கட்டிட விண்ணப்பப்படிவக் கட்டணம் | |
| | வதிவிடம்/வீட்டு எல்லைச்சுவர் | 200.00 |
| | வர்த்தக கட்டிடம் | 500.00 |

*1-440/4*

---

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை

*நாய்கள் பதிவுக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 272) - 2019*

*புதுக்குடியிருப்பு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் வளர்க்கப்படும் நாய்களுக்கு, நாய்கள் பதிவுக்கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 477) 4 ஆம் பிரிவின்படி 2019 ஆம் ஆண்டிற்கான பதிவுக்கட்டணம், அவைகள் ஆண் நாய்களோ, பெண் நாய்களோ எதுவாக*

இருப்பினும் நாய் ஒன்றிற்கு ரூபா 50.00 ஆக விதிக்கப்பட்டுள்ளது. இக்கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும் என புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் 2018.10.11 ஆந் திகதிய சபை அமர்வின் 194 ஆம் இலக்க தீர்மானம் மூலம் நிறைவேற்றப்பட்டது.

செ. பிறேமகாந்,
தவிசாளர்,
புதுக்குடியிருப்பு பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
புதுக்குடியிருப்பு.

1-440/5

---

**புதுக்குடியிருப்பு பிரதேச சபை**

தேசிய சூழல் சட்டத்தின் கீழான அறிவித்தல் - 2019

1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகார சபையானது 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தினதும் 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின்படி மத்திய சூழல் தவிசாளரினால் குறித்த சட்டத்தின் 26 ஆம் பிரிவிற்கமைவாகவும், உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு 2001 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் கீழ்க் காட்டப்படும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரதேச சபையின் தலைவருக்கு கையளித்ததன் கீழ் புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குள் இச்சட்டத்தை அமுல்படுத்துவதோடு, கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கைத்தொழில்கள் மீது மத்திய சூழல் அதிகாரசபையினால் குறித்துரைக்கப்பட்டவாறு, படிவங்கள், கட்டணங்கள், பரீட்சித்தற் கட்டணங்கள், உத்தரவுப் பத்திரக்கட்டணங்கள் ஆகியவை விதித்து அறவிடப்படல் வேண்டும் என இத்தால் தீர்மானித்து வெளிப்படுத்துகின்றேன். இவ் வெளிப்படுத்தல் ஆனது இதன் மூலம் அறவிடப்படும் கட்டணங்கள் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் விதித்து அறவிடப்படும் உரிமக் கட்டணங்களைவிட மேலதிகமானதும் அவற்றை எவ்விதத்திலும் பாதிக்காததுமாகும்.

செ. பிறேமகாந்,
தவிசாளர்,
புதுக்குடியிருப்பு பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
புதுக்குடியிருப்பு.

**அட்டவணை**

1. 5 இற்கு குறைவான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள சவர்க்காரம், அழுக்கு அகற்றிகள் அல்லது வேறு எவையேனும் சுத்திகரிப்பு பொருட்கள் தயாரிக்கும் கைத்தொழில்கள்.
2. 5 இற்கு குறைவான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட ஆயுர்வேத, சுதேச மருந்து உற்பத்திகள் தயாரித்தல், பிரித்தெடுத்தல் அல்லது முறைப்படுத்தலுடன் தொடர்புடைய கைத்தொழில்கள்.
3. ஈயத்தை உருக்கி எழுத்து தயாரித்தல் தவிர்ந்த அச்சகங்கள்
4. 5 இற்கு குறைவான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட பற்றிக் கைத்தொழில்கள்.
5. 5 இற்கு குறைவான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள கண்ணாடியிழையை மூலப்பொருளாக பாவித்தலுடன் தொடர்புடைய கைத்தொழில்கள்.
6. 5 இற்கு குறைவான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட சேதனக் கரைப்பான்களை பாவித்தலுடன் உலர் சலவை நடவடிக்கைகளுடன் கூடிய வர்த்தக சலவை அகங்கள்.
7. இயற்கை இழைகளை வெளிறச் செய்தல் அல்லது சாயமூட்டும் நடவடிக்கையைக் கொண்டிராத தென்னந்தும்பு ஆலைகள்.
8. 5ற்கு குறைவாக நெசவு இயந்திரங்களைக் கொண்ட நெசவுசாலைகள்.
9. 5 இற்கு மேற்பட்ட கைத்தறிகளைக் கொண்ட கைத்தறிச்சாலைகள்.
10. 5 இற்கு குறைவான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட மரக்கறி, பழம், இறைச்சி, கடல் உணவு மற்றும் பால் பதனிடுதல் கைத்தொழில்கள்.
11. 5 இற்கு குறைவான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட தேங்காய் எண்ணை பிரித்தெடுத்தல் கைத்தொழில்கள்.

12. 5 இற்கு குறைவான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட வெதுப்பக உற்பத்திகள், பிஸ்கட்டுகள், இனிப்புகள் தயாரிக்கும் கைத்தொழில்கள்.
13. 5 இற்கு குறைவான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட மதுசாரம் தவிர்ந்த பானம் தயாரிக்கும் கைத்தொழில்கள்.
14. நாளொன்றிற்கு 500 கிலோ கிராமிற்கு குறைவான உற்பத்திக் கொள்வனவு கொண்ட ஈரநடவடிக்கைகளுடன் கூடிய அரிசி ஆலைகள்.
15. உலர் நடவடிக்கைகளுடன் கூடிய அரிசி ஆலைகள். (ஈரமுறை தவிர்ந்த ஏனையவை).
16. அரைக்கும் ஆலைகள்.
17. 50 இற்கு குறைவான பறவைகளைக் கொண்டிருக்கும் கோழிப்பண்ணைகள்.
18. 5 இற்கு குறைவான விலங்குகளைக் கொண்டிருக்கும் பன்றிப்பண்ணைகள்.
19. 5 இற்கு குறைவான விலங்குகளைக் கொண்டிருக்கும் மாட்டு/ஆட்டுப்பண்ணைகள்.
20. நாளொன்றிற்கு 25 மெற்றிக் தொன்னிற்கு குறைவான உற்பத்திக் கொள்வனவு உடைய விலங்குத்தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலைகள்.
21. நாளொன்றிற்கு 50 கன மீற்றருக்கு குறைவான உற்பத்தித்திறன் கொண்ட கொங்கிறீற் கலவை நிலையங்கள்.
22. கொங்கிறீற் அச்சுக் கைத்தொழில்கள்.
23. பொறிமுறைப்படுத்தப்பட்ட சீமெந்து குற்றி தயாரித்தல் கைத்தொழில்கள்.
24. 20 மெற்றிக் தொன்னிற்கு குறைவான உற்பத்தித்திறன் கொண்ட சுண்ணாம்புச் சூளைகள்.
25. 5 இற்கு குறைவான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட மட்பாண்ட கைத்தொழில்கள்.
26. ஓடு, மற்றும் செங்கட்டிச் சூளைகள்.
27. கை உபகரணங்களைப் பாவித்து கைகளால் நொறுக்கும் நடவடிக்கைகள் தவிர்ந்த நாளொன்றிற்கு 25 கன மீற்றருக்கு குறைவான உற்பத்திக் கொள்ளளவு உடைய கருங்கல் நொருக்குதல் அல்லது பதனிடுதல் கைத்தொழில்கள்.
28. நாளொன்றிற்கு 5 மெற்றிக் தொன்னுக்கு குறைந்த உள்ளீட்டுக் கொள்ளளவு கொண்ட எரியூட்டிகள்.
29. போரான் பரிகரணம் மற்றும் மருந்தை பழுதடையாது பாதுகாத்தலுடன் தொடர்புடைய கைத்தொழில்கள்.
30. நாளொன்றிற்கு 50 கன மீற்றருக்கு குறைவான கொள்ளளவு உடைய அரியும் ஆலைகள்.
31. 3 குதிரை வலுக்களுக்கு மேற்பட்ட வலுக்களைப் பாவிக்கும் தச்சு வேலைத்தளங்கள்.
32. 5 இற்கு மேற்பட்ட வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட சமைக்கும் வசதிகளுடன் கூடிய தங்கு வசதியற்ற உல்லாச விடுதிகள்.
33. 5 இற்கு மேற்பட்டவர்களும், 20 இற்கு குறைந்தவர்களுமான தங்குநர்களுக்கு உணவு உறைவிட வசதிகள் வழங்கக்கூடிய விடுதிகள்.
34. மாற்று முறை ஒன்றிற்கு 5 இற்கு குறைவான வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள தைத்த ஆடைக் கைத்தொழில்கள்.
35. 5 இற்கு குறைந்த வேலையாட்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட கடைச்சல் பட்டறைகள், உருக்கி ஒட்டும் (வெல்டிங்) வேலைத்தளங்கள் உட்பட்ட இயந்திர வடிவமைப்புத் தொழிற்சாலைகள் இயந்திரங்கள், இயந்திரக்கருவிகள், உபகரணங்கள் தயாரித்தல் அல்லது ஒன்றிணைக்கும் கைத்தொழில்கள்.
36. பழுதுபார்த்தல், பராமரித்தல் மற்றும் தன்னியக்க வாயு நிலையங்களை ஸ்தாபித்தல் என்பவற்றை செய்யக்கூடிய வசதிகள் உள்ளிட்ட வாகனங்களைப் பழுதுபார்க்கும் அல்லது பராமரித்தல் நடவடிக்கைகள் செய்யும் வாகனம் திருத்தும் இடங்கள்.
37. சுத்திகரிப்பு நிலையம் (தரம் C)
38. 5 அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியரைப் பயன்படுத்தி மின் உபகரணங்களை பழுதுபார்க்கும் இடம்.

1-440/6

---

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை

உரிமக்கட்டணம் அறவீடு - 2019

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 147,148,149,150 (1), (2), 151,152(1), (2),153 (1), 154(1) ஆம் பிரிவுகட்கு அடக்கமாக 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை கீழே தரப்பட்ட அட்டவணையின் பிரகாரம் உரிமக்கட்டணம், தொழில் மீதான வரி அறவிடுவது எனவும் உரிமக் கட்டணங்கள்

அனைத்தும் அட்டவணையின் பிரகாரம் 2019.03.31 இற்கு முன் செலுத்தப்படல் வேண்டும் எனவும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் 2018.10.11 ஆந் திகதிய சபை அமர்வின் 194 ஆம் இலக்க தீரமானம் மூலம் நிறைவேற்றப்பட்டது.

செ. பிறேமகாந்,
தவிசாளர்,
புதுக்குடியிருப்பு பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
புதுக்குடியிருப்பு.

**அட்டவணை**

| | நிரல் I<br>கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்த பெறுமதி | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. |
| 1. | விடுதிச்சாலை ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 2. | ஹோட்டல் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 3. | தேனீர்ச்சாலை ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 4. | வெதுப்பகம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 5. | இறைச்சி விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 6. | ஐஸ் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 7. | குளிர்பான தொழிற்சாலை ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 8. | சலவை தொழிற்சாலை ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 9. | போசணைச்சாலை தொழிற்சாலை ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 10. | சிகை அலங்காரம் மற்றும் முடி திருத்தும் இடமொன்றை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 11. | மணப்பெண் அலங்கரிக்கும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 12. | ஆயுர்வேத சிகிச்சை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 13. | மேற்கத்திய சிகிச்சை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 14. | கணினி இயந்திரம் பழுதுபார்க்கும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 15. | வார்ப்பு வேலைத்தள நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 16. | வேல்டிங் வேலைத்தளம் அல்லது கிரில் வேலைத்தளம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 17. | இரும்பு வேலைத்தளம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 18. | இயந்திரம் மூலம் தச்சுத் தொழில் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 19. | கொங்கிறீற்சிலிண்டர், சீமெந்து கல் அல்லது வேறு சீமெந்துப் பொருட்கள் தயாரித்தலும் விற்பனை செய்வதுமான இடமொன்றை நடாத்திச் செல்லல். | 500.00 | 750.00 | 1,000.00 |
| 20. | மோட்டர் வாகனம் பழுதுபார்க்கும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 21. | முச்சக்கரவண்டி, மோட்டர் சைக்கிள் பழுதுபார்க்கும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல். | 500.00 | 750.00 | 1,000.00 |
| 22. | வாயு நிரப்பும் இயந்திரம், குளிர்சாதனப்பெட்டி, அதிகுளிர்சாதன இயந்திரம் மற்றும் மின்சார உபகரணங்கள் பழுதுபார்க்கும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல். | 500.00 | 750.00 | 1,000.00 |
| 23. | உர வகைகள், விவசாய இரசாயன பொருட்கள் தயாரித்தலும் விற்பனை செய்தலுமான இடமொன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 24. | கல் உடைத்தல் அல்லது கைகளினால் கல் உடைக்கும் இடமொன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 25. | கிரனைட் கல் உடைத்தல் இடமொன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | நிரல் I<br>கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்த பெறுமதி | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 26. | வாகனங்கள் சைக்கிள் மோட்டார் வாகனங்கள், சர்விஸ் நிலையமொன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 27. | மின்சத்தி மூலம் செயற்படும் அச்சகம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 28. | சுண்ணாம்புப் போறணை ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 29. | மர ஆலை ஒன்றை நடாத்திச் செல்லல். | 500.00 | 750.00 | 1,000.00 |
| 30. | தேங்காய் எண்ணெய் ஆலை ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 31. | காய்கறிகள் மற்றும் பழவகைகள் விற்பனை செய்யும் இடமொன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 32. | பற்சிகிற்சை நிலையம், பல்கட்டும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 33. | பப்படம், அல்லது நூடில்ஸ் தயாரித்தல், விற்பனை செய்தலுக்கான இடமொன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 34. | முட்டை விற்பனை நிலையம் நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 35. | பலகாரங்கள் தயாரித்தல், விற்பனை செய்தலுக்கான இடமொன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 36. | ஐஸ் கிறீம், யோகட்.குளிர்பான பக்கட் தயாரித்தல் விற்பனை செய்தலுக்கான இடமொன்றை நடாத்திச் செல்லல். | 500.00 | 750.00 | 1,000.00 |
| 37. | கருவாடு, ஜாடி உலர்தல் அல்லது விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 38. | களஞ்சியப்படுத்தல் நிலையம் நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 39. | கோழிப்பண்ணை ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 40. | 15 இற்கு மேற்பட்ட எண்ணிக்கையுடைய ஆட்டுப்பண்ணை ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 41. | அரைக்கும் ஆலை ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 42. | தென்னந்தும்பு மற்றும் மரத் தொழில் வியாபாரம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 43. | புடவைகளுக்கு நிறந்தீட்டும் (பற்றிக்) ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 44. | தங்க ஆபரணங்கள் தயாரித்தலும் விற்பனை செய்தலுமான இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 45. | மெத்தை தயாரிக்கும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 46. | சவர்க்காரம் தயாரிக்கும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 47. | மரணச் சடங்கிற்கான சேவைகள் வழங்கும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 48. | வெள்ளி, தங்கம் போன்றவற்றை மூலப்பொருளாக கொண்டு ஆபரணங்களை தயாரிக்கும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 49. | வீட்டு உபகரணங்கள் விற்பனை செய்யும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 50. | வாகனம் ஓட்டுதல் பயிற்றுவித்தல் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 51. | மணிப்பொருட்கள், வாசனைத்திரவியங்கள் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 52. | மோட்டார் சைக்கிள் அல்லது முச்சக்கரவண்டி உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | நிரல் I<br>கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்த பெறுமதி | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 53. | மெசின் உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 54. | கைப்பணிப் பொருட்கள் விற்பனை செய்யும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 55. | செதுக்கல் பொருட்கள் விற்பனை செய்யும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 56. | வெற்றிலை, பாக்கு, தும்புத்தடி ஈர்க்குமாறு, மட்பாண்ட பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 57. | உற்சவசாலை, சினிமாக்கொட்டகை ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 58. | பிளாஸ்ரிக் பொருட்கள் மற்றும் பொலித்தீன் பொருட்கள் களஞ்சியப்படுத்தலும் விற்பனை செய்தலுமான இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 59. | சோதிடம் பார்க்கும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 60. | உற்சவ பொருட்களை வாடகைக்கு வழங்குதலும் விற்பனை செய்தலுமான இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 61. | புடவை விற்பனை (புடவைக் கடை) இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 62. | தைத்து முடிக்கப்பட்ட ஆடைகளை விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 63. | தையல் தைக்கும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 64. | மணப்பெண் அலங்கரிக்கும் உபகரணங்களை வாடகைக்கு வழங்கும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 65. | எழுது பொருட்கள், சஞ்சிகைகள், பாடசாலை உபகரணங்கள் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 66. | படம் சட்டகமிடும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 67. | உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி தொடர்புகள் பெற்றுக் கொள்ளும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 68. | சீடீ, விசீடீ, வீடியோ நாடகங்கள், பாடல்கள் பதியும் நாடாக்கள் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 69. | புகைப்படச்சாலை (ஸ்டுடியோ) ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 70. | கட்டடப்பொருட்கள் விற்பனை செய்யும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 71. | பூசைப் பொருட்கள் களஞ்சியத்திலும் விற்பனை செய்தலுமான இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 72. | குஷன் வேலைத்தளம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 73. | அளவை நிறுவை உபகரணங்கள் பழுதுபார்க்கும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 74. | இசைப்பொருட்கள் வாடகைக்கு வழங்கல், தயாரித்தல், விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 75. | துரித நிழற்படப்பிரதி எடுத்தல், ரோணியோ பண்ணுதல் லெமினேட் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 76. | வெளிநாட்டு காசோலை (நாணயம்) மாற்றும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 77. | கணினி இயந்திரம் விற்பனையும், பயிற்சி வகுப்புகளும் நடாத்தும் இடம் | 500.00 | 750.00 | 1,000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | | |
|---|---|---|---|
| *கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை* | *இடத்தின் வருடாந்த பெறுமதி* | | |
| | *750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* |
| | *ரூபா ச.* | *ரூபா ச.* | *ரூபா ச.* |
| 78. குளிர்சாதனம், அதிகுளிர் சாதனம், வாயு நிரப்பும் இயந்திரம் விற்பனை செய்தலும் பாடத்திட்டம் நடாத்துதலும் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 79. பத்திரிகை அறிவித்தல்களை வெளியிடும் முகவர் நிலையம் அல்லது பத்திரிகை விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 80. படகு அல்லது தோணி சேவை ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 81. ஜுக்கி மெசின் பயிற்றுவித்தல் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 82. செலியுலர் தொலைபேசி மற்றும் தொலைபேசி உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 83. நீரில் மூழ்குவதற்கான உபகரணங்கள் வாடகைக்கு விடலும் விற்பனைக்குமான நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 84. பீங்கான் பொருட்கள் மற்றும் செரமிக் பொருட்கள் (போசிலோன் சில்லர் பொருட்கள் உட்பட) களஞ்சியப்படுத்தலும் விற்பனை செய்தலும் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 85. விளையாட்டுப்பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 86. லொத்தர் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல். | 500.00 | 750.00 | 1,000.00 |
| 87. அறிவித்தல் பலகை வரைதல், பிளாஸ்டிக் இலக்க இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 88. பூங்கன்றுகள் மருந்து மூலிகை வகைகள் மற்றும் வேறு வகையான கன்றுகள் விற்பனையும் பயிரிடலும் காட்சிக்கு வைத்தலுமான இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 89. தாதிகள் பயிற்றுவிக்கும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல். | 500.00 | 750.00 | 1,000.00 |
| 90. அலுமினியப்பொருட்கள் விற்பனை செய்தலும் களஞ்சியப்படுத்தலுமான இடம் ஒன்றை நடாத்திச் செல்லல். | 500.00 | 750.00 | 1,000.00 |
| 91. கொண்டாட்டங்களுக்கு வழங்கும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல். | 500.00 | 750.00 | 1,000.00 |
| 92. இணையத்தள வசதிகளுடனான இடம் ஒன்றை நடாத்திச் செல்லல். | 500.00 | 750.00 | 1,000.00 |
| 93. மரவேலைப்பாடு மற்றும் பொய்முகங்கள் தயாரிக்கும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல். | 500.00 | 750.00 | 1,000.00 |
| 94. மின்இயக்கி (ஜெனரேட்டர்) இயந்திரம் வாடகைக்கு வழங்கும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல். | 500.00 | 750.00 | 1,000.00 |
| 95. மட்பாண்டங்கள் தயாரித்தல் களஞ்சியப்படுத்தல் விற்பனை செய்தல் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல். | 500.00 | 750.00 | 1,000.00 |
| 96. தனியார் கல்வி நிறுவனம் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல். | 500.00 | 750.00 | 1,000.00 |
| 97. பழைய இரும்புப் பொருட்கள், பிளாஸ்டிக் போத்தல்கள், வெற்றுப் போத்தல்கள், பத்திரிகைகள் பைகள் களஞ்சியப்படுத்தலும் விற்பனை செய்தலுக்கான இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 98. செல்லப்பிராணிகள் (மீன்) வளர்த்தலும் விற்பனை செய்தலும் மீன் தொட்டி விற்பனை செய்தலுக்கான இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 99. செவ்விளநீர், இளநீர், தேங்காய், வாழைக்குலை, கீரைவகைகள் விற்பனை செய்தலுக்கான இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 100. தற்காலிக வியாபார விருத்தி நிகழ்ச்சித்திட்டம் விற்பனை செய்தலுக்கான இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* <br> *கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை* | *நிரல் II* <br> *இடத்தின் வருடாந்த பெறுமதி* | | |
|---|---|---|---|
| | *750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்* | *1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* |
| | *ரூபா ச.* | *ரூபா ச.* | *ரூபா ச.* |
| 101. தளபாட பொருட்கள் மற்றும் வேறு எந்தவொரு விற்பனைத்தளம் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 102. தளபாட வியாபார சந்தை ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 103. விறகு மடுவமொன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 104. தென்னம்பராளை கூரைக்கான, பலகைகள் விற்பனை செய்தலுக்கான இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 105. பொதுவான தச்சுத்தொழில் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல். | 500.00 | 750.00 | 1,000.00 |
| 106. ஸ்கிறீன் பிறின்டிங் வேலைத்தளம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 107. மோட்டார் கொயில் சுற்றும் இடமொன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 108. படகு எஞ்சின் பழுதுபார்த்தலும் விற்பனைசெய்தலுக்கான இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 109. கை இயந்திரம் மூலம் தொழிற்படும் அச்சகம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 110. செதுக்கல் பொருட்கள், கைப்பணிப்பொருட்கள் தயாரித்தலும் அவ்வாறான இடம் ஒன்றை நடாத்திச் செல்லலும் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 111. கரங்களினால் பாதணி தயாரிக்கும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 112. கற்சிலை, நினைவுச் சின்னப்பலகை தயாரித்தலும் விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| செய்தலுக்கான இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 113. உலோகப் பொருட்கள் விற்பனை செய்யும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 114. டயர், டியூப் வோல்கனைசு செய்யும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 115. பித்தளைப் பொருட்கள் விற்பனை செய்யும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 116. மெழுகுவர்த்தி தயாரிக்கும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 117. சைக்கிள் பழுதுபார்க்கும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 118. ஆபரணங்களுக்கு நிறந்தீட்டும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 119. மின்கலம் சார்ச் பண்ணுதலும் விற்பனை செய்தலுக்குமான இடமொன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 120. தும்பு சார்ந்த உற்பத்திகள் விற்பனை செய்யும் இடமொன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 121. புத்தகங்கள் சஞ்சிகைகள் மற்றும் எழுது பொருட்கள் காட்சிப்படுத்தலும் வழங்கலும் விற்பனை செய்தலும் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 122. நிர்மாண வேலைகளுக்கு அவசியமான பொருட்களை வாடகைக்கு வழங்கும் இடம் ஒன்றை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 123. மின்சார உபகரணங்கள் வாடகைக்கு வழங்கலும் விற்பனை செய்தலுக்குமான இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 124. தோல் மற்றும் உற்பத்திப் பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 125. தேங்காய்ச் சிரட்டை கொள்வனவு செய்தலும் சிரட்டைக் கரி விற்பனை செய்தலுமான இடம் ஒன்றை நடாத்திச் செல்லல். | 500.00 | 750.00 | 1,000.00 |
| 126. பட்டு சார்ந்த உற்பத்தியும் விற்பனைக்குமான இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| நிரல் I<br>கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்த பெறுமதி | | |
|---|---|---|---|
| | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 127. கணினி நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிக்கும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 128. விளம்பரப்பெயர்ப்பலகை தயாரித்தல் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 129. மணிக்கூடு திருத்தும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 130. பால் சேகரிக்கும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 131. பதிவாளர் நொத்தாரிசு இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 132. வீட்டுத்தளபாடம் விவசாய கைத்தொழில் பொருட்களை வைத்து காட்சிப்படுத்தும் இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 133. சைக்கிள் வண்டி வியாபார நிலைய இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 134. பல்பொருள் விற்பனை நிலைய இடம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 135. வானொலி கணினி தொலைக்காட்சி உதிரிப்பாக விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 136. ஒலி, ஒளி அமைப்பு கருவிகளை வாடகைக்கு விடும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 137. தீந்தை பூசும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 138. சீமெந்து வியாபார நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 139. உல்லாச பயணச்சீட்டு விற்பனை முகவர் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 140. தகர வேலை செய்யும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 141. உவர் நீர் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 142. நன்னீர் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 143. நிலக்கடலை சோளம் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 144. நடைபாதை வியாபாரம் ஒன்றை நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 145. நடமாடும் வியாபாரங்களை நடாத்திச் செல்லுதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 146. இங்கு குறிப்பிடப்படாத ஏனைய வியாபாரங்கள் | 500.00 | 750.00 | 1,000.00 |

**உயர்தொழில் உரிமைக்கட்டணம்**

| | |
|---|---|
| 147. கட்டட ஒப்பந்தகாரர் | 3,000.00 |
| 148. நடை அடைவு பிடிப்பாளர் | 3,000.00 |
| 149. மோட்டார் வாகன விற்பனை நிலையம் | 3,000.00 |
| 150. சாரதி பயிற்சிப் பாடசாலை | 3,000.00 |
| 151. வங்கிச்சேவை | 3,000.00 |
| 152. இயந்திர பாவனையுடன் கூடிய கருங்கல் சேவை | 3,000.00 |
| 153. பூட்சிட்டி | 3,000.00 |
| 154. மதுபான விற்பனை நிலையம் | 3,000.00 |
| 155. தங்குமிட வசதி | 3,000.00 |
| 156. ஆடைத் தொழிற்சாலை | 3,000.00 |
| 157. நிதி நிறுவனங்கள் | 3,000.00 |
| 158. எரிபொருள் நிரப்பு நிலையம் | 3,000.00 |
| 159. புகைப்பரிசோதனை செய்யம் இடம் | 3,000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | *நிரல் II* இடத்தின் வருடாந்த பெறுமதி | | |
|---|---|---|---|
| | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 160. மணல் விநியோக நிலையம் | | | 3,000.00 |
| 161. இங்கு குறிப்பிடப்பட்ட வகைக்குள் அடங்காதவை | | | 3,000.00 |
| 162. தொலைத்தொடர்பு கோபுரம் | | | 3,000.00 |
| 163. தும்பு ஆலை ஒன்றை நடாத்திச் செல்லுதல் | | | 3,000.00 |
| 164. வங்கி உரிமம் (ஒவ்வொரு தனித்தனி சேவைக்கானது) | | | 3,000.00 |
| 165. தொலைத்தொடர்பு உரிமக்கட்டணம் | | | 5,000.00 |
| **உற்சவகால விசேட உரிமக்கட்டணம்** | | | |
| 166. சிறியவியாபாரம் | | | 200.00 |
| 167. ஐஸ்கிறீம் கடை | | | 1,000.00 |
| 168. ஐஸ்கிறீம் வான் | | | 1,000.00 |
| 169. கச்சான் கடை | | | 100.00 |
| 170. உலோகப்பொருள் விற்பனைக்கடை | | | 1,000.00 |
| 171. அழகுசாதனப்பொருள் விற்பனைக்கடை | | | 1,000.00 |
| 172. உணவகம் | | | 100.00 |
| 173. தள்ளுவண்டில் வியாபாரம் | | | 200.00 |
| 174. துவிச்சக்கர வண்டில் வியாபாரம் | | | 200.00 |
| 175. நடமாடும் வெதுப்பக உற்பத்தி | | | 500.00 |

1-440/7

---

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை

உள்ளூராட்சி மன்றங்களின் மறுசீரமைப்பு சுற்று நிருபத்திற்கு அமைவாக
தொலைத்தொடர்பு கம்பங்களின் அறவீடு - 2019

புதுக்குடியிருப்பு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குட்பட்ட சகல வீதி ஓரங்களில் நாட்டப்படும் தொலைபேசிக் கம்பங்கள் அனைத்திற்கும் அறவிடற்பாலதான வியாபார அறவீட்டுக் கட்டணங்கள் அறவிடுவது தொடர்பாக, உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்றறிக்கை இணைப்பு 1 இல் பிரேரணைகளும் மற்றும் சிபார்சுகளும் என்ற பகுதியில் நிதி முகாமைத்துவம் வருமானங்களும் என்ற உப தலைப்பின் கீழ் இல. 6.5 பகுதியில் தரப்பட்ட நிபந்தனைகளுக்கு அடங்கலாக தொலைபேசி கம்பங்களுக்கு வியாபார அறவீட்டு வரி ஒன்றை அறவீடு செய்வதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையினால் 2018.10.11 ஆந் திகதிய சபை அமர்வின் 194 ஆம் இலக்க தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்டதுடன் கீழ்வரும் அட்டவணையின் பிரகாரம் தொலைத்தொடர்பு கம்பங்களுக்கான வரியினை 2019.01.01 ஆந் திகதியில் இருந்து புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு செலுத்துதல் வேண்டும் என இத்தால் பகிரங்கப்படுத்தி அறியத்தரப்படுகின்றது.

செ. பிறேமகாந்,
தவிசாளர்,
புதுக்குடியிருப்பு பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
புதுக்குடியிருப்பு.

**அட்டவணை**

| | | ரூ. ச. |
|---|---|---|
| 01. | 20 மீற்றர் கொண்ட தொலைபேசி கம்பம் ஒன்றிற்கு வருடம் ஒருதடவை | 2000.00 |
| 02. | 24 அடி கொண்ட தொலைபேசி அமைவு பரிசோதனைக் கட்டணம் (ஆரம்பக்கட்டணம்) | 150.00 |

1-440/8

---

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை

செய்முறைக்கட்டணங்கள், சேவைக்கட்டணங்கள் மேவுதல் அங்கீகாரத்துக்கான அனுமதிக்கட்டணங்கள் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு உரித்தான சொத்துக்களும் பிரதேச சபையினால் வழங்கப்படும் சேவைகளுக்கான கட்டணங்கள் அறவிடல் - 2019

புதுக்குடியிருப்பு பிரதேச சபையினால் 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் பதினோராம் திகதி நடாத்தப்பட்ட சபை அமர்வின் போது பின்வரும் பிரேரணைகள் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

செ. பிறேமகாந்,
தவிசாளர்,
புதுக்குடியிருப்பு பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
புதுக்குடியிருப்பு.

**தீர்மானம்**

புதுக்குடியிருப்பு பிரதேச சபை அதிகார பிரதேசத்துக்குள் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளும் காணி அறவிடப்படுகின்ற செயல்முறைக்கட்டணங்கள், சேவைக்கட்டணங்கள் மேவுதல் அங்கீகாரத்துக்கான அனுமதிக்கட்டணங்கள் நகர அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தின் அதிகாரங்களை செயற்படுத்தும் அதிகார பிரதேசங்களுக்கு பொதுவாக உரித்தாகும் பிரதேச சபைக்கு உரித்தாகும் சொத்துக்கள் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை மூலம் வழங்கப்படும் சேவைகளுக்காகவும் 2019 ஆம் ஆண்டின் கீழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளபடி, கட்டணம் அறவிடுவதற்கு புதுக்குடியிருப்பு பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

| | தன்மை | அறவீடு ரூபா ச. |
|---|---|---|
| **தொலைத்தொடர்பு உரிமக்கட்டணம்** | | |
| 01. | உயரம் 5.20 மீற்றர் வரை | 20,000.00 |
| 02. | உயரம் 20மீற்றர் மேற்பட்ட அனைத்தும் ஒவ்வொரு மீற்றருக்கும் 100.00 ரூபா வீதம் | |
| **விசேட அபிவிருத்திக் கட்டணம்** | | |
| 03. | சிறியளவிலான 5 மில்லியன் ரூபாவிலும் குறைந்த கருத்திட்டம் | 200,000.00 |
| **பரிசீலணை கட்டணம்** | | |
| 04. | தொலைத்தொடர்பு கோபுரங்களின் பரிசீலணைக் கட்டணம் | 10,000.00 |

1-440/9

---

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை

கழிவுப்பொருள் துப்புரவாக்கும் சட்டம் (126 ஆம் அத்தியாயம்) கீழ் அறிவித்தல் - 2019

1987 ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு ஏற்ப 1024 ஆம் இலக்க 17.04.1998 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட 520/7 ஆம் இலக்க 23.08.1988 ஆந் திகதிய நியமனத் துணைவிதியின் 9 ஆம் பிரிவில் "கழிவுப்பொருள் துப்புரவாக்கும் சேவை வழங்கப்படுகின்ற ஏழ்மை காரணமாக பிரதேச சபையினால் விலக்களிக்கப்பட்ட இருப்பாட்சியாளர் ஒருவர் தவிர்ந்த எவையேனும் வளவுகளில் இருப்பாட்சியாளர் பிரதேச சபையினால் விதந்துரைக்கப்படக்

கூடியவாறான அத்தகைய துப்புரவாக்கும் கட்டணமொன்றை பிரதேச சபைக்கு மாதம் தோறும் செலுத்துதல் வேண்டும் என்பதற்கு இணங்க குப்பை அகற்றப்படும் இருப்பிடம் ஒன்றிற்கு மாதாந்தம் ரூபா 60.00 கட்டணமாக அறவிடுவது என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

செ. பிறேமகாந்,
தவிசாளர்,
புதுக்குடியிருப்பு பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
புதுக்குடியிருப்பு.

| | | |
|---|---|---|
| 01. | தனியார் வதிவிடங்களுக்கு கழிவுகளுக்கு ஏற்ப | ரூபா 100.00-1,000.00 |
| 01. | கடைகள், தேனீர்ச்சாலைகள் கழிவுகளின் அளவிற்கு ஏற்ப | ரூபா 200.00-1,800.00 |
| 02. | அரச தனியார் நிறுவனங்களுக்கு மாதம் ஒன்றிற்கு | ரூபா 200.00-3,000.00 |
| 03. | ஹோட்டல் தரத்திலான உணவகங்கள் மாதம் ஒன்றிற்கு | ரூபா 2,000.00-5,000.00 |
| 04. | சிகை அலங்கார நிலையத்திற்கு (01 உரப்பை) | 300.00 |

1-440/10

---

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை

### ஆதனவரி விதித்து அறவிடல் - 2019

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 (1), (2), (3) ஆம் பிரிவின் கீழ் புதுக்குடியிருப்பு பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கிராமங்கள் இவ் ஆண்டில் அப்பிரதேசங்கள் அடைந்துள்ள அபிவிருத்திக்கு ஏற்ப இனங்காணப்பட்டு எதிர்வரும் ஆண்டுகளில் ஆதனவரி அறவிடுவதற்கான முன்னாயத்தவேலைகள் மேற்கொள்வது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

செ. பிறேமகாந்,
தவிசாளர்,
புதுக்குடியிருப்பு பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
புதுக்குடியிருப்பு.

01. கோம்பாவில்
02. புதுக்குடியிருப்பு கிழக்கு
03. புதுக்குடியிருப்பு மேற்கு

1-440/11

---

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை

### வாகனங்கள் மீதான வரி அறவிடல் - 2019

1987 ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 148 (4) ஆம் அட்டவணையின் அடக்கமாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் எல்லைக்குள் 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை வாகன தரிப்பிடக் கட்டணம் கீழ்வருமாறு அறவிடுவது என புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் 2018.10.11 ஆந் திகதிய சபை அமர்வின் 194 ஆம் இலக்க தீர்மானம் மூலம் நிறைவேற்றப்பட்டது. என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

செ. பிறேமகாந்,
தவிசாளர்,
புதுக்குடியிருப்பு பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
புதுக்குடியிருப்பு.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 01. | முச்சக்கர வண்டி தரிப்பிடம் மீதானவரி (மாதாந்தம்) | 300.00 |
| 02. | இரு சக்கர உழவு இயந்திரம் தரிப்பிடம் மீதான வரி (மாதாந்தம்) | 300.00 |
| 03. | நான்கு சக்கர உழவு இயந்திரம் பெட்டியுடன் தரிப்பிடம் மீதான வரி (மாதாந்தம்) | 300.00 |
| 04. | பார ஊர்தி தரிப்பிடம் மீதானவரி (நாளொன்றுக்கு) | 200.00 |
| 05. | பேருந்து தரிப்பிடம் மீதானவரி (நாளொன்றுக்கு) | 150.00 |

*1-440/12*

---

**புதுக்குடியிருப்பு பிரதேச சபை**

வாகனங்கள் மீதான வரி அறவிடல் - 2019

*1987 ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 148 (4) ஆம் அட்டவணையின் அடக்கமாக 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை துவிச்சக்கர வண்டி உரிமக் கட்டணத்தினை ரூபா 20.00 ஆக அறவிடுவது என, புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் 2018.10.11 ஆந் திகதிய சபை அமர்வின் 194 ஆம் இலக்க தீர்மானம் மூலம் நிறைவேற்றப்பட்டது.*

படிவம் 16.00
உரிமத்தகடு 4.00

செ. பிறேமகாந்,
தவிசாளர்,
புதுக்குடியிருப்பு பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
புதுக்குடியிருப்பு.

*1-440/13*

---

**புதுக்குடியிருப்பு பிரதேச சபை**

அசைவற்ற சொத்துக்களுக்கான வரி அறவிடல் - 2019

*1987 ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 18 (ஆ) பாகம் 11இ அட்டவணையின் அடக்கமாக எனக்கு கையளிக்கப்பட்ட தத்துவங்களுக்கு ஏற்ப புதுக்குடியிருப்பு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் காணப்படும் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களையும், சொத்துக்களையும், பொறுப்புக்கள் என்பவற்றையும் உரித்தாக்கல் தொடர்பில், எமது சபைக்குட்பட்ட மூலப்பொருட்களை அகழ்ந்து செல்வோரிடம் இருந்து ''விசேட அபிவிருத்திக் கட்டணம்'' ஒன்றினை கீழ் வருமாறு அறவிடுவதென 2018.10.11 ஆந் திகதிய சபை அமர்வின் 194 ஆம் இலக்க தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்டது என இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

செ. பிறேமகாந்,
தவிசாளர்,
புதுக்குடியிருப்பு பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
புதுக்குடியிருப்பு.

| இல. | தன்மை | அறவீடு ரூபா. ச. |
|---|---|---|
| 01. | ஒரு கீப் கல்லு ஏற்றிச் செல்வதற்கு | 350.00 |
| 02. | ஒரு கீப் கிரவல் ஏற்றிச் செல்வதற்கு | 150.00 |
| 03. | ஒரு கீப் மணல் ஏற்றிச் செல்வதற்கு | 150.00 |

1-440/14

---

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை

கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தல் - 2019

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 66 ஆம் பிரிவுக்கு உட்பட்ட வகையில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பிரதான வீதிகளில் நடமாடும் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்கு 2018.10.11 ஆந் திகதிய சபை தவிசாளரின் 194 ஆம் இலக்க தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்டது என இத்தால் அறியத்தரப்படுகின்றது. பிரதான வீதியை உள்ளடக்கிய நகர்ப்பகுதியில் பகல், இரவு நேரங்களில் கட்டாக்காலி கால்நடைகள் நடமாடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய வீதிகளில் இரவு வேளையில் நடமாடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.

கட்டாக்காலியாக பிடிபடும் கால்நடைகள் ஒவ்வொன்றுக்கும் தண்டப்பணத்தொகை ரூபா 2,000.00 சிறிய கால்நடைகள் 1000.00 உம் பராமரிப்பு செலவாக ஒரு நாளைக்கு ரூபா 200.00 உம் அறவிடப்படும்.

செ. பிறேமகாந்,
தவிசாளர்,
புதுக்குடியிருப்பு பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
புதுக்குடியிருப்பு.

1-440/15

---

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை

களியாட்ட வரி - 2019

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவுக்கு உட்பட்ட வகையில் புதுக்குடியிருப்பு பிரதேச எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் களியாட்ட விழாக்கள் கொண்டாடப்படும் போது பின்வரும் தொகைகள் அறவிடப்படுவதாக 2018.10.11 ஆந் திகதிய சபைச் செயலாளரின் 194 ஆம் இலக்க தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்டது என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

நாள் ஒன்றுக்கு (8 மணித்தியாலயம்) ரூபா 1,500.00-2,000.00

செ. பிறேமகாந்,
தவிசாளர்,
புதுக்குடியிருப்பு பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
புதுக்குடியிருப்பு.

1-440/16

**புதுக்குடியிருப்பு பிரதேச சபை**

*இடங்கள் தெரிவு செய்தல் - 2019*

*புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் பின்வரும் இடங்கள் நடைபாதை வியாபாரம் மேற்கொள்வதற்கு 2018.10.11 ஆந் திகதிய சபை தவிசாளரின் 194 ஆம் இலக்க தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்டது என இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

*செ. பிறேமகாந்,*
*தவிசாளர்,*
*புதுக்குடியிருப்பு பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*புதுக்குடியிருப்பு.*

**நடமாடும் மற்றும் ஒரு நாளுக்குட்பட்ட வியாபார நடவடிக்கைகளுக்கு**

*புதுக்குடியிருப்பு பஸ் தரிப்பு நிலையம்*
*றெட்பானா சந்தையடி*
*ஒட்டுசுட்டான் சந்தை உட்பகுதி*
*மாங்குளம் சந்தை உட்பகுதி*

**வாகனதரிப்பிடம் (முச்சக்கர வண்டி) புதுக்குடியிருப்பு உப அலுவலகம்**

*றெட்பானா சந்தி*
*உடையார்கட்டு சந்தி*
*மூங்கிலாறு*
*புதுக்குடியிருப்பு சந்தி*
*துர்க்கா வீதி சந்தி*
*தேவிபுரம் சந்தி*
*புதுக்குடியிருப்பு வைத்தியசாலை முன்பாக*
*சுதந்திரபுர சந்தி*
*தேராவில் சந்தி*
*இரணைப்பாலை சந்தி*
*வள்ளிபுனம் பாடசாலை முன்பாக*
*புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு முன்பாக*

**ஒலுமடு உப அலுவலகம்**

*மாங்குளம் நகர்ப்பகுதி*
*திருமுறுகண்டி ஆலய பகுதி*
*மாங்குளம் புதிய குடியிருப்பு சந்தி*
*மாங்குளம் புதிய கொலனி சந்தி*
*புகையிரத நிலைய தரிப்பிடம்*
*திருமுறிகண்டி பல்கலைக்கழக வீதி*

**ஒட்டுசுட்டான் உப அலுவலகம்**

*ஒட்டுசுட்டான் சந்தையடி*
*ஒட்டுசுட்டான் கோயிலடிச் சந்தி*
*கற்சிலைமடு சந்தி*
*ஒட்டுசுட்டான் பழைய நீர்ப்பாசன சந்தி*

**திண்மக்கழிவு புதைக்கும் இடம்**

*மன்னாகண்டல்*
*18 ஆம் பிரிவு பழைய முறுகண்டி*
*ஒட்டுசுட்டான் பெரிய இத்திமடு வீதி*

*1-440/17*

---

**புதுக்குடியிருப்பு பிரதேச சபை**

இடங்கள் வரையறை செய்தல் - 2019

*புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் மரக்கறி, இறைச்சி மற்றும் மீன் சந்தைகள் குத்தகை அடிப்படையில் வழங்கப்படுவதால் சந்தைகளில் இருந்து 1.5 Km சுற்றுவட்டாரப்பகுதியில் மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள் மற்றும் இறைச்சி வகைகள் வியாபாரம் செய்வதற்கு தடைசெய்தல் என 2018.10.11 ஆந் திகதிய சபை அமர்வின் 194 ஆம் இலக்க தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்டது என இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

செ. பிறேமகாந்,
தவிசாளர்,
புதுக்குடியிருப்பு பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
புதுக்குடியிருப்பு.

*1-440/18*

---

**புதுக்குடியிருப்பு பிரதேச சபை**

*கழிவுநீர் அகற்றுவதற்கான கட்டணம் அறவிடல் - 2019*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 95 ஆம் இலக்க அட்டவணையின் அடக்கமாக எனக்கு கையளிக்கப்பட்ட தத்துவங்களுக்கு ஏற்ப புதுக்குடியிருப்பு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் காணப்படும் வீட்டு, நிறுவனங்களின் மலகூடங்களின் கழிவுகளை எமது வாகனங்களான கலி அம்பியர் மூலம் அகற்றுவது தொடர்பில் கட்டணம் ஒன்றினை 2019.01.01 ஆந் திகதியில் இருந்து கீழ்வருமாறு அறவிடுவதெனக் கடந்த 2018.10.11 ஆந் திகதிய சபை அமர்வின் 194 ஆம் இலக்க தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்டது என்பதை இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

செ. பிறேமகாந்,
தவிசாளர்,
புதுக்குடியிருப்பு பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
புதுக்குடியிருப்பு.

**அட்டவணை**

| இல. | தன்மை | அறவீடு ரூபா சதம் |
|---|---|---|
| 01. | 3000 லீற்றர் கொள்ளளவுடைய கலி அம்பியர் மூலம் கழிவுநீர் அகற்றல் கட்டணம் (உப அலுவலக நிர்வாக பரப்பெல்லைக்கு உள்ளான 5Km இற்கு உட்பட்டபகுதிகள்) | 3,000.00 |
| | மேலதிக ஒவ்வொரு 1 Km இற்கும் | 50.00 |
| 02. | 5000 லீற்றர் கொள்ளளவுடைய கலிஅம்பியர்மூலம் கழிவுநீர் அகற்றல் கட்டணம் (உப அலுவலக நிர்வாக பரப்பெல்லைக்கு வெளியில் 5Km க்கு உட்பட்ட பகுதிகள் | 5,000.00 |
| | மேலதிக ஒவ்வொரு 1 Km இற்கும் | 50.00 |

*1-440/19*

**புதுக்குடியிருப்பு பிரதேச சபை**

*1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின்*
*குடிநீர் விநியோகிப்பதற்கான கட்டணம் அறவிடல் – 2019*

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களின் அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட 1989.01.20 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இலக்கம் 547/1 இனுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் IV (ஆ) பிரிவில் வெளியிடப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட துணைவிதியின் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 2ஆவது பிரிவின் 3ஆவது உப பிரிவிற்கிணங்க எனக்கு கையளிக்கப்பட்ட தத்துவங்களுக்கு ஏற்ப புதுக்குடியிருப்பு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் காணப்படும் வீட்டு, நிறுவனங்களின் தேவைகளுக்கு எமது நீர் பௌசர்கள் மூலம் குடிநீர் வாடகைக்கு விநியோகிப்பது தொடர்பில் கட்டணம் ஒன்றினை 2019.01.01. ஆந் திகதியில் இருந்து கீழ்வருமாறு அறவிடுவதென கடந்த 2018.10.11 ஆந் திகதிய சபை தவிசாளர் 194 ஆம் இலக்க தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்டது என்பதை இத்தால் பகிரங்கப்படுத்தி அறியத்தரப்படுகின்றது.*

*செ. பிறேமகாந்,*
*தவிசாளர்,*
*புதுக்குடியிருப்பு பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*புதுக்குடியிருப்பு.*

***அட்டவணை***

| *இல.* | *தன்மை* | *அறவீடு ரூபா சதம்* |
|---|---|---|
| *01.* | *பௌசர்கள் மூலம் குடிநீர் வாடகைக்கு விநியோகித்தல் கட்டணம் (உப அலுவலக நிர்வாக பரப்பெல்லைக்கு உள்ளான 5Km க்கு உட்பட்ட பகுதிகள் லீற்றர் ஒன்றுக்கு)* | *ஐம்பது சதம் (0.50 சதம்) படி)* |
| *02.* | *பௌசர்கள் மூலம் குடிநீர் வாடகைக்கு விநியோகித்தல் கட்டணம் (உப அலுவலக நிர்வாக பரப்பெல்லைக்குள் 5Km க்கு அப்பால் உள்ள பகுதிகள் 1Km க்கு மேலதிக ரூபா 50.00)* | |

*1-440 /20*

---

**புதுக்குடியிருப்பு பிரதேச சபை**

*வாகனங்கள் மீதான வாடகை வரி அறவிடுதல் – 2019*

*1987 ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 148 (4) ஆம் அட்டவணையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை பின்வருமாறு கட்டணத்தை அறவிடுவதென கடந்த 2018.10.11 ஆந் திகதிய சபை அமர்வின் 194 ஆம் இலக்க தீர்மானம் மூலம் நிறைவேற்றப்பட்டது என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

*செ. பிறேமகாந்,*
*தவிசாளர்,*
*புதுக்குடியிருப்பு பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*புதுக்குடியிருப்பு.*

**அட்டவணை**

**01. வாகனங்கள்**

| | | |
|---|---|---|
| 01. | மோட்டர் கிரேட்டர் (ஒரு மணித்தியாலத்திற்கு) (அலுவலகத்திலிருந்து புறப்பட்டு மீள அலுவலகம் வரும் வரை) | 4,000.00 |
| 02. | ஜேசிபி (ஒரு மணித்தியாலத்திற்கு (அலுவலகத்திலிருந்து புறப்பட்டு மீள அலுவலகம் வரும் வரை) | 3,000.00 |
| 03. | (ரோலர் (ஒரு மணித்தியாலத்திற்கு) | 3,000.00 |
| | ஏற்றுக்கூலி | 1,500.00 |
| | ஒருவழி போக்குவரத்து கட்டணமாக கிலோ மீற்றர் ஒன்றிற்கு | 50.00 |

**02. புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு சொந்தமான மண்டபத்தை வாடகைக்கு விடல்**

| | |
|---|---|
| 5 மணித்தியாலத்திற்குள் | 2,000.00 |
| மேலதிக ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் | 200.00 |

**03. பொது விளையாட்டு மைதானம்**

| | |
|---|---|
| இன்னிசை விழா | 5000.00 |
| விளம்பர நடவடிக்கை 5 மணித்தியாலத்திற்குள் | 3000.00 |
| மேலதிக ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் | 500.00 |
| வாடகைக்கு விடும் போது 2000.00 வைப்புத் தொகையாகப் பெற்று மீள வழங்கப்படுதல் | |

**04. நீர் கொள்கலன், தாங்கிகள் வாடகைக்கு விடல்**

| | |
|---|---|
| நாளொன்றுக்கான 1000 L, வெற்று கொள்கலனுடன் கொள்கலன் தாங்கி | 500.00 |
| நாளொன்றுக்கான 2000 L, வெற்று கொள்கலனுடன் கொள்கலன் தாங்கி | 800.00 |

1-440/21

---

## கொழும்பு மாநகர சபை

வாடகை வரி அறவிடுதல் - 2019

1979 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மற்றும் 1985 ஆம் ஆண்டின் மாநகர சபை திருத்தல் சட்டங்களினால் திருத்தியமைக்கப்பட்ட மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 247அ, 247ஆ, 247 இ, மற்றும் 247உ ஆகிய பிரிவுகளின் பிரகாரம் கொழும்பு மாநகர சபையினால் 2019 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் வரி அறவிடுதல்.

2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி நடாத்தப்பட்ட மாநகர சபையின் இல. 543 ஐக் கொண்ட சபைத்தீர்மானத்தின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டுக்கு மற்றும் அதன் பின்னரும் செய்யப்படுகின்ற திருத்தங்களை உரிய முறையில் பொது மக்கள் அறிந்து கொள்வதற்காக வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பகிரங்கப்படுத்தப்படும் வரை கொழும்பு மாநகர சபையினால் விதித்து அறவிடுவதற்காக இருக்கின்ற வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் தொழிற்சாலை தொடர்பான விடயங்களின் அல்லது வர்த்தக வியாபார விடயங்களின் வரி அறவிடுதல் தொடர்பான கட்டண முறையொன்று கீழே தரப்பட்டுள்ள உப ஆவணத்தில் (1), (2), (3), (4), என முறையே எல்லோரும் அறிந்து கொள்வதற்காக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2019 ஆம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய இந்த அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் வரி 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எம். டீ. எம் இக்பால்,
பிரதி மாநகர முதல்வர்,
கொழும்பு மாநகர சபை.

கொழும்பு மாநகர சபை,
நகர மண்டபம்,
கொழும்பு 07.
2019, சனவரி 04.

**அட்டவணை இல. 01**

*247அ பிரிவின் கீழ் உள்ள அனுமதிப்பத்திர அறவீடு*

| *அனுமதிப்பத்திர அறவீட்டு வாய்ப்பாடு இருப்பிடத்தின் வருடாந்த பெறுமதி* | *அனுமதிப்பத்திர அறவீடு ரூபா சதம்* |
|---|---|
| *1 முதல் 20,000.00 வரை* | *ரூ. 1,000.00* |
| *20,001.00 முதல் 30,000.00 வரை* | *ரூ. 2,000.00* |
| *30,001.00 முதல் 40,000.00 வரை* | *ரூ. 3,000.00* |
| *40,001.00 முதல் 50,000.00 வரை* | *ரூ. 4,000.00* |
| *50,001.00 அதற்கு மேல்* | *ரூ. 5,000.00* |

(ஆ) இருப்பிடத்தில் அனுமதிப்பத்திரம் பெற்றக் கொள்ளக்கூடிய செயலாற்றும் நடவடிக்கை தொடர்பான பட்டியல்

1. காரீயம் தயாரித்தல் மற்றும் தரம் பிரித்தல்
2. காரீயம் களஞ்சியப்படுத்தல்
3. பசளை உற்பத்தி செய்தல்
4. பசளை களஞ்சியப்படுத்தல்
5. மிருக தோல்களை களஞ்சியப்படுத்தல்
6. மாசி 250 கிலோ கிராமுக்கு அதிகமாக
7. கோழிகள் வைத்திருத்தல்
8. கருங்கற்கள் அல்லது கபொக் கற்களை தோண்டுதல்
9. பொரளு கற்கள் தோண்டுதல்
10. மாடு அல்லது குதிரை மடுவம் வைத்திருத்தல்
11. மிருக வைத்தியசாலை நடாத்துதல்
12. இறப்பர் தயாரிப்பு
13. மைகா சுத்தப்படுத்தல்
14. செம்மறி ஆடு அல்லது ஆடுகள் 10 அல்லது அதற்கு அதிகமானவற்றை பண்ணை அல்லது மடுவம் நடாத்துதல்.
15. ஓடு, கொங்கிறீட், குழாய் அல்லது இதர கொங்கிறீட் பொருட்களை உற்பத்தி செய்தல்
16. கருவாப்பட்டை, தும்பு, கருவாடு, கந்தகம் ஆகியவற்றின் புகையைக் கொண்டு தயாரித்தல்
17. சீமேந்து 1250 கிலோ கிராமுக்கு அதிகமாக களஞ்சியப்படுத்தல்
18. ஒட்டுப்பால் அரைத்தல் அல்லது உலர வைத்தல்
19. ட்ரங்க்பெட்டிகள் அல்லது சூட்கேசுகள் உற்பத்தி செய்தல்
20. இன்ஜெக்டர் பம்களை சுத்தம் செய்யும் நிலையத்தை நடாத்தி வரல்
21. கிருமி நாசினி உற்பத்தி செய்தல்
22. டயர் மீள் நிரப்புதல் அல்லது கட்டா வெட்டும் இடத்தை நடாத்துதல்
23. கருவா 50 கிலோ கிராமிற்கு அதிகமாக களஞ்சியப்படுத்தல்
24. கொக்கோ 500 கிலோ கிராமிற்கு அதிகமாக களஞ்சியப்படுத்தல்
25. மரத்தளபாடங்களை உற்பத்தி செய்யும் அல்லது களஞ்சியப்படுத்தும் இடத்தை நடாத்துதல்
26. மாணிக்கக் கற்களை வெட்டுதல் அல்லது டயமனட் மெருகேற்றல் (மாணிக்க வியாபாரிகளால்)
27. அதிகாரம் பெற்ற வியாபாரிகளால் இறப்பர் களஞ்சியப்படுத்தல்
28. கொன்கிரீட் அல்லது மண் குழாய்களை களஞ்சியப்படுத்தல்
29. பிரம்புப் பொருட்களை உற்பத்தி செய்தல் அல்லது அவற்றை களஞ்சியப்படுத்தல்
30. இயந்திரத்தினால் இயங்கும் துணி ஆலையை நடாத்துதல்
31. மா அல்லது பலசரக்கு பொருட்களை அரைத்தல்
32. வர்த்தக நோக்கத்திற்கான மிருக உணவுகள் கிலோ கிராம் 1,000 க்கு அதிகமான தானியங்களை களஞ்சியப்படுத்தல் (கூட்டுறவு களஞ்சியங்களை தவிர்ந்து)
33. இறப்பர் பொருட்களை உற்பத்தி செய்தல்
34. சுறா துடுப்புக்களைத் தயாரித்தல் அல்லது களஞ்சியப்படுத்தல்
35. இயந்திரத்தினால் எலும்புகளை அரைத்தல்
36. பொலித்தீன், சலோலைட் அல்லது பெர்ஸ் பெக்ஸ் உற்பத்தி செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தல்
37. 25 லீற்றருக்கு அதிகமான அல்லது 20 கிலோ கிராமிற்கு அதிகமான அமில வர்க்கம் (எசிட்) அல்லது

இரசாயனப் பொருட்களை களஞ்சியப்படுத்தல்
38. பாதணிகள்/பாதணி பாகங்கள் அல்லது சப்பாத்துக்கள் உற்பத்தி செய்தல்
39. மெழுகுதிரி உற்பத்தி செய்தல்
40. வாயு சக்தியினால் அல்லது நீர் சக்தியினால் அல்லது மின் சக்தியினால் அல்லது இயந்திரத்தினால் மரம் வெட்டுதல்
41. குளிர்பானங்கள் /பழப்பானங்கள்/சோஸ் வகைகள் தயாரித்தல்
42. கொப்பரா களஞ்சியத்தை வைத்திருத்தல்
43. இயந்திரத்தினால் தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்தல்
44. இயந்திரத்தினால் நல்லெண்ணெய் உற்பத்தி செய்தல்
45. எண்ணெய் எடுப்பதற்காக செக்கு அல்லது கையினால் இயக்கும் ஆலையை நடாத்ததல்
46. துணி வகைகளை உற்பத்தி செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தல்
47. தீப்பெட்டிகள் தயாரித்தல்
48. பஞ்சு களஞ்சியப்படுத்துதல்
49. 225 லீற்றர்களுக்கு அதிகமான தேங்காய் எண்ணெய் களஞ்சியப்படுத்தல்
50. மெத்திலிட் ஸ்பிரிட் வகைகளை களஞ்சியப்படுத்துதல்
51. எஸிட்லின் அல்லது ஒக்ஸிஜன் உற்பத்தி செய்தல்
52. 500 ஓடுகளுக்கு அதிகமாக களஞ்சியப்படுத்தலுக்கான களஞ்சியம் அல்லது முற்றத்தை நடாத்துதல்
53. 250 செங்கற்களுக்கு அதிகமாக களஞ்சியப்படுத்தல் அல்லது முற்றத்தை நடாத்துதுல்
54. 250 கபொக் கற்களுக்கு அதிகமாக களஞ்சியப்படுத்தல் அல்லது முற்றத்தை நடாத்துதல்
55. சிகரெட் உற்பத்தி செய்தல்
56. பீடிகள் அல்லது சுரட்டுகள் உற்பத்தி செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தல் அல்லது விற்பனை செய்தல்
57. 250 கிலோ கிராம் அளவை விட அதிகமான மரப்பெட்டிகளை களஞ்சியப்படுத்தல்
58. தும்பு உற்பத்தி செய்தல்
59. இனிப்புப்பண்டங்களை உற்பத்தி செய்தல்
60. கரி அல்லது தேங்காய் சிரட்டைகள் 50 கிலோ கிராமிற்கு அதிகமாக களஞ்சியப்படுத்தல்
61. படகு அல்லது தெப்பத்தை தயாரித்தல்
62. மரப்பெட்டிகளைத் தயாரித்தல் அல்லது திருத்துதல்
63. மோட்டார் வாகனங்களை திருத்தும் கராஜ் ஒன்றைத்தவிர இரும்புத் தொழிற்சாலையை நடாத்துதல்
64. மோட்டார் வாகனங்களை திருத்தும் கராஜ் ஒன்றைத்தவிர ஒக்ஸிங் வெல்டிங் மற்றும் மின்சார தொழிற்சாலையை நடாத்துதுல்
65. மோட்டார் வாகனங்களை திருத்தும் கராஜ் ஒன்றை நடாத்துதல்
66. மோட்டார் வாகனங்களை சர்விஸ் செய்யும் இடம் ஒன்றை நடாத்துதல்
67. இயந்திரத்தினால் செயற்படுத்தும் அச்சகம் ஒன்றை நடாத்துதல் (ஊழியர்கள் 25 பேர்கள் அல்லது அதற்கும் அதிகமாக)
68. தேங்காய் எண்ணெய் அல்லது எந்த இனமான எண்ணெய்யாயினும் 50 லீற்றருக்கு அதிகமாக களஞ்சியப்படுத்துதல்
69. கெந்தகம் அல்லது கெந்தகத்தூள் 50 கிலோ கிராமிற்கு அதிகமாக களஞ்சியப்படுத்துதல்
70. வர்ணப்பூச்சு அல்லது வார்னிஸ் உற்பத்தி செய்தல்
71. ரவைகள் 100 இற்கு அதிகமாக களஞ்சியப்படுத்துதல்
72. தும்பு/மெத்தை/தலையணை/குசன் ஆகியன உற்பத்தி செய்தல் களஞ்சியப்படுத்துதல்
73. புதிய டயர்கள் அல்லது டியுப்புக்கள் 50 இற்கு அதிகமாக களஞ்சியப்படுத்தல்
74. ஸ்பிரே வர்ணப்பூச்சு இடத்தை நடாத்துதல்
75. மின்சார சக்தியைத் தவிர இயந்திரத்தினால் செயற்படும் குளிர்சாதனப் பெட்டி அல்லது குளிரூட்டிகளை திருத்தும் இடத்தை நடாத்துதல்
76. மின் சக்தியினால் இயங்கும் தையல் தபானத்தை நடாத்துதல்
77. சேட் கழுத்துப்பட்டை மற்றும் கைகள் தயாரிக்கும் தாபனத்தை நடத்துதல்
78. மோட்டார், வாகனங்களைத் திருத்தும் கராஜ் ஒன்றைத் தவிர இயந்திரோபாயத்தினால் இலக்ரோ பிளேட்டிங் செய்யும் தாபனத்தை நடாத்துதல்
79. கேஸ் நிலக்கரி கேஸ் உற்பத்தி செய்தல், களஞ்சியப்படுத்தல், விற்பனை செய்தல்
80. காரியமில வாயு உற்பத்தி செய்தல்
81. இரும்பு சீட்களை உருக்குதல்
82. வெடி மருந்துகளை களஞ்சியப்படுத்தல்
83. வெடி மருந்து தூள்கள் இரண்டு கிலோ கிராமுக்கு அதிகமாக களஞ்சியப்படுத்தல்
84. கொழுப்பு, மெழுகு, பிசின் ஆகியவற்றைக் களஞ்சியப்படுத்தல்
85. தள மெருகு உற்பத்தி செய்தல்

86. தார் சுத்தப்படுத்தும் இடத்தை நடாத்துதல்
87. குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் குளிரூட்டி இயந்திரத்தை திருத்துவதற்காகவும் மீளவும் தயாரிக்கவும் மற்றும் பராமரிப்பதற்கும் பரிசீலனை செய்வதற்கும் உரிய இடத்தை நடாத்துதல்
88. மோட்டார் வண்டிகளைப் பொருத்தும் தாபனத்தை நடாத்துதல்
89. மோட்டார் சைக்கிள் அல்லது ஸ்கூட்டர்களைப் பொருத்தும் தாபனத்தை நடாத்துதல்
90. மிருக இறைச்சிக் கழிவுகளையும் மற்றும் மிருக கொழுப்பு சூடேற்றல்
91. சவர்க்காரம் உற்பத்தி செய்தல் தொடர்பான இடத்தை நடாத்துதல்
92. எண்ணெய் சூடேற்றும் இடத்தை நடாத்துதல்
93. துணி சாயம் செய்யும் இடத்தை நடாத்தல்
94. தோல்பதனிடும் இடத்தை நடாத்துதல்
95. தேசிய மருந்துகளை கொண்டு பானங்கள் தயாரித்தல்
96. சவ் உற்பத்தி செய்தல்
97. வெடி மருந்துகள் உற்பத்தி செய்தல்
98. வெடிபொருட்களை உற்பத்தி செய்தல்
99. வைக்கோல் களங்சியப்படுத்தல்
100. எலும்புகள் களங்சியப்படுத்தல்
101. தீ பற்றிக் கொள்ளும் சிறு எண்ணெய் களஞ்சியப்படுத்துவதற்கான களஞ்சியம் அல்லது முற்றம்
102. பப்படம் உற்பத்தி செய்தல்
103. உணவகத்தை நடாத்துதல்
104. விருத்தினர் விடுதி ஒன்றை நடாத்துதல்
105. பால்பட்டி ஒன்றை நடாத்துதல்
106. தானியங்கள் விற்பனை செய்யும் இடத்தை நடாத்துதல்
107. வர்ணப்பூச்சு அல்லது வார்ணிஸ் உற்பத்தி செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தல்
108. புண்ணாக்கு கிலோ கிராம் 1000க்கு அதிகமாக களஞ்சியப்படுத்தல்
109. புண்ணாக்கு தவிர இதர மிருக உணவுகள் கிலோ கிராம் 1000க்கு அதிகமாக களஞ்சியப்படுத்தல்
110. கையினால் இயக்கும் அச்சகம் ஒன்றை நடாத்துதல்
111. பசளை, சுண்ணாம்பு, காரீயம் உபயோகித்த சாக்குப்பைகள் களஞ்சியப்படுத்தல், சுத்தம் செய்தல் அல்லது திருத்துதல்
112. பாக்கு சுத்தம் செய்தல்
113. சிரட்டைக்கரி 50 கிலோ கிராம் களஞ்சியப்படுத்தல் அல்லது அது தொடர்பான கைத்தொழிற்சாலை ஒன்றை நடாத்துதல்
114. பழைய இரும்பு களஞ்சியப்படுத்தும் நிலையத்தை நடாத்துதல்
115. க்ளு, பசை, வர்க்கங்களை தயாரித்தல் மற்றும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
116. பட்டறிகளை (மின்கலம்) மீள் நிரப்புதல் அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையத்தை நடாத்துதல்
117. வெற்று போத்தல்கள் 100 இற்கு அதிகமானவற்றை களஞ்சியப்படுத்தும் நிலையத்தை நடாத்துதல்
118. சவப்பெட்டிகள் உற்பதி செய்தல் மற்றும் அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையத்தை நடாத்துதல்
119. கற்பூரம் உற்பத்தி செய்யும் நிலையத்தை நடாத்துதல்
120. பசளை, சுண்ணாம்பு, காரீயம் போன்றவற்றை இடுவதற்காக பாவிக்கப்படாத சாக்குகள் 100 இற்கு கூடுதலானவற்றை களஞ்சியப்படுத்தல்
121. பாவித்த இறப்பர் டயர்கள், டியூப்கள் ஆகியவற்றை 100 இற்கு கூடுதலானவற்றை களஞ்சியப்படுத்தல்
122. பாவித்த ஆடைகளை களஞ்சியப்படுத்தல்
123. புதிய மற்றும்/அல்லது பழைய கடதாசிகளை கிலோ கிராம் 250 இற்கு கூடுதலானவற்றை களஞ்சியப்படுத்தல்
124. இயந்திர மயமாக்கத்தினால் செயலாற்றப்படாத மின்முலாம் பூசுதல் இகுரொமியம் முலாம் பூசுதல்
125. தங்க முலாம் பூசுதல் அல்லது செம்பு முலாம் பூசும் நிலையத்தை நடாத்துதல்
126. விறகு மடுவம் ஒன்றை நடாத்துதல்
127. கருப்பட்டி உற்பத்தி செய்தல் மற்றும்/அல்லது களஞ்சியப்பத்தல்
128. இயந்திரமயத்தினால் செயலாற்றும் அச்சகம் ஒன்றை நடாத்துதல் (ஊழியர் தொகை 25 இக்கு குறையாமல்)
129. பம்பாய் வெங்காயம் கிலோ கிராம் 250 இற்கு கூடுதலாக களஞ்சியப்படுத்தல்
130. உருளைக்கிழங்கு கிலோ கிராம் 250 இற்கு கூடுதலாக களஞ்சியப்படுத்தல்
131. கருவாடு கிலோ கிராம் 500 இற்கு கூடுதலாக களஞ்சியப்படுத்தல்
132. ஜாடி கிலோ கிராம் 500 இற்கு கூடுதலாக களஞ்சியப்படுத்தல்
133. ஆடைகள் மெருகேற்றும் நிலையத்தை நடாத்துதல்
134. கோப்பி அல்லது தேனீர்ச்சாலையை நடாத்துதல்

135. சாப்பாட்டுக்கடை ஒன்றை நடாத்துதல் அல்லது உணவகம் ஒன்றை நடாத்துதல்
நலன்புரி அங்கத்தவர்களுக்கு மாத்திரம் அனமதிப்பத்திரம் இலவசம்)

136. விருந்தினர் விடுதி ஒன்றை நடாத்துதல்
137. உணவகம் ஒன்றை நடாத்துததல்
138. வெதுப்பகம் ஒன்றை நடாத்துதல்
139. முடிதிருத்தும் நிலையம் ஒன்றை மற்றும் அலங்காரப்படுத்தும் நிலையம் ஒன்றை நடாத்துதல்
140. சலவை செய்யும் நிலையத்தை நடாத்துதல் /மசாஜ் நிலையம் தவிர
141. சுண்ணாம்பு களஞ்சியப்படுத்தல்
142. டயர், டியூப்புகள், வொல்கனைஸ் செய்யம் நிலையத்தை நடாத்துதல்
143. கிடங்குகள் பலவற்றை நடாத்துதல்
144. சீனி களஞ்சியப்படுத்தல் மற்றும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
145. சோள மா களஞ்சியப்படுத்தல் மற்றம் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
146. அலுமினிய உபகரணங்கள் உற்பத்தி செய்யும் நிலையத்தை நடாத்துதல்
147. இயந்திரத்தினால் அல்லது மின்சக்தியினால் அல்லது வாயு சக்தியினால் செயல்படுத்தும் எந்தவிதத்தினாலாவது பண்டங்களை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை ஒன்றை அமைத்தல்
148. மக்கள் நுகரும் உணவுப்பொருட்கள் அனைத்தும் களஞ்சியப்படுத்தல்
149. தேசிய அல்லது அந்நிய நாட்டு மருந்து வகைகளை உற்பத்தி செய்தல்

(ஆ) (1) இலங்கைச் சுற்றுலாச் சபையில் பதிவு செய்தவர்கள் அந்த சபையின் அனுமதி பெற்றோர் அல்லது ஹோட்டல் ஊடாக தங்குமிடத்தின் ஊடாக சிற்றுண்டிச்சாலை ஊடாக குறித்த ஹோட்டல், தங்குமிடம், சிற்றுண்டிச்சாலை என்பவற்றின் கடந்த வருடம் பெற்றுக் கொண்டவற்றின் நூற்றுக்கு பூச்சியம் தசம் ஐந்து சத வீத (0.5%) அனுமதிப்பத்திரக் கட்டணம் 2019, சனவரி மாம் 01 ஆந் திகதி முதல் அறவிடப்படும்.

**அட்டவணை இல. 02**

247 (அ) பிரிவின் கீழ் உள்ள வியாபார வரி

(அ)

| இருப்பிடத்தின் வருடாந்த பெறுமதி | அனுமதிப்பத்திர அறவீடு ரூபா சதம் |
|---|---|
| 1 முதல் 20,000.00 வரை | ரூ. 1,000.00 |
| 20,001.00 முதல் 30,000.00 வரை | ரூ. 2,000.00 |
| 30,001.00 முதல் 40,000.00 வரை | ரூ. 3,000.00 |
| 40,001.00 முதல் 50,000.00 வரை | ரூ. 4,000.00 |
| 50,001.00 இலிருந்து அதற்கு மேல் | ரூ. 5,000.00 |

(ஆ) வேலைத்தளங்கள் தொடர்பான பட்டியல்
1. மின்சார உபகரணங்கள் புதுப்பித்தல் மற்றும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
2. காரியாலயப்பொருட்களை களஞ்சியப்படுத்தல் /அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
3. உபயோகப்படுத்தப்பட்ட மற்றும் /அல்லது புதிய மோட்டார் வாகனங்களை தருவித்தல் மற்றும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
4. புதிய அல்லது பாவித்த மோட்டார் வாகனத்தின் மேலதிக பாகங்களை விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
5. குளிர்சாதனங்கள் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
6. கண்ணாடிப்பொருட்களை விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
7. தொலைக்காட்சி பெட்டிகளை தருவித்தல் மற்றும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
8. ஆயுர்வேத மருந்துகளை விற்பனை செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையத்தை நடாத்துதல்
9. அனுமதி பெற்ற மதுபானங்கள் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
10. பிஸ்கட் அல்லது தகரத்திலடைக்கப்பட்ட உணவுப்பொருட்களை விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
11. புகைப்பட நிலையத்தை நடாத்துதல்
12. துணிகள் விற்பனை செய்தல் மற்றும் அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையத்தை நடாத்துதல்

13. பொருட்களை கண்காட்சிப்படுத்தும் நிலையத்தை நடாத்துதல்
14. துவிச்சக்கர வண்டிகள் விற்பனை செய்தல் மற்றும் அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையத்தை நடாத்துதல்
15. மோட்டார் சைக்கிள்கள் மற்றும் அல்லது ஸ்கூட்டர் விற்பனை செய்யும் நிலையத்தை நடத்துதல்
16. சீனச்சட்டி பொருட்களை விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
17. பாதணிகள் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
18. வாயு உபகரணப்பொருட்களை விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
19. மீன் பிடிக்கும் வலைகள் உற்பத்தி செய்தல் மற்றும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
20. சவர்க்காரம் உற்பத்தி செய்யும் நிலையத்தை நடாத்துதல்
21. பலவித பொருட்களை கப்பிலில் ஏற்றும் நியைத்தை நடாத்துதல்
22. துணிகளில் அச்சுப்பதிக்கும் நிலையத்தை நடாத்துதல்
23. மாணிக்கக்கல் மற்றும் அல்லது வைரங்கள் வெட்டுதல் மற்றும் பயிற்சி வகுப்புக்கள் நடத்தும் நிலையத்தை நடாத்துதல்'
24. அகற்றப்பட்ட நூல்களை விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
25. உணவுப்பொருட்கள் அல்லது இதர நுகரும் பொருட்களை ஏற்றுமதி செய்தல்/அல்லது இறக்குமதி செய்யும் நிலையத்தை நடாத்துதல்
26. பாதுகாப்புச் சேவையை வழங்கும் நலையத்தை நடாத்துதல்
27. ஒலி நாடா பதிவு செய்யும் மற்றும் அல்லது விற்பனை செய்யும் தலையத்தை நடாத்துதல்
28. தையல் இயந்திரங்களை தருவித்தல் மற்றும் அல்லது விற்பனை செய்தல் அல்லது புதுப்பித்தல் செய்யும் நிலையத்தை நடாத்துதல்
29. கணினி இயந்திரங்களை தருவித்தல் மற்றும் அல்லது விற்பனை செய்தல் அல்லது புதுப்பித்தல் செய்யும் நிலையத்தை நடாத்துதல்
30. நடமாடும் அல்லது நிலையான சொத்துக்கள் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
31. மூக்குக் கண்ணாடி உற்பத்தி செய்யும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
32. விளக்கு மூடிகள் உற்பத்தி செய்யும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
33. இரும்புப்பொருட்கள் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
34. மாணிக்கக்கல் மற்றும் வைரங்கள் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
35. தும்புக்கயிறுகள் மொத்தமாக களஞ்சியப்படுத்துதல் மற்றும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
36. மெழுகுதிரிகள் களஞ்சியப்படுத்தும் மற்றும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
37. ஒலி பெருக்கி இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல் மற்றும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
38. மின் உற்பத்தி இயந்திரங்களை வாடகைக்கு வழங்கல் மற்றும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
39. புதிய ரயர்கள், டியுப்கள் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
40. சிகரெட் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
41. சிகரெட் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
42. தைத்த ஆடைகளை விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
43. வர்த்தக விடயங்கள் தொடர்பான நிலையத்தை நடாத்துதல்
44. கடிகாரங்கள் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
45. விதை வர்க்கங்களை மற்றும் அல்லது கன்றுகளை விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
46. விமான சேவை காரியாலயத்தை நடாத்துதல்.
47. உல்லாச பயன சேவை நிறுவனத்தை நடாத்துதல்
48. வெளிநாட்டு தொழில்கள் வழங்கும் முகவர் நிலையத்தை நடாத்துதல்
49. கன்டெயினர் உற்பத்தி செய்தல் மற்றும் அல்லது விற்பனை செய்யும் அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையத்தை நடாத்துதல்
50. தொலைக்காட்சி இயந்திரங்கள் அல்லது வானொலிப் பெட்டி இயந்திரங்கள் புதுப்பித்தல் நிலையத்தை நடாத்துதல்
51. அன்புடன் வளர்க்கும் வளர்ப்பு மீன்கள் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
52. விசேட வைத்திய சேவை நிலையத்தை நடாத்துதல்
53. முகவர் (ஏஜன்சி) தபால் சேவை நிலையத்தை நடாத்துதல்
54. உள்ளக செய்தி பரிமாற்ற உபகரணங்களை விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
55. ஆயுர்வேத மருந்துகள் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
56. சமையலறை உபகரணங்கள் களஞ்சியப்படுத்தல் அல்லது கண்காட்சிப்படுத்தல் மற்றும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
57. புகைப்படங்கள் பிரதி செய்தல் மற்றும் அச்சுப்பதிப்பு நிலையத்தை நடாத்துதல்
58. சகாதார உபகரணங்களை மற்றும் /அல்லது சலவைக்கற்களை விற்பனை செய்தல்.

59. வெதுப்பகத்திற்கு அவசியமான பொருட்களை விற்பனைசெய்யும் நிலையத்தை நடாத்துதல்
60. எழுதுபொருட்கள் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
61. நீர்க்குழாய் மற்றும் துணைப்பொருட்கள் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
62. எழுத்து வடிக்கும் வியாபார நிலையத்தை நடாத்துதல்
63. குளிர்பானங்களை விற்பனை செய்தல் மற்றும் அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையத்தை நடாத்துதல்
64. விற்பனை செய்வதற்காக விற்பனை பொருட்களை களஞ்சியப்படுத்தல் மற்றும் அல்லது நிலையத்தை நடாத்துதல்
65. இரும்புத்தகடுகள் மற்றும் அலுமினிய தகடுகள் ஆகியவற்றினால் செய்யப்படும் வேலைத்தளத்தை நடாத்துதல்
66. கம்பளங்கள் மற்றும் போமிகா சீட்டுக்கள் விற்பனை செய்தல் மற்றும் அல்லது களஞ்சியப்படுத்தல்
67. மீன்பிடி பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையத்தை நடாத்துதல்
68. கேக் தயாரித்தலுக்கான அவசிய பொருட்களை விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
69. கறுப்புக்கற்களினால் ஆன சிலை மற்றும் அல்லது (ப்ளோ டைல்ஸ்) எலவைக்கற்களை உற்பத்தி செய்யும் நிலையத்தை நடாத்துதல்
70. ஆகாய விமான உதிரிப்பாகங்கள், விற்பனை செய்தல் மற்றும் அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையத்தை நடாத்துதல்
71. பீங்கான் சாமான்கள் விற்பனை செய்தல் மற்றும் அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையத்தை நடாத்துதல்
72. பரிசுப்பொட்களை விற்பனை செய்தல் மற்றும் அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையத்தை நடாத்துதல்
73. உணவுப்பொருட்கள் மற்றும் பலசரக்கு சாமான்கள் விற்பனை செய்தல் மற்றும் அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையத்தை நடாத்துதல்
74. வர்த்தக நடவடிக்கைக்காக நிறுவனத்தை அல்லது காரியாலயத்தை நடாத்துதல்
75. புகையிலை களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
76. தேசிய மற்றும் அல்லது அந்நியநாட்டு ஏற்றுமதி அல்லது இறக்குமதிப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையத்தை நடத்துதல்
77. அலங்காரப் பொருட்கள் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
78. கொன்கிரிட் பொருட்கள் உற்பத்தி செய்யும் நிலையத்தை நடாத்துதல்
79. கடதாசி பைகளை உற்பத்தி செய்தல் மற்றும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
80. நூதனப்பொருட்கள் விற்பனை செய்தல் மற்றும் அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையத்தை நடாத்துதல்
81. சில்லறை விற்பனை நிலையத்தை நடாத்துதல் (குரோசரி)
82. சாப்புக்கடை சாமான்கள் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
83. போட்டோ பிரதி பண்ணும் நிலையத்தை நடாத்துதல்
84. கை இயந்திரத்தினால் உற்பத்தி செய்யும் துணி விற்பனை நிலையத்தை நடாத்துதல்
85. புத்தகங்கள் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
86. விசித்திர பொருட்கள் விற்பனை செய்தல் மற்றும் அல்லது அலங்காரப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
87. வீடியோ, கசட் நாடா விற்பனை செய்யும் நிலையத்ததை நடாத்துதல்
88. புத்தகங்கள் கட்டும் நிலையத்தை நடாத்துதல்
89. தராசுகளை புதுப்பிக்கும் நிலையத்தை நடாத்துதல்
90. சங்கீதப்பொருட்களை விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
91. வெற்றுப்பீப்பாய்களை களஞ்சியப்படுத்தும் மற்றும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
92. திருமண அல்லது மரண நடவடிக்கான அவசியமான பொருட்களை உற்பத்தி செய்தல் அல்லது விற்பனை செய்தல் அல்லது வாடகைக்கு வழங்கும் நிலையத்தை நடாத்துல்
93. முட்டை விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
94. நினைவுச் சின்னங்களை உற்பத்தி செய்தல் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
95. படங்கள் பிரரேம் பண்ணும் நிலையத்தை நடாத்துதல்
96. விளையாட்டுப் பொருட்கள் களஞ்சியப்படுத்தும் மற்றும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
97. மலர்சாலையை விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
98. விளம்பரங்களை கைகளினால் தயாரிக்கும் நிலையத்தை நடாத்துதல்
99. விவசாய உபகரணங்களை தயாரித்தல் மற்றும் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
100. தொலைபேசி தொலைநகல் செய்தி தொடர்பாடல் நிலையத்தை நடாத்துதல்
101. வைத்திய உபகரணங்கள் ஏற்றுமதி செய்தல் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
102. அப்பளம் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
103. தேங்காய் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
104. பால் உணவுகள் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
105. கடலை வர்க்கங்கள் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
106. துவிச்சக்கர வண்டி புதுப்பித்தல் நிலையத்தை நடாத்துதல்

107. மட்பாண்டங்கள் மற்றும் அல்லது தும்புப்பொருட்கள் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல் (சுயதொழில் தவிர்த்து)
108. பழ வர்க்கங்கள் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல் (சுயதொழில் தவிர்த்து)
109. கடிகாரங்கள் புதுப்பிக்கும் நிலையத்தை நடாத்துதல் (சுயதொழில் தவிர்த்து)
110. தையல் நிலையத்ததை நடாத்துதல் (சுயதொழில் தவிர்த்து)
111. மரக்கறி வகைகளை உற்பத்தி செய்யும் நிலையத்தை நடாத்துதல்
112. குடைகள் புதுப்பிக்கும் நிலையத்ததை நடாத்துதல் (சுயதொழில் தவிர்த்து)
113. மஞ்சள் களஞ்சியப்படுத்தும் நிலையத்தை மற்றும் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல் (சுயதொழில் தவிர்த்து)
114. மலர்சாடிகள் மற்றும் அல்லது பலவித கன்றுகளை விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
115. செதுக்கும் நிலையத்தை நடாத்துதல்
116. தீ அணைக்கும் பொருட்கள் மற்றும் அல்லது வாயு, பிராண வாயு உபகரணப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
117. காரியாலயப் பொருட்களை விற்பனை செய்யும் மற்றும் அல்லது திருத்தும் நிலையத்தை நடாத்துதல்
118. கணினி பயிற்சி தொடர்பான நிலையத்தை நடாத்துதல்
119. கட்டிட நிர்மாண படவரைவு நிலையத்தை நடாத்துதல்
120. சாரதி பயிற்சி வகுப்புக்களை நடாத்தும் நிலையத்தை நடாத்துதல்
121. பல் சிகிச்சை நிலையத்தை நடாத்துதல்
122. காப்புறுதி நிலையத்தை நடாத்துதல்
123. ஆலோசனை சேவையை நடாத்தும் நிலையத்தை நடாத்துதல்
124. உல்லாசப் பிரயாண வியாபார நிலையத்தை நடாத்துதல்
125. பொருட்கள் கொண்டு செல்லும் நிலையத்தை நடாத்துதல்
126. உள்ளூர், மற்றும் வெளிநாட்டு வங்கிளை நடாத்துதல்
127. காப்புறுதி நிறுவன நிலையத்தை நடாத்துதல்
128. இயந்திர உபகரணங்களை விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
129. ஆசனங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்யும் நிலையத்தை நடாத்துதல்
130. கண்ணாடி மற்றும் கட்டிட கண்ணாடிகள் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
131. தோல் தொடர்பான பொருட்கள் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
132. பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
133. வாசனைத்திரவியங்கள் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
134. பாவித்த ரயர்கள், டியுப்புக்ள் மற்றும் நிரப்பிய டயர்கள் களஞ்சியப்படுத்தம் மற்றும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
135. இரசாயனப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
136. கணினி மூலமாக அச்சு, பதிக்கும் நிலையத்தை நடாத்துதல்
137. அலுமினியப் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
138. கட்டிடப் பொருட்கள் விறப்னை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
139. அறுக்கும் பலகைகள் களஞ்சியப்படுத்தும் மற்றும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
140. மட்பாண்டங்கள் உற்பத்தி மற்றும் அல்லது களஞ்சியப்பத்தும் மற்றும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
141. பாண் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
142. பருத்தித் துணி உற்பத்தி செய்யும் மற்றும் அல்லது விற்பனை செய்யும் மற்றும் அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையத்தை நடாத்துதல்
143. வாகன சக்கரங்கள் பொருத்தும் நிலையத்தை நடாத்துதல்
144. குடை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
145. நூல் உற்பத்தி செய்தல் மற்றும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
146. தேயிலைத் தூள் களஞ்சியப்படுத்தல் மற்றும் அல்லது பொதி செய்தல் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
147. மரத் தளபாடங்கள். விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
148. தனியார் கல்வி நிலையத்தை நடாத்துதல்
149. பிளாஸ்டிக் பொருள் மற்றும் பைபர் கிளாஸ் பொருட்கள் உற்பத்தி செய்தல் மற்றும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
149. பிளாஸ்டிக் பொருள் மற்றும் பைபர் கிளாஸ் பொருட்கள் உற்பத்தி செய்தல் மற்றும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
150. தனியார் வைத்தியசாலை அல்லது சிகிச்சை நிலையங்கள் நடாத்துதல்
151. லொறி மேல் பாகங்கள் பொருத்தும் மற்றும் இதர வாகன மேல் பாகங்கள் பொருத்தும் நிலையத்தை நடாத்ததல்
152. வினாகிரி உற்பத்தி செய்தல் மற்றும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
153. குளிரூட்டப்பட்ட பழ பானங்கள் உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்

154. வைத்திய பரிசோதனை நிலையத்தை நடாத்துதல்
155. தீ ஆயுதங்கள் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
156. இரும்புக் கம்பிகளினால் செய்யப்பட்ட பல வித உபகரணங்களை விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
157. பல்வித வாசனைப் பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் அல்லது களஞ்சியப்படுத்தல் மற்றும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
158. பிளாஸ்டிக் போன்றவற்றை உபயோகித்து விளையாட்டுப் பொருட்கள், பலவித பொருட்கள் அல்லது வேறு பல்விதமானவை உற்பத்தி செய்தல் மற்றும் அல்லது செய்யும் நிலையத்தை நடாத்துதல்
159. இரசாயனப் பொருட்கள் மற்றும் அல்லது இரசாயன உபகரணங்களை உற்பத்தி செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் மற்றும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
160. விழாக்கள் தொடர்பான உணவு வகைகளை மற்றும் குளிர்பான உற்பத்தி செய்தல் மற்றும் வழங்கும் நிலையத்தை நடாத்துதல்
161. வெட்டப்பட்ட தேங்காய் விற்பனை செய்தல் மற்றும் அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையத்தை நடாத்துதல்
162. எண்ணெய் இன வர்க்கங்களை விற்பனை செய்தல் மற்றும் அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையத்தை நடாத்துதல்
163. பூசை சாமான்களை விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
164. மணல் மற்றும் அல்லது கருங்கற்கள் களஞ்சியப்படுத்தும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
165. உப்பு கிலோகிராம் 1, 000 இற்கு அதிகமாக களஞ்சியப்படுத்தும் நிலையத்தை நடாத்துதல்
166. பால் சபை நிலையத்தை நடாத்துதல்
167. மோட்டார் கார் மேல் பாகம் மற்றும் ஆசனங்கள் தயாரிக்கும் நிலையத்தை நடாத்துதல்
168. ஊதுபத்தி உற்பத்தி செய்தல் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்.
169. தேன் பாகு, தென்னம் பாகு, கித்துல் பாகு, வேறு இதர பாகுகள் தயாரித்தல்
170. தொழில் தளத்தை நடாத்துதல்
171. இனிப்புப் பண்டங்களை விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
172. இறப்பர் முத்திரை மற்றும் அல்லது அச்சு உற்பத்தி செய்யும் நிலையத்தை நடாத்துதல்
173. உலோகம் மற்றும் கெல்வனைஸ் இரும்புத் தகடுகளினால் பல்விதப் பொருட்களை உற்பத்தி செய்யும் நிலையத்தை நடாத்துதல்
174. நூடில்ஸ் தயாரித்தல் மற்றும் அல்லது விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
175. கொல்லன் பட்டறை மற்றும் அல்லது அது போன்றவைகளை விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல் (சுயதொழில் தவிர்த்து)
176. தங்க நகைகள் தயாரித்தல் மற்றும் அல்லது கண்காட்சிப்படுத்தும் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
177. வாகன தரிப்பிடத்தை நடாத்துதல்
178. கணினி மற்றும் தொலைபேசி ஊடாக அந்நிய நாட்டு சேவை மற்றும் தொலைநகல் சேவை உட்பட்ட தொடர்பாடல் நிலையத்தை நடாத்துதல்
179. போத்தல்களில் இடப்பட்ட தண்ணீர் விற்பனை செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையத்தை நடாத்துதல்
180. வரவேற்பு மண்டபங்கள் வாடகைக்கு வழங்கும் நிலையத்தை நடாத்துதல்
181. வாகனங்கள் வாடகைக்கு வழங்கும் நிலையத்தை நடாத்துதல்
182. வாகனங்கள் நிறுக்கும் நிலையத்தை நடாத்துதல்
183. பொருட்களை பயனற்றதாக்கும் நிலையத்தை நடாத்துதல்
184. ஐஸ் கிறீம் விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
185. செயற்கை மலர்களை விற்பனை செய்யும் நிலையத்தை நடாத்துதல்
186. மாநகர சபை திட்டம் 217 " அ" அல்லது 247 "ஆ" எனும் பிரிவின் கீழ் அனுமதிப்பத்திர அறவீடு அல்லது விற்பனை வியாபார வரி பெறாத மேற்கூறப்படாத வியாபார நிலையத்தை நடாத்துதல்
187. மெய்வல்லுனர் பயிற்சி நிலையத்தை நடாத்துதல்
188. கணினி திருத்தும் உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் இடமொன்றை நடாத்திச் செல்லல்
189. கையடக்கத் தொலைபெசி திருத்தும் மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் இடமொன்றை நடாத்திச் செல்லல்
190. இறப்பர் முத்திரை மற்றும் இரும்பு அச்சுகள் தயாரிக்கும் மற்றும் விற்பனை இடமொன்றை நடாத்திச் செல்லல்
191. கப்பல் படை விடயங்களுக்காக அலுவலகமொன்றை நடாத்திச் செல்லல்
192. மின்சாரக் கட்டணம் அறவிடும் நிலையத்தை நடாத்துதல்
193. புதிய இரும்பு விற்பனை நிலையத்தை அல்லது களஞ்சிப்படுத்தல் நிலையத்தை நடாத்திச் செல்லல்
194. போத்தலில் அடைக்கப்பட்ட வழுக்கு எண்ணெய் செய்யும் நிலையத்தை நடாத்திச் செல்லல்
195. வெளிநாட்டு நாணயமாற்று நிலையத்தை நடாத்திச் செல்லல்

## *அட்டவணை இல.- 03*

*247 " இ" பிரிவின் கீழ் விதிக்கப்படுள்ள வர்த்தக வியாபாரம் தொடர்பான வரி*

*அ) வரி அட்டவணை:*

| *வர்த்தக வியாபாரத்தின் மூலம் கடந்த வருடத்தில் பெற்ற இலாபம்* | *செலுத்தவேண்டிய வரி ரூபா சதம்* |
|---|---|
| *1. ரூபா 6,000.00 ஐ அதிகாரிக்காத சந்தர்ப்பங்களின் போது* | *இல்லை* |
| *2. ரூபா 6,000.00 ஐ அதிகரிக்கின்ற போதிலும் ரூபா 12,000.00 ஐ அதிகரிக்காத சந்தர்ப்பத்தில்* | *90.00* |
| *3. ரூபா 12,000.00 ஐ அதிகரிக்கின்ற போதிலும் ரூபா 18,750.00 ஐ அதிகரிக்காத சந்தர்ப்பத்தில்* | *180.00* |
| *4. ரூபா18,750.00 ஐ அதிகரிக்கின்ற ஆனால் ரூபா 75,000.00 ஐ அதிகரிக்காத சந்தர்ப்பத்தில்* | *360.00* |
| *5. ரூபா 75,000.00 ஐ அதிகரிக்கின்ற ஆனால் ரூபா 1,50,000.00 ஐ அதிகரிக்காத சந்தர்ப்பத்தில்* | *1,200.00* |
| *6. ரூபா 150000.00 ஐ அதிகரிக்கின்ற சந்தர்ப்பங்களின் போது* | *3,000.00* |

*(ஆ) வரி விதிக்கப்பட்டுள்ள வர்த்தக வியாபாரங்கள்:-*

*1. கமிசன் முகவர்கள் (ஏஜன்சிகள்)*
*2. கட்டிட ஒப்பந்தக்காரர்கள்*
*3. பணத்தைக் கடனாக வழங்குபவர்கள்*
*4. தரகர்கள்*
*5. ஏல விற்பனையாளர்கள்*
*6. நிதி முதவீட்டாளர்கள்*
*7. தங்க நகைகள் அடகு பிடிப்பவர்கள்*
*8. ஆலோசகர்*

## *அட்டவணை - இல. 04*

*1985 ஆம் ஆண்டின 20 ஆம் இலக்க கொண்ட மாநகர சபை மற்றும் நகர சபை (திருத்தச்) சட்டத்தின் இறுதியாகத் திருத்தப்பட்ட மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அதிகாரம்) 247 " இ" பிரிவின் கீழ் காணிகள் விற்பனை செய்தல் தொடர்பான வரி பெற்றுக் கொள்ளுதல்.*

*கொழும்ப மாநகர சபை நிர்வாகப் பிரிவினுள் அமைந்துள்ள ஏதும் காணியொன்றை ஏல விற்பனையாளர் ஒருவரினால் அல்லதுஅவரது ஊழியரினால் அல்லது பிரதிநிதியினால் அல்லது பிரதான ஏலத்தில் அல்லது வேறு வழியில் விற்பனை செய்யப்படின் அவ்விற்பனையினால் பெறப்படும் தொகையின் நூற்றுக்கு ஒரு வீதம் (1%) விற்பனையாளரினால் அல்லது ஏல விற்பனையாளரினால் அல்லது தரகரினால் அல்லது அவரது ஊழியரினால் அல்லது பிரதிநிதியினால் செலுத்தப்பட வேண்டும்.*

***குறிப்பு** :- 2019 ஆம் ஆண்டுக்காக மேற்குறிப்பிடப்பட்ட வியாபார வரி மற்றும் அனுமதிப்பத்திர அறவீடு அறவிடும் போது கீழ்க்காணும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்:*

*1. ஒரு நபரினால் ஒரு வரிமதிப்பீட்டு இலக்கத்தின் கீழ் ஒரு மாடி அல்லது மாடிகள் பல உள்ள கட்டிடத்தின் அல்லது கட்டிடங்கள் பலவற்றில் ஒரே வகையான வியாபாரம் நடத்தப்படுமானால் வருடாந்த வரி கணக்கிடுவதற்காக மட்டுமே அந்தந்த இடத்தை கவனத்திற்கொண்டு அனுமதிப்பத்திர அல்லது வியாபார வரி அறவிடப்படும்.*

*2. ஒரு நபரினால் ஒரு வரிமதிப்பீட்டு இலக்கத்தின் கீழ் ஒரு மாடி அல்லது மாடிகள் பல உள்ள கட்டிடத்தின் அல்லது கட்டிடங்கள் பலவற்றில் பல்வித வகையான வியாபாரம் நடத்தப்படுமானால் அந்த வியாபாரம் அல்லது கைத்தொழில் ஈடுபத்தப்பட்டுள்ள நில அளவின் பிரகாரம் வருடாந்த வரிப் பகுதியாகப் பிரிக்கப்பட்டு அனுமதிப்பபத்திர அல்லது வியாபார வரி அறவிடப்படும்.*

*3. ஒரு நபரினால் ஒரே வகையான வியபாரம் நடாத்தப்படும் கட்டிடத்தில் வரிமதிப்பீட்டு இலக்கம் பலவற்றோடு காணப்படும் கட்டிடமாயின் அது ஒரு வரி மதிப்பீட்டு இலக்கத்தில் நடாத்தப்படும் வியபாரமாக கவனத்தில் கொள்ளப்பட்டு வியாபார வரி அல்லது அனுமதிப்பத்திர அறவீடு என அறவிடப்படும். அவ்வாறாயினும் அவ்விடத்தில் வருடாந்த அனுமதிப்பத்திர அறவீடு அல்லது வியாபாரவரி ஆக்ககூடியதாக ரூபா 5, 000.00 இற்குக் குறைவாக இருப்பின் அத்தகைய சந்தர்ப்பத்தில் அதற்கான*

குறிப்பிடப்பட்ட கட்டிடங்கள் அனைத்து வரி மதிப்பீட்டு இலக்கங்களின் வருடாந்தப் பெறுமதி ஒருங்கிணைக்கப்பட்டு கிடைக்கப்பெறும் மொத்த வரிமதிப்பீட்டின் பிரகாரம் அனுமதிப் பத்திரக் கட்டணம் அல்லது வியாபார வரி தீர்மானிக்கப்படும்.

4. ஒரு நபரினால் வரிமதிப்பீட்டு இலக்கங்கள் பலவற்றில் பல்வித வியாபாரங்களை நடாத்தும் சந்தர்ப்பத்தில் அந்த வரி மதிப்பீட்டு இலக்கங்கள் ஒன்றாக அமைந்திருக்குமாயின் தமது ஒவ்வொரு வியாபாரம் அல்லது கைத்தொழில் நிலையத்திற்காக வெவ்வேறான அனுமதிப்பத்திரக் கட்டணம் அல்லது வியாபார வரி அறவிடப்படும்.

5. ஒரு வரி மதிப்பீட்டு இலக்கத்தின் கீழ் பல நபர்களினால் வியாபாரங்கள் நடாத்தப்படுமானால் ஒவ்வொரு வியாபாரத்திற்காகவும் பயன்படுத்தப்படும் நிலத்தின் அளவிற்கு ஏற்ப ஒவ்வொரு வியாபாரத்திற்காகவும் ஈடுபடுத்தப்படும் நில அளவிற்கு ஏற்ப அந்தக் கட்டிடத்தின் வருடாந்த மதிப்பீட்டுப் பெறுமதி பிரிக்கப்பட்டு அனுமதிப்பத்திரக் கட்டணம் அல்லது வியாபார வரி தனித்தனியாக அறவிடப்படும்

01- 474

---

**உக்குவளை பிரதேச சபை**

*நியமன துணை விதகள் - 2019*

**1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற சபைகளுக்கான நியமமான துணை விதிகளுக்கான சட்ட விதிகள்**

216 ஆம் விதி (commissioning) மற்றும் 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற (நியமமான துணை விதிகள்) சட்டத்தின் 3 வது பிரிவின் (1) வது உப பிரிவில் விதிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானத்தை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

டீ. டபிள்யூ. எம். சேத்தியரத்ன,
தலைவர்,
உக்குவளை பிரதேச சபை.

பிரதேச சபை,
உக்குவளை,
2018, ஒற்றோபர் 25.

**தீர்மானம்**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சபைகளின் (உசாத்துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (அ) பந்தியுடன் இணைந்து வாசிக்கப்பட வேண்டிய 261 ஆவது விதியான 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் (நியமமான துணை விதிகளின்) சட்டத்தின் (2) வது பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விவகார அமைச்சருக்கு விதிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப, மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விவகார அமைச்சர் மூலம் தயாரிக்கப்பட்ட 2016.02.23 ஆந் திகதிய 1955/7 ஆம் இலக்கம் இலங்கைச் சனநாயகச் சோசலிச குடியரசின் வர்த்தமானியின் IV (அ) பகுதியின் பிரசுரிக்கப்பட்டதும் மத்திய மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டு 2017.05.05 ஆந் திகதிய 2017/42 ஆம் இலக்கம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வரத்தமானியின் IV (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் பிரகடனப்படுத்தப்பட்ட கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள துணை விதிகள்.

1. பிரதேச சபை எல்லைக்குள் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான பட வரைபுகளை பரீட்சித்தல் மற்றும் அவற்றுக்கான கட்டணங்கள் அறிவிடுவது பற்றிய துணை விதி
2. சேவைகளுக்கான கட்டணங்களை அறவிடுவது பற்றிய துணை விதி
3. முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைப்பது பற்றிய துணை விதி
4. பொது நூலகம் பற்றிய துணை விதி
5. கால்நடை வியாபாரம் பற்றிய துணை விதி
6. தகனச்சாலை பற்றிய துணை விதி

7. வரி அறவிடல் பற்றிய விடயங்களுக்கான வார அறிக்கைகள் மற்றும் தகவல்களைப் பெற்றுக் கொடுப்பது பற்றிய துணை விதி
8. ஆபத்தான வியாபாரங்கள் இடையூறு செய்யக்கூடிய வியாபாரங்கள் பற்றிய துணை விதி
9. மீன் விற்பனை பற்றிய துணை விதி
10. பிரதேச சபையில் சந்தைகள் பற்றிய துணை விதி
11. அலங்காரங்களை நெறிப்படுத்தல் மற்றும் அவற்றை நிர்வகித்தல் பற்றிய துணை விதி
12. பொது மலசலகூடங்கள் பாவிப்பதை முறைப்படுத்தல் பற்றிய துணை விதி
13. விளம்பரங்பளை அறிவித்தல் பற்றிய துணை விதி
14. வாடகை வாகனங்களை நிறுத்தி வைத்தல் பற்றிய துணை விதி
15. இறைச்சி விற்பனை பற்றிய துணை விதி
16. தனியார் மேலதிக வகுப்புக்களை நடத்தும் நிறுவனங்கள் பற்றிய துணை விதி
17. மாடறுக்கும் இடம் மற்றிய துணை விதி

இந்த தீர்மானம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வரத்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும். அதற்கு முந்திய நாள் நடு இரவில் இருந்து இதற்கு முன் மேலே குறிப்பிடுவதற்கு முற்பட்ட துணை விதிகள் பற்றி உக்குவளை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் நிறைவேற்றப்பட்ட அனைத்து துணை விதிகளையும் இரத்து செய்வதற்கும் மற்றும் 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 09 (3) உப பிரிவின் படி என் மீது விதிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி 2018.10.25 ஆந் திகதி சபையின் 5.1.2 முடிவு செய்யப்பட்ட இலக்கத்தின் கீழ் இத்தால் தீர்மானிக்கிறேன்.

01- 752

---

**மாத்தறை மாநகரசபை**

*1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சங்கங்களின் உரிதிப்பத்திரம் வழங்கும் சட்டம்*

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் மூலம் அவர்களின் பெயர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள சங்கங்களை, அதில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் நடாத்திச் செல்வதற்கு 2019 ஆம் ஆண்டிற்கான உரிதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்துள்ளார்கள் என்பதை 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சங்கங்களுக்கான உரிதிப்பத்திரம் வழங்கும் சட்டத்தின் (6) ஆம் பிரிவின் "ஆ" அத்தியாயத்தின் கீழ் அறியத்தருகின்றேன்.

இந்த சங்கங்களுக்கு அருகாமையிலே, குறிப்பிடப்பட்ட இடங்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட இடங்களிலே வசியும் ஒரு நபரினால் விளையாட்டு சங்கங்களுக்கான உறுதிப்பத்திரம் வழங்குவதற்கு மறுப்புக்கள் தெரிவிக்கப்படுமாயின் இந்த அறிவித்தல் கொடுக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு நான்கு கிழமைக்குள் தகுந்த மறுப்புக் காரணங்கள் காட்டி எனக்கு எழுத்து மூலம் பிரதிகள் இரண்டு தருமாறு இத்துடன் அறியத்தருகிறேன்.

சேனக பல்லியகுருகே,
மாநகர சபை ஆணையாளர்,
உக்குவளை பிரதேச சபை.

பிரதேச சபை,
உக்குவளை,
2018, ஒற்றோபர் 25.

**அட்டவணை**

| விண்ணப்பதாரியின் பெயர் | சங்கத்தலைவர் முகாமையாளர் செயலாளர் | சங்கத்தின் பெயர் | சங்கம் நடத்தப்படும் இடம் |
|---|---|---|---|
| 1. கே. டீ. ஸ்டெம்போ | செயலாளர் | ப்லுமூன் விளையாட்டு சங்கம் | இல. 241C, காலி வீதி, பபுரன |

01-769

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.